பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
## Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

moving money for better
உலகெங்குமுள்ள உறவுகளுக்கு தரித தபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com
E-93711

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 மாசி 23 வெள்ளிக்கிழமை (06.03.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 78

# அரசியல் கைதிகள் என யாரும் இல்லை
# யுத்த பூமி என்றால் காணாமல் போனவர்கள் இருப்பார்கள்

### ஊடக பிரதானிகளிடம் ஜனாதிபதி கோட்டாபய

(கொழும்பு)

அரசியல் கைதிகள் என யாரும் இல்லை என்பதே எனது நிலைப்பாடு. யுத்த பூமி என்றால் அங்கு காணாமல் போனவர்கள் இருப்பார்கள் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஊடகங்களின் ஆசிரியர்கள், நிர்வாகிகளை நேற்று சந்தித்துப் பேசிய போது அவர் இவ்வாறு கூறியுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு கிழக்கிலுள்ள மக்களைப் பொறுத்தவரையில் அவர்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதன் ஊடாகவே அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைக்குத் தீர்வினைப் பெற்றுக்கொடுக்க முடியும்.



வடக்கு, கிழக்கு, தென் பகுதி என அனைத்துப் பகுதிகளிலும் உள்ள மக்களுக்கு சம அளவிலேயே வளப்பங்கீடுகள் வழங்கப்பட வேண்டும். பிரச்சினை 02

# சர்வதேச நீதிமன்றில் இலங்கையை முன்நிறுத்தி விசாரணை செய்ய வேண்டும்

### ஐ.நா. பிரதிநிதிகளிடம் மாவை

(யாழ்ப்பாணம்)

இலங்கையில் இறுதிப்போரின் போது நடைபெற்ற இன அழிப்பு நடவடிக்கைகள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைக்கு வழங்கப்பட்ட முறைப்பாடுகளுக்கு அமைய சர்வதேச நீதிமன்றில் இலங்கையை முன் நிறுத்தி விசாரணைகளை முன்னெடுப்பதற்கு ஐ.நா. பேரவை 23



# பட்டதாரிகளின் நியமனங்களை நிறுத்தியதில் உடன்பாடில்லை

### ஜனாதிபதி கோட்டாபய தெரிவிப்பு

(கொழும்பு)

பட்டதாரிகளை பயிலுநர்களாக அரச சேவைக்குள் இணைக்கும் நியமனங்கள் மார்ச் முதலாம் இரண்டாம் திகதிகளில் வழங்கப்பட்ட நிலையில் அவற்றை தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய இடைநிறுத்தியமை தொடர்பில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு உடன்பாடில்லை என்று ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.

பட்டதாரிகளின் பயிலுநர் நியமனத்தை தேர்தல்கள் ஆணைக்குழு ஏன் நிறுத்தியது என்று எமக்குப் புரியவில்லை என்று 23

# 6ஆயிரம் மில்லியன் ரூபாய் பெறுமதியான போதைப்பொருள்
### கடற்படையிடம் சிக்கியது



(கொழும்பு)

இலங்கையில் இருந்து சுமார் 600 கடல் மைல் (1111 கி.மீ) தொலைவில் 6000 மில்லியன் ரூபாயுக்கும் அதிக பெறுமதியுடைய சட்டவிரோத போதைப்பொருட்கள், சந்தேக நபர்களுடன் இலங்கை கடற்படையினரிடம் சிக்கிய படகுகள் நேற்று திக்கோவிட்ட துறைமுகத்திற்கு கொண்டுவரப்பட்டன.


பொலிஸ் போதைப்பொருள் பணியகம் பெற்ற உளவுத் தகவலின்படி, இலங்கை கடற்படை தனது ஆழ்கடல் கண் 23

### கூட்டமைப்பும் சுமந்திரனும்
# தமிழ் மக்களை ஏமாற்றவும் தடம் மாற்றவும் முயற்சி

### நீதியரசர் விக்னேஸ்வரன் காட்டம்

(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் சுமந்திரனும் தமிழ் மக்களைத் தடம் மாற்றும், ஏமாற்றும் கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர் என நீதியரசர் விக்னேஸ்வரன் காட்டமாக தெரிவித்துள்ளார். (23ஆம் பக்கம் பார்க்க)



### பட்டதாரிகளை அரசு ஏமாற்றியுள்ளது
# ஆட்சியமைத்தால் 3 மாதத்தில் அனைத்து பட்டதாரிகளுக்கும் நியமனம்

### சஜித் பிரேமதாச தெரிவிப்பு

(கொழும்பு)

வேலையற்ற பட்டதாரிகளை அரசாங்கம் ஏமாற்றி இருக்கின்றது. நியமனம் வழங்குவதை தேர்தல்கள் ஆணையாளர் இடைநிறுத்துவார் என தெரிந்தே அரசாங்கம் பாராளுமன்றம் கலைப்பதற்கு 23

# ஜெனிவா ஆலோசனை நாட்டின் இறைமைக்கு சவாலானது

### ஜனாதிபதி கோட்டாபய

(கொழும்பு)

ஜெனிவா யோசனை நாட்டின் இறைமைக்கு சவாலானது என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மேலும் பாதுகாப்பு படையினர் யுத்தக் குற்றங்களில் ஈடுபட்டதாக ஏற்றுக்கொண்ட முதல் சந்தர்ப்பமும் இது எனவும் குறிப்பிட்டார். (ம)

## விற்பனையாளர் தேவை

யாழ்.நகரில் இயங்கும் எமது புடைவை விற்பனை நிலையத்துக்கு புடைவை அனுபவம் உள்ள விற்பனையாளர் தேவை (பயிலுநர் விரும்பத்தக்கது) ஆண்/பெண் இருபாலாரும் தொடர்பு கொள்ளலாம். (C-9420)

**சென்னை பெசன் வேல்ட்**
69, பெரியகடை, யாழ்ப்பாணம்.

## பராமரித்தலும் சுகப்படுத்தலும்

உங்கள் வீடுகளில் வயோதிப
நோயாளர்களை வைத்து
பராமரிப்பதில் சிரமப்படுகிறீர்களா?
எங்கள் இடத்தில்
உங்கள் உறவுகள் உரிய முறையில்
பராமரிக்கப்படுவர். (2491)

**077 873 0129**

## அதிர்ஷ்ட இலாபச் சீட்டு முடிவுகள்

கிளி/பளை மத்திய கல்லூரியின் விளையாட்டு மைதானக் கொள்வனவுக்கான அதிர்ஷ்ட இலாபச்சீட்டு பழைய மாணவர் சங்கத்தினால் விற்பனை செய்யப்பட்டது. அதன் சீட்டிழுப்பு 2020.03.04ஆம் திகதி அன்று பி.ப 1.00 மணியளவில் கல்லூரியில் வைத்து கிளிநொச்சி வலயக்கல்வி அலுவலகத்தின் அனுசரணையுடன் பழைய மாணவர் சங்க அங்கத்தவர்கள் முன்னிலையில் அதிபர் தலைமையில் அதிர்ஷ்டம் பார்க்கப்பட்டது. வெற்றி பெற்ற இலக்கங்கள் பின்வருமாறு.

1ம் பரிசு - 12828 குளிர்சாதனப்பெட்டி
2ம் பரிசு - 04663 தையல் இயந்திரம்
3ம் பரிசு - 21823 32" LED தொலைக்காட்சி

ஆறுதல் பரிசாக மின்னழுத்தியைப் பெறும் இலக்கங்கள் பின்வருமாறு

- 00146
- 04918
- 00701
- 06545
- 02266
- 13367
- 02298
- 13404
- 04007
- 16343

பரிசுக்குரியவர்கள் 2020.04.04ஆம் திகதிக்கு முன்னர் அதிபருடன் தொடர்பு கொண்டு பரிசுப் பொருட்களைப் பெற்றுக் கொள்ளலாம் (C-9415)

**கிளி/பளை மத்திய கல்லூரி, பழைய மாணவர் சங்கம்**

# யுத்த பூமி...

என்பது அனைவருக்கும் உள்ளதுதான்.

வடக்கு, கிழக்கிலுள்ள சில அரசியல் வாதிகள் தங்களது அரசியல் இருப்பினைத் தக்கவைத்துக்கொள்ளும் நோக்கில் ஜெனிவா விடயம் பற்றி அதிகம் பேசி வருகின்றனர்.

பொருளாதாரப் பிரச்சினையே இங்கு அரசியல் பிரச்சினையாக மாற்றம் பெற்றுள்ளது. அதேபோன்று காணாமல் போனவர்கள் பற்றித் தெளிவாக ஆராய வேண்டியுள்ளது. இதுகுறித்து தேடிப்பார்த்ததன் பின்னரே பேச வேண்டும். இராணுவத்திலும் காணாமல்போனவர்கள் உள்ளனர். யுத்தத்தின் அடிப்படையிலேயே காணாமல்போனவர்கள் பற்றிப் பேசப்படுகின்றது.

யுத்த பூமி என்றால் அங்கு காணாமல் போனவர்கள் இருப்பார்கள். இதுகுறித்துத் தெரியாதவர்களே அதிகம் பேசுகின்றனர். தெரிந்திருந்தாலும் அவர்கள் தங்களது தேவைகளுக்காக காணாமல் போனவர்கள் பற்றிப் பேசிக்கொண்டிருக்கின்றனர்.

காணாமல் போனவர்கள் அனைத்துத் தரப்பிலும் உள்ளார்கள். நான்காயிரத்திற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் யுத்தத்தின் போது காணாமல் போயுள்ளனர். யுத்தத்தின் போது உயிரிழந்த இராணுவ வீரர்களின் சடலங்களை அடையாளம் காணமுடியாத விடத்து. அவர்களின் சடலங்களை உறவினர்களிடம் கையளிக்க முடியாது.

எனவே இவ்வாறு உயிரிழந்தவர்கள் அனைவரும் அவர்களின் உறவினர்களைப் பொறுத்தவரையில் காணாமல் போனவர்களே. கடந்த காலத்தினைப் பற்றிப் பேசுவதனால் எவ்விதப் பயனும் இல்லை. எதிர்காலம் பற்றியே இனிப் பேசவேண்டும்.

காணாமல் போனவர்கள் கனடாவிலும் இருக்கலாம். ஆகவே இதுகுறித்து நன்கு ஆராயந்ததன் பின்னரே தீர்மானம் ஒன்றினை எடுக்கமுடியும். அரசியல் கைதிகள் என யாரும இல்லை என்பதே எனது நிலைப்பாடு.

வடக்கில் உள்ள வாக்குகள் கொள்கை ரீதியானவை இல்லை. அவை இனவாதம் கொண்டவை. அரசியல் நோக்கம் கொண்டவை.

எனவே அங்கு சஜித்திற்கு வழங்கப்பட்ட வாக்குகளைத் தவிர்த்துப் பார்த்தால், கடந்த அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்ட கொள்கைகளுக்கு மக்கள் அனுமதி வழங்கவில்லை என்பது புலனாகின்றது." என்றும் அவர் கூறியுள்ளார். (ம)

## விரைவு பொதிகள் சேவை
### விசேட விலை குறைப்பு

UK-550*/=Kg

DELIVERY IN 3-5 DAYS

எமது நேரடிக்கிளைகள்

- யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • சாவகச்சேரி
- நெல்லியடி • கொடிகாமம் • திருகோணமலை
- புதுக்குடியிருப்பு • சுன்னாகம் • மானிப்பாய்
- மருதங்கேணி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை

0768226240

V2 TRAVELS (C-8785)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



**திருமதி அமிர்தலக்சினி விமலதாஸ்**

**Phd - isless university uk/eu Business university costa rica**

பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் 04.03.2020 நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் கலாநிதிப்பட்டம் பெற்ற எமது பாடசாலைக் கால ஆசிரியரும் அத்தையுமான திருமதி **அமிர்தலக்சினி விமலதாஸ்** அவர்கள் isless university uk/eu Business university costa rica பல்கலைக்கழகத்தின் கலாநிதி (phd) பட்டத்தினை பெற்றதினை பாராட்டி வாழ்த்துகிறோம்.

திருமதி துஸ்ஜந்தன் றேகா
திரு.பாஸ்கரன் பிரசாந் (லண்டன்)

(C-9421)

## 31ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பும்

மலர்வு 16 - 04 - 1937

உதிர்வு 06 - 02 - 2020



அமரர்

**வேலும்மயிலும் இராசம்மா**

கடந்த 06.02.2020 சிவபதமடைந்த எமது குடும்ப ஒளிவிளக்கு அமரர் வே.இராசம்மா அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (07.03.2020) சனிக்கிழமை காலை 5.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று அஸ்தி கீரிமலை புனித தீர்த்தக்கரையில் கரைக்கப்படும். 08.03.2020 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரண கிரியைகளிலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனைகளிலும், அதனை தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்வுகளிலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தகவல்: **வே.மணிவண்ணன்**
(ஆசிரியர், யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி)
**வே.மணிமாறன்**
(உதவி முகாமையாளர் NSB அச்சுவேலி)
**வே.மணிவர்மன்**
(ஆசிரியர், யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை)
**வே.மணிவதனன்**
(கணக்காய்வுத் திணைக்களம் கணக்காய்வு அத்தியட்சகர்)

அம்மன் கோவிலடி,
வதிரி, கரவெட்டி. (C-9418)

## மணிவிழா வாழ்த்து

ஓய்வுபெறும் திகதி
06. 03. 2020



திருமதி

**செல்வநாயகி தெய்வேந்திரமூர்த்தி**

**சேவைக்காலம்**

| | |
|---|---|
| 1990 - 1997 | கிளி/புனித அந்தோனியார் றோ.க.வித்தியாலயம் |
| 1998 - 2003 | மு/கலைமகள் வித்தியாலயம் |
| 2004 - 2010 | கிளி/கிளிநொச்சி மகா வித்தியாலயம் |
| 2011 - 2013 | வ/வவுனியா இலங்கை தமிழ்க் கலவன் பாடசாலை |
| 2014 - 2020 | கிளி/முருகானந்தா கல்லூரி |

வாழ்த்துவோர்
**கிளி/முருகானந்தா கல்லூரி சமூகம், முரசுமோட்டை**

(C-9416)

# கால அவகாசத்தை பயன்படுத்துங்கள்

# ஐ.தே.கவிலிருந்து விலகிச் சென்றவர்கள் வெற்றிபெற்ற வரலாறு இல்லை!



## சஜித் அணிக்கு ரணில் அணி எச்சரிக்கை

(கொழும்பு)

முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் சஜித்பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்திக்கு, ஐக்கிய தேசியக் கட்சியுடன் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றை மேற்கொண்டு பொதுத் தேர்தலில் போட்டியிடுவதற்கு வாய்ப்பளித்திருப்பதாக கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் வஜிரஅபேவர்த்தன தெரிவித்தார்.

ஐ.தே.கவிலிருந்து பிரிந்து சென்றவர்கள் வெற்றிபெற்றதற்கான சான்றுகள் இல்லை என்றும் இதனால் சஜித் தரப்பினர் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை கைச்சாத்திடுவார்கள் என்று தாம் எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸவின்அணுகுமுறைகளையும் அரசியல் நடவடிக்கைகளையும் பின்பற்றி செயற்பட்டிருந்தால் முரண்பாட்டு நிலைமை ஏற்பட்டிருக்காது என்றும் அனைவரும் ஒற்றுமையாக செயற்பட்டாலே வெற்றியடைய முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பாராளுமன்றம் கலைக்கப்பட்டதையடுத்து வேட்புமனு தாக்கல் திகதியும் தேர்தல் திகதியும் அறிவிக்கப்பட்டுள்ளன. இந்நிலையில் பொதுத் தேர்தலில் வெற்றியீட்டுவது தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சி பல்வேறு செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளது. இந்நிலையில் பொதுக் கூட்டணி அமைப்பது தொடர்பில் கட்சிக்குள் கலந்துரையாடப்பட்டிருந்தது.

அதற்கமைய சஜித் பிரேமதாஸவின் தலைமையில் பொதுக் கூட்டணி அமைப்பது தொடர்பில் தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தபோதிலும் அது கூட்டணியாக இல்லாமல் தனித்த கட்சியாகவே பதிவு செய்யப்பட்டுள்ளது. ஏற்கனவே அனுமதி பெற்றுள்ள கட்சி ஒன்றுக்கு புதிதாக தலைவர் மற்றும் செயலாளர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஐ.தே.க.உறுப்பினர்களும் யானை சின்னத்தில் போட்டியிடுவதையே விரும்புகின்றனர். தற்போது சஜித் தலைமையிலான தரப்பினர் தனித்து போட்டியிடுவதாக அறிவித்துள்ளனர். இவர்கள் அவ்வாறு தனித்துப் போட்டியிடுவார்கள் என்று நான் எண்ணவில்லை. இதேவேளை தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஐக்கிய தேசியக் கட்சியுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மேற்கொள்வதற்கு சஜித் தரப்பினருக்கு தற்போது சந்தர்ப்பம் வழங்கியுள்ளார்.

இதனைக் கருத்திற் கொண்டு அவர்கள் செயற்படுவார்கள் என்று நான் கருதுகின்றேன். இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து பிரிந்து சென்று தனிக்கட்சி அமைத்து செயற்பட முயற்சித்தவர்கள் கடந்த காலங்களில் வெற்றியடைந்தமைக்கான சான்றுகள் இல்லை. தற்போது பிரிந்து செல்ல முயற்சிப்பவர்கள் இந்த விடயம் தொடர்பில் சிந்தித்துச் செயற்பட வேண்டும் என மேலும் தெரிவித்தார். (இ-7)

## பட்டதாரிகளுக்கான பயிற்சி ஒத்திவைப்பு

(கொழும்பு)

அரசாங்க வேலைவாய்ப்புக்கு புதிதாக உள்வாங்கப்பட்ட பட்டதாரிகளுக்கு வழங்கப்படவிருந்த இரண்டு மாதகால தலைமைத்துவப் பயிற்சிகளை தேர்தல் பெறுபேறுகள் வெளியாகும் வரை ஒத்திவைக்குமாறு தேர்தல்கள் ஆணைக் குழுத் தலைவர் மகிந்த தேசப்பிரிய, பொதுநிர்வாக அமைச்சின் செயலாளருக்குப் பணிப்புரை விடுத்தார்.

தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் வழங்கப்பட்டு வரும் இந்நியமனங்கள் மற்றும் பயிற்சிகள் அரசியல் நிகழ்ச்சி நிரலை ஊக்குவிக்கும் வகையில் அமைந்திருப்பதாக தனக்கு எழுத்து மூலம் பல முறைப்பாடுகள் கிடைத்திருப்பதாகவும் தேர்தல்கள் ஆணைக் குழுத் தலைவர், இதுதொடர்பில் பொதுநிர்வாக அமைச்சின் செயலாளருக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் சுட்டிக்காட்டினார்.

"இப்பட்டதாரிகள் அத்தியாவசிய தேவைகளுக்காகவோ அல்லது நிலவும் வெற்றிடங்களை நிரப்புவதற்காகவோ நியமிக்கப்படவில்லை. எனினும் இந்நியமனங்கள் தொடர்பில் நாம் தொடர்ந்தும் முறைப்பாடுகளைப் பெற்று வருகின்றோம்.

கடந்த தேர்தல் காலத்திலும் இதுபோன்ற பல நியமனங்கள் இரத்துச் செய்யப்பட்டன" என்றும் தேர்தல்கள் ஆணைக் குழுத் தலைவர் தனது கடிதத்தில் சுட்டிக்காட்டினார். இதற்குப் பதிலளிக்கும் முகமாக பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் எஸ்.ஹெட்டியாராச்சி, தேர்தல்கள் ஆணையாளருக்கு அனுப்பி வைத்த கடிதத்தில், இந்நியமனங்கள் தேர்தலை இலக்கு வைத்து வழங்கவில்லையென்றும் இவை ஜனாதிபதித் தேர்தல் வாக்குறுதிகளை அடிப்படையாகக் கொண்டவை என்றும் தெரிவித்தார்.

நியமனம் வழங்கப்பட்ட பட்டதாரிகள் கட்சி அடிப்படையில் தெரிவு செய்யப்படவில்லை எனவும் குறிப்பிட்ட அவர், இவர்கள் அனைவரும் வேலையற்ற பட்டதாரிகளென்பதையும் தனது கடிதத்தில் குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும் பட்டதாரிகளுக்கு அரசாங்கத் தொழில் வழங்குவது தேர்தலை பாதிக்குமென தேர்தல்கள் ஆணைக் குழுத் தலைவர் கருதுவாராக இருந்தால், தேர்தல் முடிவடையும்வரை இந்நியமனங்களைத் தற்காலிகமாக இடைநிறுத்தி வைக்க முடியுமென்றும் அவர் அக்கடிதத்தில் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, வேலையற்ற பட்டதாரிகளை தொழிலில் அமர்த்தும் செயற்றிட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட பட்டதாரிகள் 45 ஆயிரத்து 585 பேருக்கான நியமனக் கடிதங்கள் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சால் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

நியமனங்களைப் பெற்றுக் கொள்ளும் பட்டதாரிகள் தமது பிரதேச செயலாளரிடம் நியமனக் கடிதத்தை பெற்றுக் கொண்டதாக அறிக்கையிடுவதுடன், பிரதேச செயலாளரால் தமது பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கிராம உத்தியோகத்தர் அலுவலகம் அல்லது நகர கஷ்டப் பிரதேச நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்படுவர்.

நியமனம் பெறும் பட்டதாரிகள் ஒரு வருடகால பயிற்சிக்குட்படுத்தப்படுவதுடன், முதல் குழுவுக்கு தெரிவு செய்யப்பட்ட பிரதேசங்களில் இரண்டு மாதகால தலைமைத்துவப் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளதாக முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## பொதுத் தேர்தலில் பொதுஜன பெரமுன அமோக வெற்றி

### பசில் அதீத நம்பிக்கை

(பத்தரமுல்லை)

பல்வேறு தடைகள் ஏற்பட்ட கஷ்டமான சந்தர்ப்பத்தில் புதிய அரசியல் கட்சியாக தேர்தலில் போட்டியிட்டு அமோக வெற்றியைப் பெற்ற ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன, எதிர்வரும் பொதுத் தேர்தலில் மிகப் பெரிய வெற்றியைப் பெறுவது உறுதியானது என அந்தக் கட்சியின் தேசிய அமைப்பாளர் பசில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

பத்தரமுல்லை நெலும் மாவத்தையிலுள்ள ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பிரதான அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான கூட்டணி இம்முறை தேர்தலில் 113 முதல் 120 ஆசனங்களைக் கைப்பற்றி வெற்றி பெறும் என எதிர்பார்க்கின்றோம் எனவும் பசில் தெரிவித்தார்.

தேர்தல் நடவடிக்கைகளை முன்னெடுக்கும் விதம், கட்சியின் உறுப்பினர்கள் எதிர்நோக்கும் பிரச்சினை, பிரதேச மட்டத்தில் காணப்படும் பிரச்சினைகள் தொடர்பாக இங்கு விரிவாக கலந்துரையாடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## தேசிய உரக் கொள்கை

## திருத்த சட்டத்தை வகுக்க புத்திஜீவிகள் குழு நியமனம்

### அமைச்சரவை அனுமதி

(கொழும்பு)

தேசிய உரக் கொள்கையொன்றுக்கான திருத்தச் சட்டத்தை வகுப்பதற்காக புத்திஜீவிகளைக் கொண்ட குழுவொன்றை நியமிப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியது.

1988 ஆம் ஆண்டு இல.68 இன் கீழான உரம் முறைப்படுத்தல் சட்டத்தின் மூலம் உர இறக்குமதி, தயாரிப்பு வகுத்தல் மற்றும் விநியோகப் பணிகளை முறையாக முன்னெடுப்பதற்குத் தேவையான உடனடி மானியம் வழங்கப்பட்டது.

இந்தச் சட்டம் இதுவரையில் எந்தவித திருத்தத்திற்கும் உட்படுத்தப்படவில்லை. அத்துடன் தற்போதைய சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான வகையில் இந்த சட்டத்தை புதுப்பிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டபோதிலும் முறையான தேசிய உரக் கொள்கை பிரகடனம் இல்லை என்பதால் இத்துறையில் முன்னேற்றத்திற்கு பாரிய தடையாக உள்ளமை கண்டறியப்பட்டது.

இதற்கமைவாக, தேசிய உரக் கொள்கையொன்றுக்கான திருத்தச் சட்டத்தை வகுப்பதற்காக இத்துறையில் புத்திஜீவிகளைக் கொண்ட குழுவொன்றை நியமிப்பதற்கும் இந்தக் குழுவால் தயாரிக்கப்பட்ட திருத்த சட்டமூலம் தொடர்பில் சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினரதும் பொதுமக்களினதும் கருத்துக்களைப் பெற்றுக் கொண்டு இறுதித் திருத்தச் சட்டமூலத்தை வகுப்பதற்காக மகாவலி, விவசாயம், நீர்ப்பாசனம் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சரால் சமர்ப்பிக்கப்பட்ட பரிந்துரைக்கு அமைச்சரவையால் அங்கீகாரம் வழங்கப்பட்டது. (இ-7)

## பல்கலை. அனுமதிக்கான கையேடுகள் வெளியீடு

### நன்கு ஆராய்ந்த பின் விண்ணப்பிக்குமாறு மாணவர்களுக்கு அமரதுங்க அறிவுரை

(கொழும்பு)

பல்கலைக்கழகங்களில் 2019 ஆம் கல்வியாண்டிற்கு மாணவர்களை இணைத்துக்கொள்வதற்கான கையேடுகள் நேற்று வெளியிடப்பட்டன.

புத்தக விற்பனை நிலையங்களில்மாணவர்களுக்கான கையேடுகளை பெற்றுக்கொள்ள முடியும் என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்தார்.

குறித்த கையேடுகள், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் உத்தியோகபூர்வ இணையத்திலும் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

கையேடுகளில் குறிப்பிட்டுள்ள அறிவுறுத்தல்களை நன்கு ஆராய்ந்ததன் பின்னர், பல்கலைக்கழகங்களுக்கு விண்ணப்பிக்குமாறு பேராசிரியர் சம்பத் அமரதுங்க மாணவர்களைக் கேட்டுக் கொண்டார். (இ-7)

# வடக்கின் பெரும் போர்; சென்ஜோன்ஸ் முன்னிலை





வடக்கின் பெரும் போர் என வர்ணிக்கப்படும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மற்றும் சென் ஜோன்ஸ் கல்லூரி அணிகளுக்கு இடையே யான கிரிக்கெட் போட்டி நேற்று (வியாழக்கி ழமை) காலை ஆரம்பமானது.

நூற்றாண்டு கடந்து 114 ஆவது தடவையாக இடம்பெறும் இந்தத் துடுப்பாட்டப் போட்டி நேற்றிலிருந்து நாளை வரை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெறுகிறது.

விஜயகாந்த் வியாஸ்கந்த் தலைமையில் யாழ்.மத்திய கல்லூரி அணியினரும் நாகே ந்திரராஜா சௌமியன் தலைமையில் சென். ஜோன்ஸ் கல்லூரியினரும் போட்டியில் களம் இறங்கியுள்ளனர்.

யாழ் மத்திய கல்லூரி அதிபர் எழில்வேந்தன் மற்றும் சென். ஜோன்ஸ் கல்லூரி அதிபர் துசிதரன் ஆகியோர் தலைமையில் நேற்று காலை யாழ். மத்திய கல்லூரி மைதானத் தில் வீரர்கள் அறி முகம் மற்றும் நாண யச்சுழற்சி இடம் பெற் றது.

இந்நிலையில் நேற்றைய போட்டி யில் நாணயச் சுழற்சி யில் வென்ற சென். ஜோன்ஸ் கல்லூரி அணித் தலைவர் நாகேந்திரராஜா சௌமியன் முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தார்.

அதற்கிணங்க முதலில் களமிறங்கிய யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி, ஆரம்பம் சரியாக அமைய வில்லை. 16 ஓட்டங் களைப் பெற்ற வேளை, என்.திவாகரன் 2, கே.இயலரசன் 9 என ரன்அவுட் ஆனார்கள்.

தொடர்ந்து, களமிறங்கிய சாரங்கனையும், 25 சுஞ்சயன் 20, ஏ.நிதுசன் 20, பெரிதும் எதிர் பார்க்கப்பட்ட வி.விஜஸ்காந்த் 30, ஆர்.ராஜ் கிளி ண்டனும் 18 என தம்பங்கிற்கு முடிந்ததைச் செய்து வெளியேறினர்.


57.3 ஓவர்களில் 150 ஓட்டங்களுக்கு யாழ்ப் பாணம் மத்திய கல்லூரி சுருண்டது.

பந்துவீச்சில் கே.கரிசன் 3 விக்கெட்டு களையும், யோ.விதுசன் 2 விக்கெட்டுகளையும், ஏ.அபிசேக், தெ.டினோசன் தலா 1 விக்கெட்டி னையும் வீழ்த்தினர். கே.சபேசனால் மூன்று ரன்அவுட்கள் நிகழ்த்தப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

தொடர்ந்து முதலாவது .இனிங்ஸிற்காக ஆடக் களமிறங்கிய சென்.ஜோன்ஸ் அணி, முதல் விக்கெட்டை 16 ஓட்டங்களை பெற்றபோது இழந் தது. கி.தனுஜன் 6 ஓட்டங்களுடன் வெளி யேறி னார். அணித்தலைவர் சௌமியன் 16 ஓட்டங்க ளுடன் வெளியேறினார்.

பொறுப்பாக ஆடிய, சுகேதன் 49 ஓட்ட ங்களுடன் வெளியேறினார். முதல்நாள் ஆட்ட நேரம் முடியும் போது, சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி, 30 ஓவர்களுக்கு 3 விக்கெட்களை இழந்து 118 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. களத் தில் தி.விேனாஜன் 19 ஓட்டங்களுடனும், தெ.டினோசன் 24 ஓட்டங்களுடனும் உள்ளனர்

படங்கள்:- சிவசாந்தன்



# மரண அறிவித்தல்



## செல்லையா சிவதாசன்

கச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பி டமாகவும் கொண்ட செல்லையா சிவதாசன் நேற்று (05.03.2020) வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மலர்வு 24.02.1959
உதிர்வு 05.03.2020

இல 116, கச்சேரி கிழக்கு ஒழுங்கை,
அரியாலை, யாழ்ப்பாணம்.

தகவல்:-
குடும்பத்தினர்

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் 04.03.2020 அன்று நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில்

அருட்பணி
**R.ஜினோல்ரன் விஜின்ரஸ் அடிகளார்**
**(யா/ இளவாலை ஹென்றி அரசர் கல்லூரி பகுதி தலைவரும் வளனார் விடுதிப்பணிப்பாளரும்)**

அவர்கள் முதுகல்விமாணி (M.Ed) பட்டத்தை பெற்றதை வாழ்த்துவதுடன் தொடர்ந்தும் இறைகரம் வழிநடத்த உவந்து வாழ்த்துகிறோம்.

**ஆசிரிய நண்பர்கள்**

(c-9422)

# 12 ம் ஆண்டு நினைவு நாள்

மாமனிதர்
## கிட்டினன் சிவநேசன்
(முந்நாள் நாடாளுமன்ற உறுப்பினர், தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு – 2004)
(பொது முகாமையாளர், வடமாகாண பனை தென்னை வள கூட்டுறவு நிறுவனங்களின் பேரிணையம்)



தாயின் மடியில் - 21.01.1957

தாயக மண்ணில்- 06.03.2008

தீர்ந்து போகாத கணத்தின் கடைசி நொடியிலும்
காத்திருக்கின்றோம் அப்பா உம்
நீர்த்துப் போகாத நினைவுகளோடு இங்கே
பன்னிரண்டு ஆண்டுகள் கடந்து விட்ட போதும்
உம் நினைவுகளோ தங்கி விட்டன
ஈரமாய் நெஞ்சோடு............

(C-9417)

குடும்பத்தினர்

# கொலைகாரர்களுக்கு பொதுமன்னிப்பு

# இரட்டிப்புச் சுதந்திரம் இதுதானா?

## சிறிநேசன் கேள்வி

(ஏறாவூர்)

**தமிழ் தேசிய கீதம் மறுப்பு, தமிழர் திருநாள் தடுப்பு, கொலையாளிகளுக்கு பொதுமன்னிப்பு, தமிழ் அரசியல் கைதிகளுக்கு விடுதலை இல்லை, இவைதானா இந்த ஆட்சியின் இரட்டிப்புச் சுதந்திரம்? என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஞா. சிறிநேசன் கேள்வி எழுப்பினார்.**

பொதுத்தேர்தல் விடயதானங்கள் தொடர்பில் மட்டக்களப்பிலுள்ள அவரது அலுவலகத்தில் நேற்று வியாழக்கிழமை காலை இடம்பெற்ற இளைஞர்களுக்கான கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில் அவர்மேற் கண்டவாறு கேள்வியெழுப்பினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசியல் அரங்கில் பல்வேறு கருத்துக்களைச் தெரிவிக்கின்றவர்களைவிட கொப்பளிக்கின்றவர்கள் அதிகம் காணப்படுகின்றார்கள். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் சார்ந்து நின்று முகவரியைப் பெற்றுக் கொண்டவர்கள் தற்போது வெளியில் நின்று கொண்டு விமர்சனம் செய்கின்றனர்.

இந்த ஆட்சியில் இரட்டிப்புச் சுதந்திரம் கிடைக்கும் என்று கூறியிருந்தார்கள். தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்படுவார்கள் என்ற கருத்துச் சொல்லப்பட்டது. ஆனால் 34 புலனாய்வாளர்கள் விடுதலை செய்யப்பட்டிருக்கின்றார்கள். இதுவும் சொல்லப்பட்ட இரட்டிப்புச் சுதந்திரத்தில் அடங்குமோ தெரியாது.

தமிழில் தேசிய கீதம் பாடுவது அடிப்படைவாதத்தைத் துண்டுகின்ற செயற்பாடு என்றும். காணாமல் ஆக்கப்பட்டவர்களை மண்ணுக்குள் தேடிப்பாருங்கள் என்றும் சொல்கின்றார்கள்.

மிருசுவிலில் எட்டுப் பேரைப் படுகொலை செய்து புதைக்கப்பட்ட செயலைச் செய்தமை தொடர்பில் தண்டனை வழங்கப்பட்ட கைதி ஒருவர் பொது மன்னிப்பில் விடுவிக்கப்பட்டமையும் இரட்டிப்புச் சுதந்திரத்தில் அடங்குமோ தெரியாது?

19 ஆவது திருத்தத்தை நீக்கி சர்வாதிகாரத்துடன் கூடிய ஒரு இறுக்கமான ஆட்சியைக் கொண்டுவர



இருக்கின்றார்கள். அவ்வாறு அந்த புதிய சட்டங்களுக்கு தங்கள் கைகளை உயர்த்துவதற்கும் நம்மில் இருந்து போனவர்கள் தயாராகிக் கொண்டிருக்கின்றார்கள்.

பதவிக்காகப் பறிபோனவர்கள், பதவிக்காக விற்பனைப் பொருட்களாக மாறிப் போனவர்கள் எல்லாம் இப்போது ஊடகங்களை ஆக்கிரமித்துக் கொண்டு பல்வேறுபட்ட கருத்துக்களைச் சொல்லிக் கொண்டிருக்கின்றார்கள். அவர்களிடம் நாம் கேட்பது ஒன்றே ஒன்று தான் நீங்கள் சொன்ன இரட்டிப்புச் சுதந்திரம் எங்கே? என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# வெள்ளை வான் குறித்த ஊடகச் சந்திப்பு ராஜிதவுக்கு எதிரான வழக்கு ஒத்திவைப்பு

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரட்னவுக்கு எதிராக சட்டமா அதிபர் தாக்கல் செய்த மீள் பரிசீலனை விண்ணப்பம் தொடர்பான விசாரணை ஒத்திவைக்கப்பட்டது.

வெள்ளை வான் கடத்தல் குறித்த ஊடகவியலாளர் சந்திப்பு தொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் மூன்றாவது சந்தேகநபரான முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரட்னவுக்குப் பிணை வழங்கி கொழும்பு பிரதான நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவுக்கு எதிராக சட்டமா அதிபர் தாக்கல் செய்த மீள் பரிசீலனை விண்ணப்பம் தொடர்பான விசாரணை நேற்று வியாழக்கிழமை கொழும்பு மேல் நீதிமன்றத்தில் இடம் பெற்றது.

இதன்போதே குறித்த விசாரணைகளை எதிர்வரும் 10 ஆம் திகதி வரை ஒத்திவைப்பதாக கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி மஞ்சுள திலகரத்ன உத்தரவிட்டார். விண்ணப்பம் மீதான விசாரணை நேற்று நடைபெறவிருந்த போதிலும் சட்டமா அதிபர் சார்பில் மன்றில் ஆஜராகும் பிரதி சொலிசிற்றர் ஜெனரல் சுகவீன முற்றிருப்பதால் இந்த விசாரணையை ஒத்திவைப்பதற்கு மேல் நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டார். (இ-7)

UNIVERSITY OF JAFFNA

FACULTY OF ALLIED HEALTH SCIENCES

NEW ENROLMENT FOR THE ACADEMIC YEAR

2018/2019

B.Sc. in Medical Laboratory Sciences,
B.Sc.in Nursing and Bachelor of Pharmacy

The Orientation programme for freshers who have been selected for the academic year 2018/2019 will be commenced on 25.03.2020 ,Wednesday at 9.00 am at the Hoover Auditorium, Faculty of Medicine, Adiyapatham Road,Kokuvil. All freshers are requested to participate in the orientation programme and the enrolment will be held on 24.03.2020 at 8.29 am.

Please be present.
Registrar,
University of Jaffna.

(C-9414)

## வைரவிழா

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் மத்திய கிராம அபிவிருத்திச் சங்கம், மத்திய சனசமூக நிலையம் நடத்தும் வைர விழா இன்று வெள்ளிக்கிழமை மாலை 6.30 மணியளவில் நிலைய முன்றலில் கோண்டாவில் மத்திய கிராம அபிவிருத்திச் சங்கம் மத்திய சனசமூக நிலையத் தலைவர் சி.ஆனந்தராசா தலைமையில் இடம்பெறும்.இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக பேராசிரியர் க.தேவராசா, சிறப்பு விருந்தினர்களாக தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், நல்லூர் பிரதேச சபை செயலாளர் சு.சுதர்சன், யாழ்.பல்கலைக்கழக நுண்கலைப் பீட நடனத்துறை விரிவுரையாளர் திருமதி.த.சோபனா ஆகியோர் கலந்து கொள்வர். (இ-2)

நீங்கள் ஓர் இல்லத்தரசியா?

உங்களின் குடும்பக் கனவுகளை நிறைவேற்றிக் கொள்ள மேலதிக வருவாய் ஒன்றினை பெற ஓர் அரிய சந்தர்ப்பம்

- உங்களுக்கும் உங்கள் குடும்பத்திற்கும் மேலதிக வருவாய்.
- வீட்டில் உங்கள் பொறுப்புக்களை நிறைவேற்றும் அதேவேளை நீங்கள் விரும்பிய நேரத்தில் செயற்படும் வசதி.
- நிபுணத்துவமும் தொழில் நுட்பமும் மிகச்சிறந்த தொழில் ஆற்றலை வெளிப்படுத்த உதவும்.
- ஏனைய வரப்பிரசாதங்களும் கொடுப்பனவுகளும்.
- சர்வதேச நிறுவனத்துடன் இணைந்து செயற்படும் வாய்ப்பு.

(2486)



- கல்வி தகைமை- G.C.E.A/L
- பகுதி நேரமாக வேலை செய்ய விரும்புபவர்களும் இணைந்து கொள்ளலாம்.
- வயது: 20-60
- ஓய்வு பெற்றவர்களும் இணைந்து கொள்ளலாம்.

Contact:
62/6,Stanley Road.
T.P-0777 121 868

14 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
17 - 05 - 1954



மறைவு
19 - 02 - 2005

திதி:-6.3.2020

அமரர்.கருணைவேல் தேவநாயகி

பதினான்கு ஆண்டுகள் கழிந்தாலும் ஓவியமாய் பதிந்திருக்கிறது
உங்கள் முகம்! காவியமாய் வாழ்ந்தீர்கள்
உம்மை காலமெல்லாம் நினைத்திருப்போம்
தேனினிய உங்கள் குணம் தேடி நாம் உருகுகின்றோம்
ஆண்டவன் காலடியில் உங்கள் ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திக்கின்றோம்...!

துவாளி வீதி,இமையாணன் மேற்கு,
உடுப்பிட்டி.(அருண்சோ மில் உரிமையாளர்)

(C-9413)

கணவர்-கருணைவேல்
பிள்ளைகள்-அரும்செல்வி,
சந்திரிகா,ஜனகன்.

# சைவ வாக்காளர்களிடம் சிவசேனை வேண்டுகோள்




(யாழ்ப்பாணம்)

பாராளுமன்றத் தேர்தல் திகதி அறிவிக்கப்பட்ட நிலையில் வடமராட்சி, பருத்தித்துறை, நெல்லியடி, உடுப்பிட்டி, ஊரெழு, உரும்பிராய் பகுதிகளிலுள்ள சுவர்களில் சிவசேனையால் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன. (இ1-8-60)

# சுன்னாகம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியாகச் செயற்பட்ட அத்துவ கருணபாலவுக்கு பொலிஸ் சேவை ஆணைக்குழு பணி இடமாற்றம் வழங்கியது.

கடந்த வாரம் மருதனார்மடம் பகுதியிலுள்ள தனியார் விருந்தினர் விடுதி இராணுவத்தினரால் சுற்றிவளைக்கப்பட்ட நிலையில் கைது செய்த சந்தேகத் திற்கிடமானவர்களை சுன்னாகம் பொலிஸார் விசாரணையின் பின் விடுவித்திருந்த நிலையில் பொலிஸ் பொறுப்பதிகாரிக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-10)

# கற்குளம் வீதி திறப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மாவை சோ.சேனாதிராசாவின் நிதி ஒதுக்கீட்டில் யாழ்.மாநகர சபை முதல்வரின் சிபார்சில் யாழ்ப்பாணம் 25 ஆம் வட்டாரத்தில் புனரமைக்கப்பட்ட கற்குளம் வீதி கடந்த 3 ஆம் திகதி மக்கள் பயன்பாட்டிற்காக திறக்கப்பட்டது.

வட்டார உறுப்பினர் என். தனேந்திரனின் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் மாநகர முதல்வர் இம்மானுவல் ஆனல்ட் வீதியைத் திறந்து வைத்தார்.

இந் நிகழ்வில் மாநகரசபை உறுப்பினர் எம்.எம்.எம்.நிபாஹிர், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.(இ-7)

# நலம் தரும் ஜோதிட குறியீடுகள்

## உருத்திராட்ச மகிமை

சிவபெருமானுக்கு உருத்திரன் என்ற திருநாமம் உண்டு. அந்த உருத்திரனுடைய அஷங்களிலிருந்து (அதாவது கண்களிலிருந்து) வழிந்த நீரில் தோன்றியது உருத்திராட்சம் எனப்படுகிறது. உருத்திராட்சம் தோன்றியது பற்றி ஒரு புராணக் கதை உண்டு. அதன்படி, தேவர்களுக்கு திரிபுரத்து அசுரர்கள் துன்பத்தை தந்து வந்தார்கள். இது குறித்து தேவர்கள் சிவனிடம் முறையிட்டனர். இதைக் கேட்டவுடன் இறைவனின் மூன்று கண்களிலிருந்தும் நீர் வழிந்து அப்படி பொழிந்த நீரில் உருவானதே உருத்திராட்சமாகும்.

சிவனின் கண்களிலிருந்து விழுந்த கண்ணீர்த் துளிகள் பூமியில் ஒரு மரமாய் உருவெடுத்துக் கனியாகிக் காய்த்துக் குலுங்கியது. இக்கனிகள் ருசிப்பதற்காக ஏற்படவில்லை. உலர்ந்து உருத்திராட்சமாக மாறுவதற்காக ஏற்பட்டது. உருத்திராட்ச மரங்கள் நேபாளத்திலும், ஜாவாத்தீவுகளிலும் அமோகமாக வளர்கின்றன. இமாலயத்திலும் உருத்திராட்ச கொட்டை நிறைய விளைகின்றன.

உருத்திராட்சம் நான்கு நிறங்களில் கிடைக்கின்றன. கறுப்பு மற்றும் சிவப்பு நிற உருத்திராட்சங்கள் தான் அதிக அளவில் கிடைக்கின்றன. வெள்ளை நிற உருத்திராட்சம் குறிப்பிட்ட சில இடங்களில் மட்டும் விளைவதால் எளிதில் கிடைப்பதில்லை. மஞ்சள் நிற உருத்திராட்சங்களும் உண்டு. இவை அதிக அளவில் கிடைப்பதில்லை.

உருத்திராட்சத்தில் பல முகங்கள் கொண்ட உருத்திராட்சங்கள் உண்டு. ஒரு முகம் முதல் பதினாறு முகம் கொண்ட உருத்திராட்சங்கள் வரை உண்டு. இவைகளில் ஒரு முகம், ஐந்து முகம், பதினொரு முகம் கொண்டவை பூஜைக்கு ஏற்றவையாகும். ஒரு முகம் கொண்டது. கிடைப்பது மிகவும் கடினம். பதினாறு வகையான முகங்கள் கொண்ட உருத்திராட்சங்களின் அதிதேவதைகள் கீழே தரப்பட்டுள்ளன.

**உருத்திராட்சங்களின் அதிதேவதைகள் கீழே தரப்பட்டுள்ளன.**

*1 முகம் - சிவன், 2 முகம்- அம்பிகை, 3 முகம்-அக்னி, 4 முகம் - பிரம்மா, 5 முகம் - காலாக்னி உருத்திரர், 6 முகம்- சுப்பிரமணியர், 7 முகம் - மன்மதன், ஆதிசேஷன், 8 முகம் - விநாயகர், 9 முகம் - பைரவர், 10 முகம் - விஷ்ணு, 11 முகம் - ஏகதச உருத்திரர், 12 முகம் - துவாதச உருத்திரர், 13 முகம் - ஆறுமுகர், 14 முகம் - அர்த்தநாரீஸ்வரர், 15 முகம் - சதாசிவன், 16 முகம் - அனந்தேஸ்வரர்.*

(தொடரும்...)



யாழ்.லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் பாடசாலை மாணவர்களிடையே அதிகரித்துவரும் கையடக்கத் தொலைபேசிப்பாவனை, சமூக வலைத்தளப் பாவனை குறித்த விழிப்புணர்வுக் கருத்தரங்கு "பாடசாலை மாணவர்களும் கைத்தொலைபேசி"யும் என்ற தலைப்பில் நல்லூர் வடக்கு சனசமூக நிலைய மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது. இந்நிகழ்வில் தகவல் தொழில்நுட்ப வல்லுநர் ஷர்மிக் யோகராஜா வளவாளராகக் கலந்துகொண்டு கருத்துரைகளை வழங்கினார். பாடசாலை மாணவர்கள், பெற்றோர்கள், லயன்ஸ் கழக உறுப்பினர்கள், சனசமூக நிலைய நிர்வாகத்தினர் எனப் பலரும் இதில் கலந்துகொண்டனர்.

## இராசி பலன்

**மீனம்**



பெரிய மனிதர்களின் தொடர்புகள் அனுகூலம் தரும், பிள்ளைகளின் கல்வி நலனின் அக்கறை காட்டுவீர்கள், தொலைபேசி வழியில் பொன்னான செய்திகள் வந்து சேரலாம்.

**மேடம்**



வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், சுப நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், கல்வி நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்.

**இடபம்**



சுப நிகழ்வுகளில் புதியவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், இனிய செய்திகள் இல்லம் வந்து சேரலாம், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும்.

**மிதுனம்**



கணபதி வழிபாடு காரிய வெற்றி தரும், நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும், தொழிலில் அதிகாரிகளின் பாராட்டை பெறுவீர்கள், வாழ்க்கை தரம் உயர வழிவகை செய்வீர்கள்..

**கும்பம்**



பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகலாம், நம்பிக்கைகள் நடைபெற தும்பிக்கையானை வழிபட வேண்டிய நாள், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள், போசன சுகமுண்டு.

| | | | |
|---|---|---|---|
| | சுக் | | ராகு |
| சூரி | இராசி பலன் | | சந் |
| புத | கிரகநிலை சந்திராஷ்டமம் மூலம் | | |
| சனி.கேது. குரு. செவ் | | | |

**06.03.2020**

மாசி 23, வெள்ளிக்கிழமை
சூரிய உதயம் காலை 6.29 மணிக்கு
ஏகாதசி காலை 7.41 மணிவரை
துவாதசி பின்னிரவு 6.11 மணிவரை
புனர்பூசம் காலை 6.48 மணிவரை
பூசம் பின்னிரவு 5.59 மணிவரை
சுபநேரம் 6.25-7.55 மணிவரை
இராகுகாலம் 10.55-12.25 மணிவரை
ஏகாதசி விரதம், சுபமுகூர்த்த தினம்
கடவுளை வஞ்சிக்க நினைப்பவன்
தன்னைத் தானே
வஞ்சித்துக் கொண்டவன்
வளவன்

**கடகம்**



தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பயணங்கள் கைகூடும், போசன சுகமுண்டு, கொடுக்கல்- வாங்கல்களில் கவனம் தேவை.

**மகரம்**



நிம்மதிக்காக ஆலயத்தை நோக்கி அடியெடுத்து வைப்பிர்கள், தொழிலில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, நண்பர்களால் வளர்ச்சி கூடும் நாள்.

**சிம்மம்**



தொழில் நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், சுப காரியச் செலவுகள் அதிகரிக்கும் நாள், தேவையற்ற சஞ்சலங்கள் தோன்றி மறையும்.

**தனுசு**



எதிர்பாரத வகையில் சில மனஸ்தாபங்கள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம், கவலை தீர கணபதியை வழிபட வேண்டிய நாள், வேலைச் சுமை கூடும், விரயங்கள் கூடும் நாள்.

**விருச்சிகம்**



சுறுசுறுப்போடு செயற்படுவீர்கள், உறவினர்களின் வருகையுண்டு, சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**துலாம்**



குடும்பத்தினரின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, முத்தான வாய்ப்புக்கள் இல்லம் வந்து சேரலாம், பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம், தொழிலில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**கன்னி**




பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், விரதங்களில் நம்பிக்கை கூடும், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், பொதுவாழ்வில் புகழ் கூடும்.

# வாழ்த்துகின்றோம்: கல்வி ஒளி

## பேராசிரியர் கலாநிதி. பாலசுப்பிரமணியம் தனபாலன்





**04**.03.2020 அன்று பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் பிரதம விருந்தினர் பேராசிரியர் கலாநிதி **J.S.P.**பீட்டர் அவர்களும், சிறப்பு விருந்தினர் பேராசிரியர் கலாநிதி வேல்நம்பி அவர்கள் முன்னிலையிலும் சர்வதேச **Business University of Costa Rica** பேராசிரியர் கலாநிதி சால்ஸ் மெகுநல் முன்னிலையில்; உயர்வான கல்விச் சேவை, உயர் கல்வி ஆய்வுகளை சமூகமயப்படுத்தியமை, பாடசாலை, சமூகம் மற்றும் நாட்டின் பிரச்சினைகளை இனம் கண்டு ஆய்வுகள் செய்யப்பட்டு தீர்வுகள் முன்மொழியப்பட்டு அவை நடைமுறைப்படுத்தும் உலகளாவிய உயர் கல்விச் செல்நெறியை உள்ளூரில் பிரயோகித்தமைக்காக கலாநிதி பாலசுப்பிரமணியம் தனபாலன் அவர்களுக்கு பேராசிரியர் பட்டம் வழங்கப்பட்டதை இட்டு எமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

### பேராசிரியர் பாலசுப்பிரமணியம் தனபாலன் BA (cey) பேராதனைப் பல்கலைக்கழகம் பட்டப்பின் கல்வி

(சிறப்பு) தேசிய கல்வி நிறுவகம், **Dip in Guidance & Counseling (Distinction),** கல்வியியல் முது தத்துவமாணி **M.Phil in Ed-Jaffna University** - யாழ்.மாவட்ட முன்பள்ளி கலைத்திட்ட அபிவிருத்தி பிரச்சினைகள்-பேராசிரியர் சபா.ஜெயராசா அவர்களின் மேற்பார்வையில் நிறைவேற்றப்பட்டு மாதிரி முன்பள்ளி உருவாக்கப்பட்டு; ஆசிரியர், பெற்றோர், பிள்ளைகளுக்கான அமெரிக்க, பிரித்தானிய, ஜப்பானிய இந்திய வளவாளர்களினூடு வலுவூட்டல் செயலமர்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. **Cert in Vocational Guidance (Singapore)**

### கல்வியியல் கலாநிதிப்பட்டம்:

**PHD Education - Jaffna University** - யாழ்ப்பாண மாவட்ட ஆரம்பப் பாடசாலைகளில் கல்விச் சீர்த்திருத்தங்களை அமுலாக்குகைகளில் எதிர்கொள்ளப்படும் இடர்கள் பேராசான் கலாநிதி.**T**.கலாமணி அவர்களின் மேற்பார்வையில் நிறைவேற்றப்பட்டது. ஆய்வுப் பேறுகள் யுனிசெவ் நிறுவனத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டு வடமாகாண பின்தங்கிய யுத்தத்தால் பாதிப்புற்ற பாடசாலைகளில் பல்மட்டக் கற்பித்தல், நேரான வகுப்பறை முகாமைத்துவ செயற்றிட்டம் பாரிய அளவில் நடைமுறைப்படுத்தப்பட்டது.

கற்பித்தல் மேற்பார்வை அனுபவம்; பாரதாசன் பல்கலைக்கழக கலாநிதிப்பட்ட மேற்பார்வையாளர், **International Business University of costa Rica, MPhil, PHD** மேற்பார்வையாளர், **university of Vally USA MPhil, PHD** மேற்பார்வையாளர், **PHD** ஆய்விதழ் மதிப்பீட்டாளர், சர்வதேச ஆய்வு மாநாடுகளில் ஆய்வுக் கட்டுரை மதிப்பீட்டாளர், தேசிய கல்வி நிறுவக பட்டப்பின் முகாமைத்துவ ஆய்வு மேற்பார்வையாளர்.

### வருகை விரிவுரையாளர்:

இந்தியா தமிழ்நாடு **Maruthi Group** உயர் கல்வி நிறுவன **MED** வருகை விரிவுரையாளர், சர்வதேச அமேசன் கல்லூரி கொழும்பு, **CCSC Campus** அம்பாந்தோட்டை, மாத்தளை **City Compus,** ஹற்றன் லங்கா கம்பஸ், வவுனியா **Lanka City Campus,** யாழ்ப்பாணம் **North Lanka IIT,** மட்டக்களப்பு **City Campus.**

### வளவாளர், நிபுணத்துவ ஆலோசகர், சிறப்பறிஞர்:

கல்வியமைச்சின் தமிழ் பாடசாலை அதிபர்களின் வலுவூட்டல் நிகழ்ச்சித்திட்ட முதன்மை வளவாளர், கல்வியமைச்சின் சமய விழுமியப்பிரிவு நிபுணத்துவ ஆலோசகர், தேசிய கல்வி நிறுவக சமயப்பிரிவு வளவாளர், கிழக்கு, மத்திய, ஊவா, வடமேல் மாகாண கல்வியமைச்சு வளவாளர்.

❖ வடமாகாண பாடசாலைகளில் பங்குபற்றல் முகாமைத்துவத்தை நடைமுறைப்படுத்தும் செயற்றிட்ட முன்மொழிவு (2015-2017) தயாரிப்பு நடைமுறைப்படுத்தல் கலைத்திட்ட ஆக்குநர் நிபுணத்துவ ஆலோசகர்.

❖ 2018-2020 வடமாகாண யுனிசெவ் செயற்றிட்ட சிறப்பறிஞர் "பல் மட்டக் கற்பித்தல், நேரான வகுப்பறை முகாமைத்துவ நடைமுறைகள்".

❖ தேசிய தொழிற்பயிற்சி அதிகார சபை, கனடா உலக பல்கலைக்கழக அரச சார்பற்ற நிறுவன செயற்றிட்ட தொழிற்பயிற்சி பெற்றோருக்கான மென்திறன்களை வழங்கும் நிகழ்ச்சித் .திட்ட நிபுணத்துவ ஆலோசகர் (இலங்கை முழுவதுமான தமிழ்மொழி பிரிவு).

❖ யுத்தத்தின் பின்னர் வன்னிப்பிரதேச இடைநிலை மாணவர்களுக்கான ஆலோசனை வழிகாட்டல், தலைமைத்துவ முகாம் செயலாற்றுகைத் திட்ட முன்மொழிவாளர் - யுனிசெவ் நிறுவனம் நடைமுறைப்படுத்தியது.

❖ கல்வியியல் ஆய்வு நூல்கள் வெளியீடுகள், கல்வியியல் ஆய்வுக்கட்டுரைகள் சர்வதேச ஆய்வு மாநாடுகளில் சமர்ப்பித்தமை, 500 அதிகமான கல்வியியல் கட்டுரைகளைப் பத்திரிகைகளில் பிரசுரித்தமை.

**"கல்விப்பணியே கடவுள் பணி"** என்று சேவையாற்றிய பேராசிரியர் பாலசுப்பிரமணியம் தனபாலன் (எமது நிறுவன நிபுணத்துவ ஆலோசகர்) அவர்களை வாழ்த்துகின்றோம்.

(2484)

528, பலாலி வீதி,
திருநெல்வேலி.

வாழ்த்துவோர்:
ஆசிரிய வாண்மை விருத்தி நிறுவகச் சமூகத்தினர்.

# யாழ்.பல்கலை. ஆங்கில மொழிக் கற்பித்தல் பேராசிரியையாக சண்முகயோகினி நியமனம்

(யாழ்ப்பாணம்)

கலாநிதி சண்முகயோகினி ரவீந்திரன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆங்கிய மொழிக் கற்பித்தல் துறையின் முதற் பேராசிரியையாக யாழ்.பல்கலைக் கழகப் பேரவையால் நியமிக்கப் பட்டார்.

அவரது விண்ணப்பத்தின் படி 2017 ஆம் ஆண்டிலிருந்து அவருக்கு ஆங்கில மொழிக் கற்பித்தல் பேராசிரியை பதவி வழங்கப்பட்டது.



பேராசிரியை கலாநிதி. சண்முகயோகினி ரவீந்திரன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் உள்வாரி, வெளிவாரி, இணையத்தளப்பட்டப்படிப்புக்கள், பட்ட மேற் படிப்புக்களின் பாடவிதானங்கள், பாடநூல்கள், பாட கையேடுகள், audio, video பாடங்கள் தயாரித்து வழங்கியுள்ளார்.

இவர் தேசிய சர்வதேச ஆராய்ச்சி மாநாடுகளில் பல்வேறு தலைப்புக்களில் ஆங்கில மொழிக் கல்வி, ஆங்கில மொழிக்கற்பித்தல், ஆங்கில மொழிக்கற்கை போன்றவற்றில் தன் ஆராய்ச்சிக் கட்டுரைகளைச் சமர்ப்பித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# யாழ்.மாவட்டத்திற்கு முதல் பரிசு



(யாழ்ப்பாணம்)

இலங்கை சாரணர் சங்கத்தின் தலைமைக் காரியாலயத்தால் நாட்டில் தெரிவு செய்யப்பட்ட **MOP** மாவட்ட ஒருகிணைப்பாளர்களின் முழுச் செயற்பாட்டுத் திட்டத்தின் இறுதிக்கட்ட மதிப்பீட்டு பயிற்சிப்பட்டறை கடந்த மாதம் 14 ஆம் திகதி முதல் - 18 ஆம் திகதி வரை தலைமைக் காரியாலயத்தில் நடைபெற்றது. இதில் **World Organization Of Scout Movement** இனால் பிறந்த **Zero Waste-2** மாவட்டமாக முதல் பரிசை யாழ்.மாவட்டம் பெற்றுக் கொண்டது. இவ்வரலாற்று சாதனைக்கான கேடயம் மற்றும் சர்வதேச தரச்சான்றிதழ்களை யாழ்.மாவட்ட ஆழி ஒருங்கிணைப்பாளர் திருமதி ச.மீனாம்பிகா பெற்றுக்கொண்டார். (இ-7)

# சர்வதேச மீன்பிடிக் கலங்களால் ஏற்படும் பாதிப்புக்களைத் தடுக்க விசேட குழு

## துறைசார் அமைச்சு நடவடிக்கை

## முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் மீது அமைச்சர் டக்ளஸ் பகிரங்க குற்றச்சாட்டு



(மாளிகாவத்தை)

கடந்த கால ஆட்சியில் இலங்கையில் பதிவு செய்யப்பட்ட சர்வதேச மீன்பிடிக் கலங்களின் செயற்பாட்டினால் எதிர்கொள்ளும் பாதிப்புக்களை தடுப்பதற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக ஆராய்வதற்கு விசேட குழு ஒன்றை அமைப்பதற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தீர்மானித்தார்.

அமைச்சின் செயலாளர் திருமதி இந்து ரத்நாயக்கா தலைமையில் சர்வதேச கடலில் மீன்பிடியில் ஈடுபடும் உள்ளூர் கலங்களின் உரிமையாளர்களின் பிரதிநிதிகள் இருவர் உள்ளடங்கலாக துறைசார் நிபுணர்கள் அடங்கிய குழுவை அமைப்பதற்கு அமைச்சரால் தீர்மானிக்கப்பட்டது.

மேலும், சர்வதேசக் கடலில் மீன்பிடியில் ஈடுபடும் உள்ளூர் கலங்களுக்கு வி.எம்.எஸ். என்படும் கலங்களைக் கண்டறியும் முறைமை மற்றும் கடலுணவுகளைத் தரையிறக்கும் வரையில் பாதுகாக்கும் குளிரூட்டல் வசதி போன்றவை பொருத்தப்படும் வரையான தற்காலிக அனுமதிப் பத்திரங்களை உடனடியாக வழங்குமாறு அமைச்சு அதிகாரிகளுக்கு அமைச்சரால் ஆலோசனை வழங்கப்பட்டது.

இலங்கையில் பதிவு செய்யப்பட்ட சர்வதேச மீன்பிடிப் கலங்களின் செயற்பாடு காரணமாக தொழில் பாதிக்கப்படுவதாக தெரிவித்து டிக்கோவிற்ற மீன்பிடித் துறைமுகத்தின் முன்பாக அகில இலங்கை பலநாட் கலங்களின் உரிமையாளர்களால் நேற்று முன்தினம் போராட்டம் நடத்தப்பட்ட நிலையில் குறித்த இடத்திற்குச் சென்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வழங்கிய வாக்குறுதிக்கு அமைய சம்பந்தப்பட்ட தரப்புக்களுடன் நேற்று முன்தினம் சந்திப்பு ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டது.

குறிப்பாக, இலங்கையில் பதிவு செய்யப்பட்ட சர்வதேச மீன்பிடிக் கலங்களினால் இலங்கைக்கு மீன்கள் கொண்டு வரப்படும் போது முறைகேடுகள் நடைபெறுவதாகவும் அவை கட்டுப்படுத்தப்பட வேண்டும் எனவும் கருத்து முன்வைக்கப்பட்டது.

மேலும், தற்போது சர்வதேசத்தில் உற்பத்தி செய்யப்பட்ட 35 மீன்பிடிக் கலங்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ள நிலையில், அதனை மீண்டும் புதுப்பித்து கொடுக்கக் கூடாது என்ற கோரிக்கை மீனவர் பிரதிநிதிகளால் முன்வைக்கப்பட்டது.

இதன்போது கருத்துத் தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் புதிதாக அமைக்கப்பட்ட குழுவின் ஊடாக இரண்டு வார காலப் பகுதிக்குள் இலங்கைக் கடற்றொழிலாளர்கள் திருப்தியடையும் வகையிலும் மக்களுக்கு நியாயமான விலையில் தரமான கடலுணவுகள் கிடைக்கும் வகையிலும் அந்நியச் செலாவணியை அதிகரிக்கும் வகையிலும் தீர்வினைக் கண்டறிய முடிமெனத் தெரிவித்தார்.

இதன்போது, முன்னாள் எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ ஊடக சந்திப்பில் வெளிநாட்டு மீன்பிடிக் கலங்கள் ஊடாக உள்ளூர் மீனவர்களுக்கு எதிரான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்வதாக வெளியிட்ட கருத்தை சுட்டிக் காட்டிய அமைச்சர் டக்ளஸ் குறித்த 35 வெளிநாட்டு மீன்பிடிக் கலங்களுக்குமான அனுமதி கடந்த ஆட்சிக் காலத்திலேயே வழங்கப்பட்டது.

முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் தமது ஆட்சிக் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட இந்த விடயத்தின் உண்மையை மறைத்து தற்போதைய அரசாங்கத்தின் மீது பழியைச் சுமத்த முயற்சிப்பதாகவும் குற்றம்சாட்டினார்.

அமைச்சரின் கருத்தை ஏற்றுக்கொண்ட மீனவர் பிரதிநிதிகள், குறித்த அனுமதிப் பத்திரங்கள் எவையும் தற்போதைய அரசாங்கத்தின் காலத்தில் வழங்கப்பட்டவை இல்லை என்ற விடயம் தமக்குத் தெரியும் எனத் தெரிவித்ததுடன் குறித்த விடயத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா காண்பித்து வருகின்ற அக்கறைக்கு தமது நன்றியையும் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)










**பருத்தித்துறை பிரதேச செயலாளர் பிரிவில் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தால் நேற்று முன்தினம் வியாழக்கிழமை சுனாமி ஒத்திகை இடம்பெற்றது. பாடசாலைகளில் ஒலி எழுப்பப்பட்டதைத் தொடர்ந்து பாதுகாப்பாக மாணவர்கள் வட இந்து மகளிர் கல்லூரிக்கு அழைத்து வரப்பட்டனர். காயமடைந்தவர்களுக்கு விசேட சிகிச்சைக் கூடத்தில் சிகிச்சையளிக்கப்பட்டது.**

**(படங்கள்:- கரணவாய் செய்தியாளர்)**

# வான் விபத்து-அறுவர் படுகாயம்



(ஹப்புத்தளை)

ஹப்புத்தளை-பெரகலை வீதியில் விகாரகளை என்ற இடத்தில் நேற்றுக் காலை வான் ஒன்று பாதையை விட்டு விலகி மண் மேட்டில் மோதி விபத்திற்குள்ளானதில் சாரதி உட்பட ஆறுபேர் படுகாயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)

## கோண்டாவிலில் குடைச் சுவாமிகளின் பெரும் உருவப்படம்



(யாழ்ப்பாணம்)

ஈழத்துச் சித்தர்களில் ஒருவரான கோண்டாவிலூர் குடைச் சுவாமிகளின் குருபூசை நிகழ்வுகள் கடந்த முதலாம் திகதி கோண்டாவில் அற்புத நர்த்தன விநாயகர் ஆலயத்தில் இடம் பெற்றது. மேற்படி நாளில் அவரது சமாதிக் கோயில் இவ்வாலயத்தில் அமைந்துள்ளமையைக் குறிக்கும் வகையில் அவரது பெரும் உருவப்படம் கோண்டாவில் சந்தியிலுள்ள மேற்படி ஆலயத்தின் முன்பாகப் பலாலி வீதியில் காட்சிப்படுத்தப்பட்டது. கோண்டாவில் சந்தி வர்த்தகர்கள் இதற்கான நிதிப் பங்களிப்பை வழங்கினர். (இ-18)

# கொரோனா வைரஸ் இலங்கையைத் தாக்கினால் அனர்த்த நிலைமையை அறிவிக்க நேரிடும்!

## சுகாதார சேவை இயக்குனர் அதிர்ச்சி

**(கொழும்பு) இலங்கையில் கொவிட் 19 எனப்படும் கொரோனா வைரஸ் பரவினால் தேசிய அனர்த்த நிலைமை அறிவிக்க நேரிடும் என சுகாதார சேவை இயக்குநர் நாயகம் வைத்தியர் அனில் ஜாசிங்க அதிர்ச்சித் தகவலை வெளியிட்டார்.**

கொழும்பிலுள்ள சுகாதார அமைச்சில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கையில் கொரோனா வைரஸ் தாக்கினால் பாரிய ஆபத்தை ஏற்படுத்தும் என்பதனால் இலங்கைக்கு வரும் வெளிநாட்டவர்களை தீவிர சோதனைக்குட்படுத்த வேண்டும்.

புதிய எச்சரிக்கை கணிப்பிற்கமைய தாய்லாந்து, சிங்கப்பூர், மலேசியா, ஜப்பான் ஆகிய நாடுகளால் இலங்கைக்கு பெரிய பாதிப்பு இல்லை.

எனினும் தென்கொரியா, இத்தாலி மற்றும் ஈரான் ஆகிய நாடுகளில் எங்களுக்கு பெரிய ஆபத்து உள்ளது. தென்கொரியாவில் தற்போது வரையில் 5 ஆயிரத்திற்கும் அதிகமான கொரோனா நோயாளிகள் உள்ளனர். இத்தாலியில் இரண்டாயிரம் நோயாளிகளை நெருங்குவதுடன். ஈரானில் ஆயிரத்திற்கும் அதிகமான நோயாளிகள் உள்ளனர்.

இத்தாலி மற்றும் தென்கொரியா நாடுகளில் சிறப்பான பாதுகாப்பு கட்டமைப்பு உள்ள போதிலும் ஈரானில் சுகாதார கட்டமைப்பில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

கட்டுநாயக்க விமான நிலையத்தில் பாதுகாப்பு நடவடிக்கை மேலும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. அதேபோல் பெப்ரவரி 25 முதல் 29 ஆம் திகதி வரையிலான 5 நாட்களுக்குள் இத்தாலி மற்றும் தென்கொரியாவில் இருந்து இலங்கை வந்த பயணிகளின் எண்ணிக்கை 1145 என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# யானைச் சின்னத்தில் ஓரணியில் களமிறங்க சஜித், ரணில் ஆராய்வு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் ஐக்கிய மக்கள் சக்தி கூட்டணியின் தலைவர் சஜித் பிரேமதாஸவும் யானைச் சின்னத்தில் ஒரே அணியில் போட்டியிடுவதற்காகப் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திடுவது குறித்து ஆராயவுள்ளதாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரட்ன தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் நேற்று முன்தினம் புதன் கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "ஐ.தே.கவின் தலைவர் விக்ரமசிங்கவிற்கும் சஜித் பிரேமதாஸவின் கூட்டணியினருக்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றை மேற்கொள்ள எதிர்பார்த்துள்ளோம்.

ஏனென்னில் ஐக்கிய மக்கள் சக்தி கூட்டணியின் யாப்பில் காணப்படும் குறைபாடுகள் காரணமாகவே இத்தகைய முரண்பாடுகள் தோன்றியுள்ளன. எனவே, எமது கட்சியின் செயலாளர் பதவியை அவர்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒருவருக்கு வழங்குமாறு கேட்டுக்கொண்டனர். எனவே, இந்தப் பிரச்சினைக்கான தீர்வைக் கூடிய விரைவில் காண முடியும் என எதிர்பார்க்கின்றோம்.

அவ்வாறு இணைந்து செயற்படுவதன் ஊடாக மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெறும் வாய்ப்பு எமக்கு அதிகளவிலுள்ளது.

கூட்டணியின் யாப்பு கட்சியின் யாப்பை போன்று அமைந்துள்ளமையின் காரணமாகவும் முரண்பாடுகள் தோன்றியுள்ளன. எனவே, கூட்டணியின் யாப்பில் மாற்றம் ஏற்படும் பட்சத்தில் எம்மால் அவர்களுடன் இணைந்து பயணிக்கக் கூடியதாகவிருக்கும்.

யானை சின்னத்தில் போட்டியிடுவதற்கு சஜித் அணியினரும் இணக்கம் வெளியிட்டுள்ளனர். இந்நிலையில் எதிர்காலத்தில் பலமான கூட்டணியை உருவாக்கி அதன் ஊடாக ராஜபக்ஷ அரசாங்கத்தை வீழ்த்துவதே எமது இலக்காகும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# தமிழ் அகதிகளின் விடுதலையைக் கோரி ஜெனிவா சென்ற ஈழத்தமிழ் மாணவி!



(ஜெனிவா)

நீண்டகாலம் தடுப்பு முகாமிலுள்ள இரு தமிழ் அகதிகளின் விடுதலைக்காக குரல்கொடுக்கும் நோக்குடன், 12 ஆம் தரத்தில் கல்வி கற்கும் மாணவி றேணுகா இன்பகுமார் அவுஸ்திரேலியாவிலிருந்து ஜெனிவா சென்றுள்ளார்.

பத்து ஆண்டுகளாக முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள குறித்த தமிழ் அகதிகள் இருவரும் மனிதாபிமானமற்ற முறையில் கொடுமையான வாழ்வுக்குள் சிக்குப்பட்டுள்ளதை, சர்வதேச சமூகங்களுக்கு எடுத்துக்காட்டும் விதமாக அவரது பயணம் அமைந்துள்ளது.

மெல்போர்னில் உள்ள மைற்றா தடுப்பு முகாமிலுள்ள இருவரையும் கடந்த சில வருடங்களாக சந்தித்துவந்த அவர், அவர்களது காலவரையறையற்ற தடுப்பு முகாம் வாழ்வை முடிவுக்குக் கொண்டு வருவதற்காக பல்வேறு செயற்பாடுகளை முன்னெடுத்திருந்தார்.

தனது பாடசாலையிலுள்ள சக மாணவிகளுக்கு குறித்த இருவரின் விடுதலைக்கான அவசியத்தை விபரித்ததன் மூலம் அவர்களுக்கு ஊடாக குடிவரவுத்துறை அமைச்சருக்கு பல வேண்டுகோள்கள் அனுப்பப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. எனினும் அவ்வேண்டுகோள்களை அமைச்சர் ஏற்றுக்கொள்ளவில்லை.

தற்போது ஜெனிவா சென்றுள்ள மாணவி சித்திரவதைகள் மற்றும் மனிதாபிமானத்திற்கு எதிரான விடயங்களை கண்காணிக்கும் விசேட அதிகாரி நில்ஸ் மெல்சர் மற்றும் பாதுகாப்பு தொடர்பான விடயங்களுக்கான துணை ஆணையர் ஜிலியன் றிக்ஸ் மற்றும் முக்கிய ஐ.நா. அதிகாரிகளைச் சந்தித்தார்.

ஐ.நா.மனித உரிமை சபையின் அமர்விலும் கலந்து கொண்டு, குறித்த அகதிகளின் விடுதலை தொடர்பாக மாணவி உரையாற்றவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## 04 ஆம் திகதி பிரசுரமான தரம்-5 புலமைப்பரிசில் வினாப்பத்திரம்-பகுதி 1 இற்கான விடைகள்

| | | | |
|---|---|---|---|
| 1) 2 | 11) 2 | 21) 3 | 31) 3 |
| 2) 1 | 12) 1 | 22) 1 | 32) - |
| 3) 1 | 13) 3 | 23) 1 | 33) 3 |
| 4) 2 | 14) 1 | 24) 2 | 34) 2 |
| 5) 2 | 15) 2 | 25) 1 | 35) 3 |
| 6) 2 | 16) 2 | 26) 1 | 36) 1 |
| 7) 2 | 17) 2 | 27) 2 | 37) 2 |
| 8) 3 | 18) 3 | 28) 3 | 38) 3 |
| 9) 1 | 19) 2 | 29) 1 | 39) 3 |
| 10) 3 | 20) 2 | 30) 2 | 40) 3 |



பருத்தித்துறை அத்தியடி சைவ மன்றம் முன்பள்ளி விளையாட்டு விழா கடந்த முதலாம் திகதி இடம்பெற்றது. இதில் பிரதம விருந்தினராக பருத்தித்துறை பிரதேச செயலர் ஆழ்வாப்பிள்ளை ஸ்ரீ கலந்து கொண்டார். (படங்கள்:- மகாலிங்கம்)

# நான் செத்த பிறகு பிள்ளையை யார் தேடுவார்?

## முல்லையில் சுவரொட்டிகள்




(பனிக்கன்குளம்)

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் போராட்டத்தின் 3 ஆவது ஆண்டுகள் நிறைவை முன்னிட்டு இடம்பெறவுள்ள போராட்டத்திற்கு வலுச்சேர்க்கும் வகையில் முல்லைத்தீவின் பல பகுதிகளிலும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் கடந்து 2017 மார்ச் மாதம் 8 ஆம் திகதி ஆரம்பித்த போராட்டம் எதிர்வரும் எட்டாம் திகதி மூன்று வருடங்களை கடந்து நான்காவது வருடத்தை ஆரம்பிக்கிறது.

இந்த நிலையில் அன்றைய தினம் சர்வதேச மகளிர் தினமாகவும் இருப்பதால் அந்த மகளிர் தினத்தை துக்க தினமாக அனுஷ்டித்து மாபெரும் கவனயீர்ப்புப் போராட்டமொன்றை முல்லைத்தீவில் மேற்கொள்ளவுள்ளதாக வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தெரிவித்திருந்தனர்.

அந்த வகையில் அவர்களுடைய போராட்டத்திற்கு வலுச்சேர்க்கும் முகமாக முல்லைத்தீவு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

குறித்த சுவரொட்டிகள் நான் செத்த பிறகு பிள்ளையை யார் தேடுவார்? மூன்று ஆண்டுகள் என்று குறிப்பிட்டு ஒட்டப்பட்டுள்ளது.

சுவரொட்டிகள் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் போராட்டத்தின் மூன்றாவது ஆண்டு நிறைவில் மாபெரும் கவனயீர்ப்புப் போராட்டம் எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணிக்கு முல்லைத்தீவு நகரில் இடம்பெறவுள்ளது எனவும் அதற்கு ஆதரவு கோரும் முகமாக வடக்கு-கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கத்தினரால் குறித்த சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (9-281)

# மணலினுள் மரக்குற்றிகளை மறைத்துச் சென்றவர் கைது!



(தருமபுரம்)

கிளிநொச்சி கல்லாறுப்பகுதியிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு சட்டவிரோதமான முறையில் டிப்பரில் மணல் ஏற்றி குறித்த மணலினுள் மரக்குற்றிகளை மறைத்துச் சென்ற நபர் விசேட அதிரடிப்படையால் கைது செய்யப்பட்டுள்ளார். நேற்று முன்தினம் இரவு முரசுமோட்டைப் பகுதியில் சென்று கொண்டிருந்த டிப்பர் வாகனத்தை விசேட அதிரடிப் படையினர் மறித்து சோதனை செய்துள்ளனர்.

அப்போது பெறுமதி வாய்ந்த மரக் குற்றிகள் மணலினுள் மறைத்து வைத்திருக்கப்பட்டிருந்தமையை அவதானித்துள்ளனர்.

உடனடியாக டிப்பர் சாரதி கைது செய்யப்பட்டு கிளிநொச்சி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். குறித்த மணலினுள் பெறுமதியான முதிரை மரக்குற்றிகள், தேக்கு மரக் குற்றிகள் என்பவற்றை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். (9-316)

# சிங்கள வேட்பாளர்களுக்கு வாக்கு கேட்கும் பௌத்த துறவிகள்

## முன்னாள் அமைச்சர் சத்தியலிங்கம் ஆதங்கம்

(கொழும்பு)

நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தல் வெற்றிக்குப் பின்னர் நாட்டின் அரசியல் நிலைமை ஆபத்தானதாக மாறியுள்ளது. இந்த நாடு பௌத்த சிங்களவர்களுக்கு மட்டுமே உரித்தானது என்ற கடும்போக்கு நிலை பெரும்பான்மை மக்களிடம் உருவாக்கப்பட்டு வருகின்றது. பௌத்த சிங்கள வேட்பாளர்களை மட்டும் தெரிவுசெய்யும்படி பெரும்பான்மை சிங்கள மக்களிடம் பௌத்த துறவிகள் கோரிக்கை முன்வைத்து வருவது இதற்கு சிறந்த உதாரணமாகும் என வடக்கு மாகாண முன்னாள் சுகாதார அமைச்சர் மருத்துவர் ப.சத்தியலிங்கம் தெரிவித்துள்ளார்.

வவுனியா குடியிருப்பில் அமைந்துள்ள கட்சியின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் பொதுக்குழுக்கூட்டத்தில்கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் எண்ணிக்கையில் சிறுபான்மையாக வாழ்ந்துகொண்டிருக்கும் தமிழ் பேசும் மக்கள் செறிந்து வாழுகின்ற வடக்கு, கிழக்கு மற்றும் மலையகப்பகுதிகளில் பொதுஜன பெரமுனவிற்கு குறைந்தளவிலான வாக்குகள் கிடைத்துள்ளன. அதேவேளை நாட்டின் ஏனைய பகுதிகளில் குறிப்பாக சிங்கள பௌத்தர்கள் செறிந்து வாழும் பிரதேசங்களில் அவர்களுக்கு கூடுதலான வாக்குகள் கிடைத்துள்ளன.

பல்லின சமூகங்கள் வாழும் ஒருநாட்டில் இவ்வாறான நிலைமை இருப்பதானது சிறுபான்மை மக்களின் எதிர்காலத்தை கேள்விக்குறியாக்கியுள்ளது. வன்னித்தேர்தல் தொகுதியை பொறுத்தவரையில் மூவினங்களும் வாழுகின்ற பிரதேசமாகும். எனினும் எண்ணிக்கையில் தமிழ் மக்களே அதிகமாக வாழுகின்றனர். சிங்கள, முஸ்லிம் மக்கள் எண்ணிக்கையில் குறைவானவர்களே காணப்படுகின்றனர்.

எனவே பெரும்பான்மை கட்சிகளின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்கள் வெற்றி பெறுவதற்கு அவர்களது வாக்குகள் மட்டும் போதாது. எனவேதான் தமிழ் மக்களின் வாக்குகளைச் சேகரித்து கொடுப்பதற்காக அரச ஆதரவு கட்சிகள், குழுக்கள் தற்போது களத்தில் இறக்கிவிடப்பட்டுள்ளனர்.

இவர்களால் ஒருபோதும் வெற்றி பெறமுடியாது. அதேநேரம் ஆசைவார்த்தைகளை காட்டி தேர்தல் கால சலுகைகளை வழங்கி வாக்குகளை சேகரித்து பெரும்பான்மை கட்சிசார்பில் போட்டியிடும் பெரும்பான்மை சமூகத்தவர்களை வெற்றிபெற மறைமுகமாக உதவுபவர்களாக செயற்படுகின்றார்கள். இதுதொடர்பில் தமிழ் மக்கள் மிக அவதானமாக இருக்கவேண்டும்.

வன்னித் தேர்தல் மாவட்டம்' தற்போது நன்கு திட்டமிட்ட வகையில் இனப்பரம்பலை மாற்றியமைக்கும் நடவடிக்கைள் நடைபெற்று வருகின்றன. பாரம்பரியமாக வாழ்ந்துகொண்டிருக்கின்ற தமிழ் மக்களின் இருப்பை கேள்விக்குறியாக்கியுள்ளது. வடக்கில் 2013 இல் மாகாண சபை உருவாக்கப்பட்ட பின்னர் திட்டமிட்ட சிங்களக்குடியேற்றங்கள் நடைபெறுவது ஓரளவு குறைந்திருந்தாலும் எதிர்காலத்தில் மீண்டும் இவை ஆரம்பிக்கப்படுவதற்கான வாய்ப்புகள் இருப்பதாகவும் மேலும் தெரிவித்தார்.(9-299)



வவுனியாவிலுள்ள வர்த்தகர் சங்கத்தின் ஏற்பாட்டில் இலவச மருத்துவ முகாம் நேற்று காலை வர்த்தக சங்கத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதில் இரத்தப்பரிசோதனைகள், பல் மருத்துவம், உயர் குருதி அழுத்தம், சிறுநீரக பரிசோதனைகள் போன்ற அத்தியாவசியமான பரிசோதனைகள் இடம்பெற்றன. (படங்கள்:- நெளுக்குளம் செய்தியாளர்)

# கல்மடு குளத்தின் கீழ் 1400 ஏக்கரில் நெற்செய்கை

(தருமபுரம்)

இந்த வருடம் கல்மடுக் குளத்தின் கீழ் 1400 ஏக்கரில் சிறுபோக நெற்செய்கை முன்னெடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சிறுபோக பயிர்ச்செய்கை கலந்துரையாடல் நேற்று முன்தினம் புளியம்பொக்கணை கமநலசேவை நிலையத்தில் நடைபெற்றது. அதன் போதே மேற்குறித்த சிறுபோக நெற்செய்கைக்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதில் தருமபுரம் பகுதிக்கு 30 ஏக்கர் நிலப்பரப்பில் சிறுதானிய பயிர்ச்செய்கைக்காக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 25 ஆம் திகதி பயிர்ச்செய்கை ஆரம்பிக்கப்படும் எனவும் தீர்மானங்கள் எட்டப்பட்டுள்ளன. (9-316)




# வருடாந்த பொதுக்கூட்டம்

(பூநகரி)

பூநகரி பிரதேச கலாசார அதிகாரசபையின் வருடாந்த பொதுக்கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பூநகரி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பூநகரி உதவிப் பிரதேச செயலாளர் திருமதி கிரியா பார்த்தீபன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் புதிய வருடத்துக்கான நிர்வாகத்தெரிவு இடம்பெறவுள்ளதுடன் 2020 ஆம் ஆண்டுக்கான அபிவிருத்திச் செயற்பாடுகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்படவுள்ளது.

எனவே உறுப்பினர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து கலாசாரப் பேரவை செயற்குழு கூட்டமும் நடை பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (9-84)

# மின்சாரம் இன்றி இயங்கும் விசுவமடு பொதுச் சந்தை

(தருமபுரம்)

விசுவமடு சந்தையில் மின்சாரம் இன்றி வர்த்தகர்கள் அவதி. புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்குட்பட்ட விசுவமடு சந்தையில் கடந்த சில நாட்களாக மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளதால் வியாபாரிகள், பொதுமக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

மின்சாரக்கட்டணம் செலுத்தப்படாத காரணத்தால் மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளதாகவும் தாம் வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ள பாரிய சிரமத்தினை எதிர்கொள்வதாகவும் வியாபாரிகள் தெரிவித்துள்ளனர். எனவே பிரதேச சபையினர் விரைவில் மின்னிணைப்பினை மீளப்பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்குமாறு சந்தை வியாபாரிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (9-316)

# ஜனாதிபதித் தேர்தலுக்காக வவுனியாவில் 3 பேர் கட்டுப்பணம் செலுத்தினர்

(குருமன்காடு)

எதிர்வரும் ஏப்ரல் மாதம் 25 ஆம் திகதி நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலில் வன்னி தேர்தல் தொகுதியில் போட்டியிட வடமாகாண சபை முன்னாள் உறுப்பினர் உட்பட மூவர் கட்டுப்பணம் செலுத்தியுள்ளனர்.

இதன்படி சுயேட்சைக்குழுவில் போட்டியிடுவதற்காக நேற்று முன்தினம் ஒருவரும் நேற்று இருவரும் கட்டுப்பணத்தை வவுனியா மாவட்டச் செயலகத்திலுள்ள தேர்தல் திணைக்களத்தில் செலுத்தியுள்ளனர்.

முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் எம்.பி. நடராஜா, இந்திக்க நாமல் லியனகே பத்திரன, கோடோஉட பத்திரனகே நீல்சாந்த ஆகிய மூவருமே சுயேட்சைக் குழுவில் போட்டியிடுவதற்காக கட்டுப்பணத்தை செலுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (9-250-299)

# முல்லையில் புதிதாக முளைக்கும் இராணுவ சோதனை சாவடிகள்


## அச்சத்தில் பொதுமக்கள்

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் நேற்றுப் புதிதாக பல சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளமை மக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாங்குளம்-முல்லைத்தீவு பிரதான வீதியில் புதிதாக இராணுவச் சோதனைச் சாவடி ஒன்றினை இராணுவத்தினர் அமைத்துள்ளனர்.

அத்தோடு முல்லைத்தீவு-கொக்கிளாய் பிரதான வீதியிலும் சிலாவத்தை பகுதியிலும் புதிதாக சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன.



வடமாகாணத்தின் பல்வேறு பகுதிகளிலும் இராணுவச் சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டு சோதனை கெடுபிடிகள் அதிகரித்திருப்பதாக பல்வேறு தரப்பினரும் குற்றம் சாட்டி வரும் நிலையில் தொடர்ச்சியாக இராணுவத்தினர் புதிது புதிதாக இராணுவச் சோதனைச் சாவடிகளை அமைத்து வருகின்றமை மக்கள் மத்தியில் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது. (9-281)

# நீர் விநியோகிக்கப்படாததால் பயிர்ச்செய்கை பாதிப்பு

## திருவையாறு விவசாயிகள் கவலை

(கண்டாவளை)

கிளிநொச்சி திருவையாறு ஏற்றுநீர்ப்பாசனத்திட்ட விவசாயிகளுக்கான நீர் விநியோகம் மேற்கொள்ளப்படாமையினால் தமது வாழ்வாதாரப்பயிர்ச்செய்கைகள் பாதிக்கப்பட்டிருப்பதாக திருவையாறு விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி இரணைமடுக் குளத்தின் கீழ் அமைந்துள்ள திருவையாறு ஏற்றுநீர்ப்பாசனத் திட்டத்தின் கீழான விவசாயிகளுக்கு கடந்த ஜனவரி மாதத்திலிருந்து விவசாயத்திற்கான நீர் வழங்கப்படாமையினால் தமது பயிர்ச் செய்கைகள் தொடர்ந்தும் பாதிக்கப்படுவதாக விவசாயிகள் குற்றம் சாட்டியுள்ளனர்.

இரணைமடுக் குளத்தின் மேற்படி ஏற்று நீர்ப்பாசனத்திட்டமானது கடந்த காலங்களில் செயலிழந்து காணப்பட்ட நிலையில் யுத்தத்தின் பின்னர் கடந்த ஆண்டு பல மில்லியன் ரூபாய் செலவில் மீள் உருவாக்கப்பட்டு விவசாயிகளின் பயன்பாட்டிற்காக கையளிக்கப்பட்டிருந்தது. இவ்வாறு கையளிக்கப்பட்ட நீர்ப்பாசனத்திட்டத்தின் மூலம் பல ஆண்டுகளாக கைவிடப்பட்ட தமது பயிர்ச்செய்கைகளை இந்த விவசாயிகள் மீள ஆரம்பித்திருந்தனர்.

இவ்வாண்டிற்கான பயிர்ச்செய்கைகளை விவசாயிகள் ஆரம்பித்துள்ள போதும் அதற்கான நீர் இதுவரை விநியோகிக்கப்படவில்லை என்றும் விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

இவ்விடயம் தொடர்பில் இரணைமடு நீர்ப்பாசனப் பொறியியலாளர் சத்தியசீலன் செந்தில் குமரனிடம் இதுபற்றி வினவிய போது, கிளிநொச்சி மாவட்டத்தின் மேட்டுநிலச்செய்கை தொடர்பான கூட்டம் மாவட்டச்செயலகத்தினால் நடத்தப்பட வேண்டும். இக்கூட்டம் நடைபெற்ற பின்னர் இதுதொடர்பில் நடவடிக்கை எடுக்க முடியும் என அவர் தெரிவித்தார். (9-315)

# தேசிய உற்பத்தித் திறன் தொடர்பில் வவுனியாவில் விசேட கருத்தரங்கு

(குருமன்காடு)

தேசிய உற்பத்தித் திறன் தொடர்பாக வவுனியா மாவட்டத்தினை சேர்ந்த பாடசாலை அதிபர்களுக்கான கருத்தரங்கு வவுனியா மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் காலை தொடக்கம் மதியம் வரை இடம்பெற்றது.



குறித்த செயலமர்வு வவுனியா மாவட்ட செயலக தேசிய உற்பத்தி திறன் செயலகத்தினால் முன்னெடுக்கப்பட்டது. தேசிய உற்பத்தித் திறன் 2020 ஆம் ஆண்டிற்கான போட்டிக்கு விண்ணப்பம் மேற்கொள்வது தொடர்பாக அறிவுறுத்தல் வழங்குவதுடன், வவுனியா மாவட்ட பாடசாலைகள் கடந்த வருடங்களில் விண்ணப்பம் செய்வதில் அசமந்தப் போக்காக இருந்தனர்.



இதனை அதிபர்களுக்கு அறிவுறுத்தி இம்முறை போட்டிக்கு பாடசாலைகளும் விண்ணப்பிக்க வேண்டும் என்ற அரசாங்கத்தின் திட்டத்திற்கு அமைய இச் செயலமர்வு இடம்பெற்றிருந்தது. இதில் பாடசாலை அதிபர்கள், வலயக் கல்வித் திணைக்கள உத்தியோகத்தர்கள், ஆசிரியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (9-250)



முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் இ.சாள்ஸ் நிர்மலநாதனின் நிதி ஒதுக்கீட்டில் புனரமைக்கப்பட்ட மன்னார் ஈச்சளவக்கை கிராமத்தின் முதலாவது தார் வீதி நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது. அத்தோடு ஈச்சளவக்கை விளையாட்டுக் கழகத்திற்கான உபகரணங்களும் வழங்கி வைக்கப்பட்டன. (படம்:- மன்னார் செய்தியாளர்)

# இலவச மருத்துவ முகாம்

(நெளுக்குளம்)

இலங்கையில் பரவி வரும் சிறுநீரக நோய் தொடர்பான பிரச்சினைகளுக்கு தீர்வு பெறும் வகையில் வவுனியா வர்த்தகர் சங்கம், நாட்பட்ட சிறுநீரக நோய் தடுப்பு பிரிவினருடன் இணைந்து நடத்தும் இலவச மருத்துவ பரிசோதனை முகாம் இன்று காலை 9 மணி தொடக்கம் வவுனியா முதலாம் குறுக்குத் தெருவில் அமைந்துள்ள வர்த்தக சங்க அலுவலகத்தில் இடம்பெறவுள்ளதாக வர்த்தக சங்கம் அறிவித்துள்ளது. பயனாளர்கள் உங்கள் வரவை முன்கூட்டியே 024 222 5479, 076 662 8386 ஆகிய தொலைபேசி இலக்கங்கள் மூலம் உறுதிப்படுத்துமாறு வர்த்தக சங்கத்தினர் கேட்டுக்கொண்டுள்ளனர். (9-299)

# கரைச்சியிலுள்ள கிராமங்களுக்கு இரு நாட்களுக்கு ஒரு தடவை

## குடிநீர் விநியோகம்

(கண்டாவளை)

கிளிநொச்சி கரைச்சிப்பிரதேச சபைக்குட்பட்ட அறிவியல் நகர் செருக்கன் உள்ளிட்ட ஐந்திற்கும் மேற்பட்ட கிராமங்களுக்கு தற்போது இரண்டு நாட்களுக்கு ஒருதடவை 18 ஆயிரம் லீற்றர் குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருவதாக கரைச்சிப்பிரதேச சபையின் செயலாளர் சண்முகதாசன் தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்டத்தின் குறிப்பிட்ட சில பகுதிகளில் தற்போது வறட்சி நிலை காணப்படுகின்றது. இவ்வாறான பகுதிகளுக்கு கரைச்சிப்பிரதேச சபையினால் குடிநீர் விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இதுபற்றி கருத்துத்தெரிவித்த பிரதேச சபையின் செயலாளர் கிளிநொச்சி கரைச்சிப்பிரதேச சபைக்குட்பட்ட அறிவியல் நகர், பொன்னகர் வடக்கு ஆகிய கிராமங்களுக்கும் இரண்டு நாட்களுக்கு ஒரு தடவை 12 ஆயிரம் லீற்றர் குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருகின்றது. அதேபோல செருக்கன் கிராமம் மற்றும் சாளம்பன் பன்னாங்கண்டி ஆகிய கிராமங்களுக்கு இரண்டு நாட்களுக்கு ஒருதடவை ஆறாயிரம் லீற்றர் தண்ணீர் விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

இவ்வாறு இரண்டு நாட்களுக்கு ஒருதடவை 18 ஆயிரம் லீற்றர் தண்ணீர் குடிநீருக்காக விநியோகிக்கப்பட்டு வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (9-315)

# செயலிழந்த நிலையிலுள்ள முக்கொம்பன் பால் சேகரிப்பு நிலையம்



(அக்கராயன்)


கிளிநொச்சி பூநகரி முக்கொம்பன் பால் சேகரிப்பு நிலையம் தற்போது செயலிழந்த நிலையில் காணப்படுகின்றது. 2016 ஆம் ஆண்டு கனடா அரசின் நிதி உதவியுடன் அமைக்கப்பட்ட பால் சேகரிப்பு நிலையம் தொடக்கத்தில் 100 லீற்றர் வரை பால் கொள்வனவு இடம்பெற்றது.


பூநகரியின் நேரடம்பன், அரசபுரம், சின்னப்பல்லவராயன்கட்டு, முக்கொம்பன், கிளிநொச்சியின் கண்ணகைபுரம் கிராமங்களின் கால்நடை வளர்ப்பாளர்கள் குறித்த பால் சேகரிப்பு நிலையத்தில் பாலினை வழங்கி வந்த நிலையில் தற்போது 20 லீற்றருக்கு குறைவான பாலினையே குறித்த சேகரிப்பு நிலையத்தில் சேகரிக்கப்படுகிறது.

குறித்த பால் சேகரிப்பு நிலையம் பூநகரி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தினரால் நடத்தப்பட்டு வருகின்றது. இப்பால் சேகரிப்பு நிலையத்தினை விட பிற இரு சங்கங்களினால் கூடுதலான விலையில் பால் கொள்வனவு இடம்பெறுவதன் காரணமாகவே குறித்த பால் சேகரிப்பு நிலையம் செயலிழப்பதற்கு காரணமாக உள்ளது. குறித்த நிலையத்தின் வளர்ச்சிக்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என இக்கிராமங்களைச் சேர்ந்த மக்களினால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (9-350)

# பாரதம்

## ஜிசற்-1 விண்ணில் ஏவுவதை ஒத்திவைத்தது இஸ்ரோ





(ஸ்ரீஹரிகோட்டா)

ஜிசற்-1 என்ற (GISAT-1 ) செயற்கைக்கோள் நேற்று விண்ணில் செலுத்தத் திட்டமிட்டிருந்தது. இந்நிலையில் தொழில்நுட்பக் காரணங்களால் பிற்போடப்பட்டுள்ளதாக இஸ்ரோ அறிவித்துள்ளது.

ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரிகோட்டாவில் இருந்து ஜி.எஸ்.எல்.வி.எஃப்-10 ரொக்கெட் மூலம் விண்ணில் இந்த செயற்கைக் கோளை விண்ணில் செலுத்தத் திட்டமிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

நாட்டின் பாதுகாப்பு, தகவல் தொடர்பு உள்ளிட்ட ஆய்வுகளுக்கான செயற்கைக் கோள்களை இஸ்ரோ நிறுவனம், பி.எஸ்.எல்.வி. மற்றும் ஜி.எஸ்.எல்.வி. வகை ரொக்கெட்டுகளின் உதவியுடன் விண்ணில் செலுத்தி வருகிறது.

இதன்படி தற்போது புவிக் கண்காணிப்பு, கடல் ஆய்வு, விவசாயம் உள்ளிட்டவற்றிற்குப் பயன்படும், 'ஜிசற்-1' என்ற அதிநவீன செயற்கைக்கோளை இஸ்ரோ வடிவமைத்துள்ளது.

மொத்தம் 2,268 கிலோ எடை கொண்ட ஜிசற்-1 செயற்கைக் கோளில் பொருத்தப்பட்டுள்ள நவீன கமராக்கள், புவியின் பரப்பை மிகத் துல்லியமாக படம் எடுத்து இஸ்ரோவின் கட்டுப்பாட்டு மையத்திற்கு அனுப்பும்.

மேலும் வானிலை நிலவரங்களைக் கண்காணித்து புயல் உள்ளிட்ட இயற்கைப் பேரிடர் காலங்களில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் உதவும்.

இந்நிலையில் இந்த செயற்கைக் கோளை விண்ணில் செலுத்தும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என இஸ்ரோ தெரிவித்துள்ளது. (ஜ-2)

## உலகை அச்சுறு...

## உயிரிழப்பு 328...



(பீஜிங்)

**சீனாவில் நேற்று முன்தினம் மாத்திரம் கொரோனா தொற்றுக்குள்ளான 31 பேர் உயிரிழந்துள்ளதுடன், 139 பேர் வைரஸ் தொற்றுக்குள்ளான நிலையில் அடையாளம் காணப்பட்டுள்ளதாக சீன அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.**

அத்துடன் சீனாவில் கொரோனா தொற்றுக்குள்ளான 52,045 நோயாளிகள் குணமடைந்து வைத்தியசாலைகளிலிருந்து வெளியேறியுள்ளதாகவும் சீனாவின் தேசிய சுகாதார ஆணையகம் சுட்டிக்காட்டியுள்ளது. கொரோனாவினால் பாதி... பரப்... 14.4...

## 15,000 பங்களாதேசத்தவர்களுக்கு இந்தியக் குடியுரிமை வழங்கியது அரசு

(டில்லி)

கடந்த 5 ஆண்டுகளில் சுமார் 15 ஆயிரம் பங்களாதேஷை சேர்ந்தவர்களுக்கு இந்திய குடியுரிமை வழங்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

குறித்த தகவலை மத்திய உள்துறை இணையமைச்சர் நித்யானந்த் ராய் நாடாளுமன்றில் அறிவித்தார்.

கடந்த 2014 ஆம் ஆண்டு முதல், ஐந்து நாடுகளை சேர்ந்த 19 ஆயிரம் பேருக்கு குடியுரிமை வழங்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார். அதில் பங்களாதேஷை சேர்ந்த அதிகமானவர்கள் உள்ளடங்கியுள்ளதாக அவர் சுட்டிக் காட்டினார்.

இந்தியக் குடியுரிமைத் திருத்தச் சட்டத்திற்கு எதிரான போராட்டங்கள் வலுவடைந்து வன்முறையாக உருவெடுத்தது. இதன் விளைவாக 40 இற்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்தனர்.

தற்போது குறித்த பகுதிகளில் சுமுக நிலை திரும்பி வருகின்றது. இந்நிலையில், மத்திய அமைச்சர் நாடாளுமன்றில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-2)

## ஒருபுறம் புடினுடன் சந்திப்பு மறுபுறம் ட்ரம்பிடம் ஆயுத உதவி

### துருக்கி ஜனாதிபதி வியூகம்



(அங்காரா)

சிரியப் போர் உச்சத்தை அடைந்துவரும் நிலையில், ஒரு பக்கம் ட்ரம்பிடம் ஆயுத உதவி கேட்டுள்ள துருக்கி ஜனாதிபதி மறுபக்கம் ரஷ்ய ஜனாதிபதி புடினை இன்று மொஸ்கோவில் சந்தித்து ஆலோசனை நடத்தவுள்ளார். சிரியாவில் கிளர்ச்சியாளர்களின் கட்டுப்பாட்டில் இருக்கும் மிகவும் முக்கிய இடமான இட்லிப் மாகாணத்தை கைப்பற்ற அந்நாட்டு அரசுப்படைகள் தீவிர முயற்சிகள் மேற்கொண்டு வருகின்றன.

கிளர்ச்சியாளர்கள் குழுக்கள் மீதும் ரஷ்யா உதவியுடன் சிரிய இராணுவம் தாக்குதல் நடத்தி வருகிறது. ஆனால், கிளர்ச்சியாளர்களுக்கு துருக்கி ஆதரவு அளித்து வருகிறது. இதற்கிடையில் உள்நாட்டுப்போரில் ஆரம்பித்த போர் தற்போது நாடுகளுக்கு இடையேயான பெரும் போராக உருவெடுத்து வருகிறது.

கடந்த சில வாரங்களாக நடைபெற்றுவரும் போரில் சிரியா மற்றும் துருக்கி என இரு தரப்பிலும் 50 இற்கும் அதிகமான இராணுவ வீரர்கள் உயிரிழந்தனர். சிரிய போர் விமானத்தை துருக்கி படைகள் சுட்டுவீழ்த்துவதும் அதற்கு பதில் தாக்குதலும் என போர் நீண்டுகொண்டே போவதால் போர்ப் பதற்றம் மேலும் அதிகரித்துள்ளது.

இந்தப் போரில் சிரியப் படைகளுக்கு ஆதரவு அளிக்கும் ரஷ்யா, கிளர்ச்சியாளர்களையும் துருக்கிப் படைகளையும் குறிவைத்து அதிரடித் தாக்குதல்களை நடத்தி வருகிறது. இதற்கிடையில், துருக்கி தலைநகர் அங்காராவில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அந்நாட்டு ஜனாதிபதி தாயிப் எர்டோகன் "சிரிய போருக்கு அதிக ஆயுதம் தேவைப்படுவதால் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் எங்களுக்கு தேவையான உதவிகளை செய்யவேண்டும்" என வேண்டுகோள் விடுத்தார். .

இந்நிலையில், சிரிய விவகாரம் தொடர்பாக ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினை துருக்கி ஜனாதிபதி தாயிப் எர்டோகன் இன்று மொஸ்கோவில் சந்திக்கவுள்ளார். இந்த சந்திப்பின் போது இட்லிப் மாகாணத்தில் நடைபெற்று வரும் தாக்குதல்களை ரஷ்யா உடனடியாக நிறுத்தவேண்டும் என வேண்டுகோள் விடுக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-2)

## குடியுரிமை திருத்தச் சட்ட விவகாரம்; போராடுபவர்களை கைது செய்ய உத்தரவு

(சென்னை)

திருப்பூரில் குடியுரிமை திருத்த சட்டத்திற்கு எதிராக அனுமதியின்றி போராடுபவர்களை கைது செய்ய சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

குடியுரிமை திருத்தச் சட்டத்திற்கு எதிராக நாடு முழுவதும் பல்வேறு இடங்களில் போராட்டம் நடைபெற்று வருகின்ற நிலையில், திருப்பூரில் போராட்டங்கள் முன்னெடுக்கப்படுவதால் போக்குவரத்து பாதிக்கப்படுவதாக நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

குறித்த வழக்கு நேற்று வியாழக்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட நிலையில் மேற்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதன்போது அனுமதியின்றி போராடுபவர்கள் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்ட நிலையில், கைது நடவடிக்கை எடுக்காதது ஏன்? போராட்டக்காரர்களை அப்புறப்படுத்தாதது ஏன்? என நீதிபதிகள் கேள்வி எழுப்பியுள்ளனர். (ஜ-2)

## கொரோனா வைரஸ் தாக்கத்தின் எதிரொலி கலிபோர்னியாவில் அவசரநிலை பிரகடனம்

(கலிபோர்னியா)

கலிபோர்னியா மாநிலத்தில் அவசரகால நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. கொரோனா வைரஸ் தாக்கத்தினால் முதல் மரணம் பதிவானதைத் தொடர்ந்து குறித்த அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

சீனாவின் ஹூபே மாகாணத்தில் பரவிய கொரோனா வைரஸ், தற்போது பல நாடுகளையும் அச்சுறுத்தி வருகிறது.

குறிப்பாக இத்தாலி, இந்தியா போன்ற நாடுகள் குறித்த வைரஸின் தாக்கத்தினால், பெரிதும் பாதிப்புக்குள்ளாகி வருவதாக அந்நாட்டு சுகாதார தலைமை நிறுவனங்கள் அறிவித்துள்ளன.

அதுமட்டுமல்லாமல், குறித்த வைரஸ் பிரித்தானியாவின் பல பகுதிகளையும் அச்சுறுத்தி வரும் அதேவேளை, குறித்த கொரோனா வைரஸின் தாக்கத்தில் இருந்து மக்களை காத்துக்கொள்வதற்கு ஏதுவான வழிமுறைகளை மக்கள் பின்பற்றுமாறு பிரித்தானிய அரசாங்கத்தால் அறிவுறுத்தப்பட்டு வருகின்றது.

குறித்த மரணமானது அமெரிக்காவின் கலிபோர்னிய மாநிலத்தில் கொரோனா வைரஸ் தாக்கத்தினால் நிகழ்ந்த முதல் மரணமாக பதிவாகியுள்ளது.

இந்நிலையில், அம்மாநிலத்தில் அவசரகால நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இதேவேளை நாடளாவிய ரீதியில் கொரோனா வைரஸ் பரிசோதனைகளை மேற்கொள்ளுமாறு வெள்ளை மாளிகை அறிவுறுத்தல் விடுத்துள்ளது.

ஏற்கனவே அமெரிக்காவின் 16 மாகாணங்களைச் சேர்ந்த 150 பேர் குறித்த வைரஸ் தாக்கத்துக்கு இலக்காகியுள்ளதுடன் 11 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-2)

# வெளிநாடு

# ...சுறுத்தும் கொரோனா; 3283 ஆக அதிகரிப்பு



பாதிக்கப்பட்டோர்- சீனாவின் பிரதான நிலப் பரப்புகளில்: 80,409, சீனாவுக்கு வெளியே: 14,498, சர்வதேச ரீதியில்: 94, 907. கொரோனாவினால் உயிரிழந்தோர்- சீனாவின் பிரதான நிலப் பரப்புகளில்: 3,012, சீனாவுக்கு வெளியே: 271, சர்வதேச ரீதியில்: 3,283 என சீனாவின் தேசிய சுகாதார ஆணையாளர் சுட்டிக்காட்டியுள்ளது. (ஐ-2)

## இத்தாலியில் கொரோனா 107 பேர் உயிரிழப்பு!

(ரோம்)

கொரோனா வைரஸ் தாக்கம் காரணமாக இத்தாலியில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 107 ஆக அதிகரித்துள்ளது.

இதனையடுத்து, இத்தாலியில் உள்ள அனைத்து பாடசாலைகள் மற்றும் பல்கலைக்கழகங்களையும் உடனடியாக மூடுவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

கொரோனா வைரஸ் தாக்கம் சடுதியாக அதிகரித்ததை அடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கடந்த 24 மணிநேரத்தில் மாத்திரம் 28 பேர் உயிரிழந்துள்ளதாக சுகாதாரப் பிரிவு தெரிவித்துள்ளது.

குறைந்த பட்சம் எதிர்வரும் 15 ஆம் திகதி வரை அனைத்து பல்கலைக்கழகங்களும் மூடப்பட்டிருக்கும் என இத்தாலி கல்வி அமைச்சர் லூசியா அஸ்ஸோலினா அறிவித்தார்.

இதேவேளை, இத்தாலியில் கொரோனா வைரஸ் தாக்கத்தினால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை 3 ஆயிரத்து 89 ஆக உயர்ந்துள்ளது. (ஐ-2)

### சீனா புறக்கணிப்பு

## இந்தியா பக்கம் திரும்பும் வெளிநாட்டு முதலீடுகள்

(பீஜிங்)

சீனாவில் கொரோனா வைரஸ் தாக்குதல் ஏற்படுத்தியுள்ள தாக்கத்தை சரியாகப் பயன்படுத்தினால் கோடிக்கணக்கான வெளிநாட்டு முதலீட்டை இந்தியாவால் கவர முடியும் என வர்த்தகப் பொருளாதாரத் துறை நிபுணர்கள் தெரிவித்தனர். கொரோனாத் தொற்றை அடுத்து சீனாவில் தங்களது முதலீடு மற்றும் உற்பத்தியை நிறுத்தத் தொடங்கியுள்ள வெளிநாட்டு நிறுவனங்கள் தங்கள் பார்வையை வேறு நாடுகளை நோக்கித் திருப்பியுள்ளன.

பிரமாண்டமான நிலப்பரப்பு மற்றும் கோடிக்கணக்கான மக்கள் இருப்பதால் இந்தியா ஏற்கனவே ஏற்றுமதிக்கு உகந்த நாடாக பல நிறுவனங்களால் கருதப்படுகிறது. இந்த நிலையில் சீனாவில் ஏற்பட்டுள்ள நோய்த் தொற்றால், உற்பத்திக்கான நாடாகவும் இந்தியாவை அந்த நிறுவனங்கள் பார்க்கத் தொடங்கியுள்ளன.

இந்தத் தருணத்தில் தடையற்ற மின்சாரம், கட்டமைப்பு வசதிகள், ஒற்றை சாரள முறை உரிமம் உள்ளிட்டவற்றை இந்தியா வழங்கினால் பெருமளவிலான அந்நிய முதலீட்டை ஈர்க்க முடியும். இதனிடையே, UBS என்ற நிறுவனம் கடந்த டிசம்பர் மற்றும் ஜனவரி மாதங்களில் நடத்திய ஆய்வில் 450 இற்கும் அதிகமான வெளிநாட்டு நிறுவனங்கள் சீனாவில் இருந்து தங்களது உற்பத்தியை இதர நாடுகளுக்கு மாற்றத் திட்டமிட்டிருப்பது தெரியவந்துள்ளது. (ஐ-2)

## செல்லப்பிராணிகள் இறக்குமதிக்கு தற்காலிக தடை விதித்த உக்ரேய்ன்

(பீஜிங்)

சீனாவிலிருந்து செல்லப்பிராணிகளை இறக்குமதி செய்வதற்கு உக்ரேய்ன் அரசாங்கம் தடை விதித்துள்ளது.

ஹொங்கொங்கில் நாய் ஒன்றுக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டதையடுத்தே இந்தத் தடை விதிக்கப் பட்டுள்ளது.

உக்ரேய்ன் அரசாங்கத்தால் வெளியிடப்பட்டுள்ள விசேட அறிவிப்பு ஒன்றிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெளியிடப்பட்டுள்ள அறிவிப்பில், 'கொரோனா நோய்க்கிருமியை உக்ரேய்னுக்கு பரப்புவதால் ஏற்படும் அபாயங்களைக் குறைக்க, உணவுப் பாதுகாப்பு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புக்கான மாநில சேவை, சீன மக்கள் குடியரசில் இருந்து 33 ஆவது பிரிவின் கீழ் செல்லப் பிராணிகளை (நாய்கள், பூனைகள் போன்றவை) மற்றும் மாமிசங்களை இறக்குமதி செய்வதை உக்ரேய்ன் தற்காலிகமாக தடை செய்துள்ளது எனத் தெரிவிக் கப்பட்டுள்ளது. (ஐ-2)

## வரலாற்றில் முதன்முறையாக தலிபானுடன் அமெரிக்க ஜனாதிபதி பேச்சுவார்த்தை

(வோஷிங்டன்)

வரலாற்றில் முதன் முறையாக அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப், தலிபான்களின் துணைத் தலைவர் முல்லா அப்துல் கானியுடன் தொலைபேசி வழியாக உரையாற்றினார்.

ஆப்கானிஸ்தானில் 2001 ஆம் ஆண்டு, ஒக்டோபர் 7 ஆம் திகதி தொடங்கிய போர் தொடர்ந்து நீடிக்கிறது. இதற்கு முடிவு கட்ட விரும்பி தலிபான்களுடன், அமெரிக்கா நேரடிப் பேச்சுவார்த்தை நடத்தியது.

இதன் பலனாக கடந்த 29 ஆம் திகதி அன்று, கட்டார் நாட்டின் தலைநகரான டோகாவில் அமெரிக்காவுக்கும் தலிபான்களுக்கும் இடையே அமைதி ஒப்பந்தம் கையெழுத்தானது.

அமெரிக்க வெளியுறவு அமைச்சர் மைக் போம்பியோ முன்னிலையில் ஏற்படுத்தப்பட்ட இந்த ஒப்பந்தத்தில் அமெரிக்கத் தூதர் ஜல்மே கலீல்ஜாத்தும், தலிபான் துணைத்தலைவர் முல்லா அப்துல் கானியும் கையெழுத்திட்டனர்.

இந்த ஒப்பந்தத்தில் தலிபான்கள் தங்கள் காவலில் உள்ள 1,000 ஆப்கானிஸ்தான் படை வீரர்களை விடுவிக்க வேண்டும், இதே போன்று ஆப்கானிஸ்தான் அரசு தனது காவலில் இருக்கிற 5,000 தலிபான்களை விடுவிக்க வேண்டும் என்று உள்ளதாக தகவல்கள் வெளிவந்தன.

ஆனால் இதுபற்றி பேச்சுவார்த்தையின்போதுதான் பேசிக்கொள்ள வேண்டுமே தவிர, இப்போது தலிபான்களை விடுவிக்க முடியாது என்று ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி அஷ்ரப் கனி கண்டிப்புடன் கூறி விட்டார். அது மட்டுமின்றி, பேச்சுவார்த்தைக்கு இதை ஒரு நிபந்தனையாகப் கூட வைக்கக் கூடாது என்று கூறி விட்டார்.

இதைத் தொடர்ந்து ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் மீண்டும் தாக்குதல்களை தொடங்கி உள்ளனர்.



இந்தப் பரபரப்புக்கு மத்தியில் வரலாற்றில் முதன் முறையாக அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப், தலிபான்களின் துணைத்தலைவர் முல்லா அப்துல் கானியுடன் கடந்த செவ்வாய்க்கிழமை தொலைபேசி வழியாக உரையாற்றினார்.

35 நிமிடம் நீடித்த இந்த பேச்சுவார்த்தையின்போது அவர், ஆப்கானிஸ்தானில் வன்முறை குறைந்ததால்தான் டோகாவில் அமைதி ஒப்பந்தம் சாத்தியமானது. எனவே அங்கு வன்முறை கூடாது என வலியுறுத்தினார்.

அமைதி ஒப்பந்தத்தை பின்பற்றும் நிலையில் ஆப்கானிஸ்தான் மக்களுக்கு அமெரிக்கா தொடர்ந்து தனது ஆதரவை அளிக்கத் தயாராக இருப்பதாகவும் அவரிடம் ட்ரம்ப் கூறினார்.

மேலும், ஆப்கானிஸ்தான் போரை முடிவுக்குக் கொண்டு வரும் வகையில் ஆப்கானிஸ்தான் அரசுடனும் மக்களுடனும் தொடர்ந்து பேச்சுவார்த்தையில் தலிபான்கள் பங்கேற்பது அவசியம் எனவும் ட்ரம்ப் குறிப்பிட்டார்.

இந்தத் தகவல்களை வோஷிங்டன் வெள்ளை மாளிகை ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இதையொட்டி, அங்கு ட்ரம்ப் நிருபர்களுக்கு பேட்டியும் அளித்தார். அப்போது அவர், "தலிபான் தலைவருடன் தொலைபேசியில் பேசினேன். இந்தப் பேச்சுவார்த்தை நல்ல முறையில் அமைந்தது" எனக் கூறினார்.

இதற்கிடையே ஆப்கானிஸ்தானில் ஹெல்மாண்ட் மாகாணத்தில் தொடர்ந்து தலிபான்கள் நடத்தி வருகிற தாக்குதல்களுக்கு பதிலடி கொடுக்கிற விதத்தில் அமெரிக்கா நேற்று முன்தினம் அங்கு வான்தாக்குதல் நடத்தியது. இந்தத் தாக்குதல் பற்றிய கூடுதல் தகவல்கள் வெளியாகவில்லை.

இருப்பினும் கடந்த 11 நாட்களில் தலிபான்கள் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தி இருப்பது இதுவே முதல்முறை என அங்கிருந்து வரும் தகவல்கள் கூறுகின்றன. (ஐ-2)

# சட்டமா அதிபர் லிவேராவின் உத்தரவு

# தேர்தலை இலக்காகக் கொண்ட சதி

## ரவி கருணாநாயக்க காட்டம்

**(கொழும்பு)**

**சட்டமா அதிபர் தப்புல டி லிவேராவால் இலங்கை மத்தியவங்கி பிணைமுறி மோசடி தொடர்பிலான சந்தேக நபர்களை கைது செய்ய உத்தரவிடப்பட்ட நிலையில் குற்றம் சாட்டப்பட்டிருக்கும் முன்னாள் நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க, இது தேர்தலை மையமாகக் கொண்டு தன் மீது மேற்கொள்ளப்படும் அரசியல் பழிவாங்கல் சதி நடவடிக்கை எனத் தெரிவித்தார்.**



முன்னாள் நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க, மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரன், பேர்பெச்சுவல் ட்ரசரீஸ் நிறுவனத்தின் தலைவர் அர்ஜுன் அலோசியஸ் உட்பட 12 சந்தேக நபர்களைக் கைது செய்யும் உத்தரவைப் பெறுமாறு சட்டமா அதிபரால் பதில் பொலிஸ்மா அதிபருக்கு ஆலோசனை வழங்கப்பட்டது.

இந்நிலையிலேயே முன்னாள் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க கொழும்பு ஊடகம் ஒன்றிற்கு மேற்கண்டவாறு தெரிவித்தார். பாராளுமன்றம் கலைக்கப்பட்டதன் பின்னராக இவ்வாறான குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளமை அரசியல் பழிவாங்கலாகும்.

நான் நிதியமைச்சராகக் கடமையாற்றிய காலத்திலிருந்து இதுவரையான காலப்பகுதியில் எனக்குக் கீழ் ஒரு வங்கியும் இருக்கவில்லை. மத்தியவங்கியும் இருக்கவில்லை.

இந்நிலையில் எவ்வாறு இந்த



குற்றச்சாட்டை முன்வைக்கின்றனர். இது தேர்தலை மையமாகக் கொண்டு உருவாக்கப்பட்ட பிரச்சினையாகும். இது எமது கட்சிக்கும் எனக்கும் எதிராகச் செய்யும் அரசியல் சதியாகும் என்றும் ரவி கருணாநாயக்க தெரிவித்தார். (இ-7)

# எரிபொருள் விலையை 15 ரூபாயினாலேனும் குறைந்த பட்சம் குறைக்க வேண்டும்

## அரசிடம் ராஜித வலியுறுத்து



(கொழும்பு)

உலக சந்தையில் எரிபொருள் விலை குறைவடைந்துள்ள நிலையிலும் கூட இந்த காபந்து அரசாங்கத்தால் அதன் பலனை நாட்டு மக்களுக்குப் பெற்றுக் கொடுக்க முடியவில்லை எனத் தெரிவித்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரட்ன, குறைந்த பட்சம் 15 ரூபாயினாலேனும் எரிபொருள் வில்லையை குறைக்குமாறு அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின். தலைமையகமான சிறிகொத்தாவில் நேற்று முன்தினம் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# தமிழ்,முஸ்லிம் மக்களின் ஆதரவை முழுமையாகப் பெற்றுக்கொள்வோம்

## எஸ்.பி.எதிர்பார்ப்பு

(கொழும்பு)

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியடைந்த மாவட்டங்களில் பொதுத்தேர்தலில் அமோக வெற்றி பெறும். தமிழ்-முஸ்லிம் மக்களின் ஆதரவை முழுமையாகக் கூட்டணியின் ஊடாகப் பெற்றுக் கொள்ள முடியும். ஐக்கிய தேசியக் கட்சி பொதுத் தேர்தலில் எச்சின்னத்தில் போட்டியிட்டாலும், இம்முறை படுதோல்வியடையும் என முன்னாள் இராஜாங்க அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்தார்.

• கொழும்பிலுள்ள ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துக் கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பாராளுமன்றம் கலைக்கப்பட்டு பொதுத்தேர்தலுக்குச் செல்வதற்கான திகதி குறிக்கப்பட்டுள்ளது. பொதுஜன பெரமுன தலைமையில் தேர்தலுக்கான செயற்திட்டங்கள் நாடு தழுவிய ரீதியில் முன்னெடுக்கப்படவுள்ளன. ஜனாதிபதித் தேர்தலில் நுவரெலியா, அம்பாறை மற்றும் திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன வெற்றி பெறவில்லை. அதற்குப் பல்வேறு அரசியல் காரணிகள் செல்வாக்குச் செலுத்தின.

ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியடைந்த மாவட்டங்களில் இம்முறை எம்மால் வெற்



றிப் பெறமுடியும். நுவரெலியா மாவட்டத்தில் ஒரு இலட்சத்து 2090 வாக்குகளால் பொதுஜன பெரமுன தோல்வியடைந்தது. இம்முறை இந்நிலைமை முழுமையாக மாற்றியமைக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## பிரச்சனையும் சாப்பாடும்

ஒரு ஊரிலே ஒரு ராஜா இருந்தார்.பெரிய அரண்மனையிலே தான் இருந்தார்.எல்லா வசதியும் இருந்தது.இருந்தாலும் அவரை எல்லோரும் சொல்கிறது எப்படி தெரியுமா? பிச்சைக்கார ராஜா!அப்படி ஒரு பெயர் அவருக்கு நிலைத்துவிட்டது. மக்களும் சரி... ஏனைய தேசங்களிலே உள்ளவர்களும் சரி... அவரை அந்தப் பெயர் சொல்லியே குறிப்பிடுவது வழக்கம்.இது அவருக்கு மிகவும் கவலையாகிவிட்டது."என்ன இது.நம்மளை தேடி வருகிறவர்களுக்கெல்லாம் நாம் சோறு போடுகின்றோம்.எங்களைப் புகழ்ந்து பாடல் இயற்றிக் கொண்டு வருகின்ற புலவர்களுக்கெல்லாம் அவர்கள் எப்பொழுது வந்தாலும் ஒரு வேளை சோறு போடவேண்டும் என்று உத்தரவு போட்டிருக்கின்றோம்.இவ்வளவு எல்லாம் செய்தும் எங்களைப் போய் பிச்சைக்கார ராஜா என்று எல்லோரும் சொல்கிறார்களே... அது ஏன்?எதற்காக இப்படி சொல்கிறாங்க?" ராஜாவுக்கு குழப்பம்.

"இந்த விடயத்தைப் போய் அவர்களிடம் எப்படிக் கேட்கிறது? " என்று அவருக்குத் தயக்கமாக இருந்தது! கௌரவக் குறைச்சலாகத் தெரிந்தது அவருக்கு!சரி.. சாதாரண குடிமக்களிடம் இதைப் பற்றிக் கேட்கலாமா? " என்று யோசித்தார்.கேட்கலாம்... ஆனால் அவர்கள் யாரும் ராஜா முன்னாள் வந்து நின்று தைரியமாக பேசக் கூடிய அளவுக்கு இல்லை!

ராஜாவுடன் குழப்பம் நாளுக்கு நாள் அதிமாய்ப் போச்சு! கடைசியாக அவர் ஒரு முடிவுக்கு வந்தார்.அதாவது இதைப்பற்றி ஒரு பிச்சைக்காரனிடமே கேட்டுப் பார்த்துவிட்டால் என்ன?இது தான் அவர் செய்த முடிவு.உடனே மாறுவேடம் போட்டுக் கொண்டு நகர்வலம் போனார். ஒரு பிச்சைக்காரனைக் கண்டுபிடித்தார்."இதோ பாருப்பா... நம்ம ராஜாவை எல்லோரும் '' பிச்சைக்கார ராஜா என்று சொல்கிறார்களே... அதற்கு என்ன காரணமாக இருக்கும்? அப்படி என்று கேட்டார்.அதற்கு அவன்...

" இதற்கான பதிலை இன்னும் ஒரு முப்பது நாளிலே சொல்கிறேன்! " அப்படி என்றான். உடனே இவருக்கு சந்தோசம். உண்மையை அவனிடமே சொன்னார்."நான் வேறுயாருமில்லை.. நான் தான் இந்த நாட்டு ராஜா.. இப்ப நீ என் கூடவே வந்துவிடு.. அரண்மனையிலேயே தங்கிக்கொள். முப்பது நாள் கழித்து எனக்குப் பதில் சொல்லிவிட்டு அதற்கு பின்பு நீ போகலாம்!'' என்று சொல்லி அழைத்துக் கொண்டு வந்துவிட்டார்.

அரண்மனையிலே ஒரு மூலையிலே அவன் தங்குவதற்கும் இடம் கொடுத்தார்." தினம்-இரண்டு வேளையும் இவனுக்கு சோறு போடுங்கள்! " என்று உத்தரவும் போட்டுவிட்டார்.ராஜா கொடுத்த இடத்திலே போய் உட்கார்ந்து கொண்டான் அந்தப் பிச்சைக்காரன்.தினமும் அந்த அரண்மனையிலே நடக்கிறதையெல்லாம் கவனித்து விட்டு வந்தான். வேளா வேளைக்கு சாப்பாடு வரும்.சாப்பிட்டுக் கொண்டான். இப்படி ...முப்பது நாட்கள் முடிந்தது.ராஜா வந்தார்." என்ன.. என்னுடைய கேள்விக்குப் பதில் என்ன என்று கண்டுபிடித்துவிட்டாயா? " என்றார்." கண்டுபிடித்து விட்டேன்! " என்றான்.

"என்னை எல்லோரும் பிச்சைக்கார ராஜான்னு சொல்கிறார்களே அது நியாயமாகப் படுகின்றதா எனக்கு? " என்றார்."நியாயமாத்தான் படுகிறது.. சந்தேகமில்லாமல் நீங்கள் பிச்சைக்கார ராஜா தான்! என்ன தான் நீங்கள் வசதியோடும் படைபலத்தோடும் இருந்தாலும் நீங்கள் எங்கள் வர்க்கத்தைச் சேர்ந்த ஆசாமி தான்! "அப்படி என்று அடித்து சொல்லிவிட்டான் அவன். "எதனாலே அப்படி சொல்கிறாய்? என்று இவர் கேட்டார்." அரசே.. ஒரு உண்மையைக் கண்டுபிடித்து சொல்கிறதாக நான் உங்களிடம் சொன்னேன். நீங்கள் ராஜ பரம்பரைன்ன உடனே உங்கள் கழுத்திலே கிடக்கின்ற முத்துமாலையைக் கழற்றிப் பரிசாக கொடுத்திருப்பீங்க...பொன்னையும் மணியையும் கொடுத்திருப்பீங்க.."

ஆனால் நீங்கள் அப்படி செய்யவில்லை.. என்னை ஒரு மூலையிலே உட்கார வைத்து இரண்டு வேளை சோறு போடச் சொன்னீர்கள்.உங்களைத் தேடி யார் வந்தாலும் யார் வந்து பாராட்டிப் பேசினாலும் ,அல்லது பிரச்சினைகளைச் சொன்னாலும் நீங்கள் செய்கின்ற ஒரே காரியம் சோறு போடுவது தான். பிச்சைக்காரனுக்கு சோறுமட்டும் தான் உலகம்.'' உங்க விடயத்திலேயும் நீங்கள் அப்படித்தான் நினைப்பதாகத் தெரிகிறது.நன்றாக கவனியுங்கள்! எந்த ஒரு பிரச்சினைக்கும் சோறு தான் முடிவு என்று நினைக்கிறீர்கள் பாருங்கள்... நீங்கள் சந்தேகமில்லாமல் எங்களைச் சேர்ந்த ஆளுதான்! " அப்படி என்றான் அந்தப் பிச்சைக்காரன்.

அதற்குப் பின்பு அந்த ராஜா தன்னுடைய தவறுகளைத் திருத்திக் கொண்டான்.பசி என்று வருகின்றவர்களுக்கு சோறு தான் போடவேண்டும். அது தப்பில்லை! பாராட்ட வருபவர்களெல்லாம் சோற்றையே போட்டு அனுப்பினால்.. இப்படித்தான் பேர் வரும்!எனக்குத் தெரிந்த ஒருத்தர்.. தினமும் யாராவது ஒருத்தரைத் தனது வீட்டுக்கு அழைத்துக் கொண்டு போவார். சாப்பாடு போட்டு அனுப்புவார். முன்னறிவிப்பு இல்லாமலே திடீரென்று ஒரு விந்தாளியோடு வீட்டிலே போய் இவர் நிற்பது வழக்கம்.அந்த அம்மாவும் இவருக்காக தயார் செய்து வைத்திருந்ததை இவர் அழைத்துக் கொண்டு வந்திருக்கும் விருந்தாளிக்கு போட்டு அனுப்புவார்.

விருந்தாளி சாப்பிட்டு போனதற்கு பின்பு இவர் மனைவியிடம் ' உனக்கு சிரமம் வேண்டாம் ' என்று சொல்லி பக்கத்திலே உள்ள ஒரு கோட்டலுக்குப் போய் காசு கொடுத்து சாப்பிட்டு விட்டு வந்துவிடுவார். பலநாள் இப்படி நடக்கும்.ஒரு நாள் அவரைத் தனியாக கூப்பிட்டுக் கொண்டு போய் "ஏன் இப்படி செய்கின்றீர்கள்?" என்று கேட்டேன். எங்கள் வீட்டு சாப்பாட்டிலேயிருந்து தப்பிக் கொள்வதற்கு எனக்கு வேறு வழி எதுவும் தெரியவில்லை சார்.." அதனாலே தான் இப்படி செய்கின்றேன்! "அப்படி என்கின்றார் மிகவும் பரிதாபமாக!

# ரணிலை இனியும் நம்பினால் ஐ.தே.க. அழிவைச் சந்திக்கும்

## சுஜீவ சுட்டிக்காட்டு

**(கொழும்பு) ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் செயற்குழுவின் தீர்மானம் தொடர்பில் தாம் அவதானம் செலுத்தப் போவதில்லை என்றும் அவர்கள் கூறுவதைப் போன்று செயற்பட்டால் ஐ.தே.க. அழிவைச் சந்திக்க நேரிடும் என்றும் தெரிவித்த ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுஜீவ சேனசிங்க, முன்னாள் எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவின் தலைமையில் உருவாக்கப்பட்ட ஐக்கிய மக்கள் சக்தியின் வெற்றிக்கு அனைவரையும் ஒத்துழைக்குமாறும் கேட்டுக் கொண்டார்.**

இதேவேளை ஐ.தே.கவின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான நவீன் திஸாநாயக்க மற்றும் முன்னாள் சபாநாயகர் கருஜெயசூரிய உள்ளிட்ட ஊழல் குற்றச்சாட்டுகளற்ற சிரேஷ்ட உறுப்பினர்களை தம்முடன் இணைந்து பயணிக்குமாறும் அழைப்பு விடுத்தார்.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுஜீவ சேனசிங்கவின் இல்லத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பின் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வரலாற்றுச் சிறப்புமிக்க பழைமைவாய்ந்த கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியைப் பாதுகாக்க வேண்டியது ஐ.தே.க. உறுப்பினர்களின் கடமையாகும். குறிப்பிட்ட காலமாக ஐக்கிய தேசியக் கட்சியால் ஒரு ஜனாதிபதியை உருவாக்க முடியாமல் போயுள்ளது.


இதனைக் கருத்திற் கொண்டே கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது ஐ.தே.க. உறுப்பினர் ஒருவரை களமிறக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பில் சஜித் பிரேமஸாவை நாங்கள் களமிறக்கியிருந்தோம்.

இருந்த போதிலும் அவரால் வெற்றியடைய முடியாமல் போயுள்ளது. அவரது தோல்விக்கு எமது கட்சியைச் சேர்ந்த சிலரின் செயற்பாடுகளும் பிரதான காரணங்களாகும்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரான ரணில் விக்கிரமசிங்க தொடர்ந்தும் தலைமைத்துவத்தை தம்வசம் தக்கவைத்துக் கொண்டே செயற்படுகின்றார்.

26 வருடங்களாக அவரே தலைவராக இருந்து வருவதுடன் தலைமைத்துவத்தில் மாற்றத்தை ஏற்படுத்தவும் இடமளிக்காமல் இருக்கின்றார்.

இவ்வாறான நிலைமை ஜனநாயகத் தன்மையற்றதாகும். தொடர்ந்தும் தோல்வியை எதிர்கொண்டு வரும் ஐக்கிய தேசியக் கட்சியை வெற்றியின் பாதைக்கு இட்டுச் செல்வதற்காக நாங்கள் எடுக்கும் முயற்சிகளுக்கும் அவர் இடமளிப்பதாகத் தோன்றவில்லை. தற்போதைய அரசாங்கத்தை விமர்சிக்கக்கூடிய பலம்வாய்ந்த எதிர்க்கட்சியை உருவாக்குவதே எமது பிரதான நோக்கமாகும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)





# போக்குவரத்தை ஒழுங்குபடுத்த பொலிஸாரால் முடியாதா?

## சமன் ரத்னபிரிய கேள்வி



(கொழும்பு)

வாகனப் போக்குவரத்தை ஒழுங்குபடுத்தும் நடவடிக்கைகளில் இராணுப் பொலிஸார் ஈடுபடுத்தப் பட்டுள்ளனர். அவ்வாறாயின் பொலிஸ் பிரிவு செயலிழந்துள்ளதா? என்பதை பதில் பொலிஸ்மா அதிபர் நாட்டு மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சமன் ரத்னபிரிய கோரிக்கை விடுத்தார்.

அதேவேளை நாட்டு மக்களுக்கு சலுகை வழங்கும் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான நிதியை எமது அரசாங்கம் ஏற்கனவே ஒதுக்கியிருந்தது. இந்நிலையில் நிதிப்பற்றாக்குறை நிலவுவதாகக் கூறிக் கொள்கின்றனர். அவ்வாறாயின் நாம் ஒதுக்கிய நிதி எங்கு சென்றது? எனவும் அவர் கேள்வி எழுப்பினார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் ஆட்சிக்கு வந்து 100 நாட்கள் நிறைவடைந்துள்ள நிலையில் அரசாங்கம் பொய்யான பாதையிலேயே பயணிக்கின்றது.

நாட்டின் வளங்களை வெளிநாட்டிற்கு விற்கமாட்டோம் எனக் கூறிக்கொண்டு ஆட்சிக்கு வந்த அரசாங்கம் நாட்டின் வளங்களை வெளிநாடுகளுக்கு விற்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றது. இராணுவ ஆட்சியை உருவாக்கும் செயற்பாடுகளும் இடம்பெற்று வருகின்றன.

நாட்டு மக்களுக்கு தேவையான சலுகைகளை வழங்கத் தேவையான நிதியை எமது அரசாங்கம் ஏற்கனவே ஒதுக்கியிருந்தது. இந்நிலையில், மருந்துப்பொருட்களை கொள்வனவு செய்ய முடியாத நிலைமை காணப்படுவதாகக் கூறுகின்றனர். அவ்வாறாயின் அந்த நிதி எங்கு சென்றது?

போதைப்பொருள் பாவனையைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பதாகக் கூறிக்கொண்டு பாடசாலைகளில் பொலிஸாரை நிறுத்தும் நடவடிக்கைளை இந்த அரசாங்கம் மேற்கொண்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)


# மருதனார்மடத்தில் மகளிர் தினம்


(யாழ்ப்பாணம்)

தேசிய சேமிப்பு வங்கி சுன்னாகம் கிளையால் மகளிர் தின நிகழ்வுகள் எதிர்வரும் 11 ஆம் திகதி காலை 9 மணியளவில் மருதனார்மடம் நுண்கலைப் பீடத்தில் நடைபெறவுள்ளது. (இ-2)

# இலங்கையின் புராதன விடயங்களை சித்திரிக்கும் சுவரோவியங்கள் திறப்பு



(மட்டக்களப்பு)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் ஆலோசனையிலான 'நாட்டை அழகுபடுத்தும் சுவரோவியங்கள்' கருப்பொருளின் கீழ் மட்டக்களப்பு மாவட்டத்தில் முதல் ஓவியம் திறந்து வைக்கப்பட்டது. ஜனாதிபதியின் இந்த திட்டத்தின் கீழ் மட்டக்களப்பு மாவட்டத்தில் மூன்று பிரதேசங்களில் சுவர் ஓவியம் வரையும் திட்டம் மேற்கொள்ளப்பட்டது.

மட்டக்களப்பு நகரிலுள்ள பொலிஸ் விடுதி மதில்கள், வந்தாறுமுலை கிழக்குப் பல்கலைக் கழகத்தின் சுவர்கள், மற்றும் மட்டக்களப்பு நகரின் புறநகர்ப் பகுதியான பிள்ளையாரடி பிரதேசத்தில் அமைந்துள்ள வீதி அபிவிருத்தி அதிகார சபையின் சுற்று மதில்களில் இந்த ஓவியங்கள் வரையும் நடவடிக்கைகள் முன்னெடுக் கப்பட்டு வந்தன.

இதனடிப்படையில் பிள்ளையாரடி பிரதேசத்தில் அமைந்துள்ள வீதி அபிவிருத்தி அதிகார சபையின் சுற்று மதிலில் அமைக்கப்பட்டிருந்த ஓவியங்கள் நேற்று வியாழக்கிழமை காலை திறந்து வைக்கப்பட்டன.


இதில் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள புராதன, சரித்திரப் பிரசித்தி பெற்ற இடங்கள் அமைக்கப்பட்ட காலத்தினை சித்தரிக்கின்ற ஓவியங்கள் வரையப்பட்டிருந்தன.

நிறைவேற்று பொறியியலாளர் ஏ.சசிநந்தன் தலைமையில் நடைபெற்ற இந்தத் திறப்பு விழாவில் பிரதம விருந்தினராக வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கிழக்கு மாகாணப் பணிப்பாளர் பொறியியலாளர் கே. சிவநாதன், சிறப்பு விருந்திரனராக வீதி அபிவிருத்தி அதிகார சபையின் மட்டக்களப்பு மாவட்ட பிரதான பொறியியலாளர் திருமதி கே. வன்னியசிங்கம் மற்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், பொதுமக்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர். (ஐ)

# 13வது திருத்தமும் மாகாண சபைகளின் நிதி நிர்வாகமும்

13

கலாநிதி க.தவலிங்கம், தவிசாளர் -எல்லை நிர்ணய ஆணைக்குழு, ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



**மாகாணசபைகள் சட்டத்தின் பிரிவு 28(2)-**

25 ஆம், 26 ஆம் மற்றும் 27 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகள், ஏதேனும் அத்தகைய கூற்று அத்துடன் செலவினம் அல்லது கோரிக்கை தொடர்பிலும் அத்தகைய செலவினத்தை ஈடுசெய்வதற்கு மாகாணத்தின் மாகாண நிதியத்திலிருந்து பணங்களை ஒதுக்கீடு செய்வதற்கு அல்லது அத்தகைய கோரிக்கை தொடர்பில் மானியக் கொடைக்கு, அவை அதன் கண் குறிப்பிடப்பட்ட ஆண்டு நிதிக்கூற்று அத்துடன் செலவினம் என்பன தொடர்பில் பயனுறுகின்றவாறு அதிகாரமளித்து ஆக்கப்படவுள்ள ஏதேனும் நியதிச் சட்டம் தொடர்பாகவும் அல்லது மானியக் கொடை ஒன்றுக்கான கோரிக்கை தொடர்பாகவும் அத்துடன் அத்தகைய செலவினத்தை அல்லது மானியக் கொடையை ஈடுசெய்வதற்கு மாகாணத்தின் மாகாண நிதியத்திலிருந்து பணங்களின் ஒதுக்கீட்டிற்கு அதிகாரமளிப்பதற்கென ஆக்கப்படவுள்ள நியதிச் சட்டம் தொடர்பாகவும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

**கணக்குகள் மீதான வாக்குப்பணங்கள் - மாகாணசபைகள் சட்டத்தின் பிரிவு 29**

**1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தின் பிரிவு 29(1)** - இப்பாகத்தின் முற்போந்த ஏற்பாட்டில் உள்ளது. எது எப்படியிருப்பினும் மானியக்கொடை அளிக்கப்பட்டு நாலு மாத காலத்தினுள் அத்தகைய செலவினம் தொடர்பில் 27 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க நியதிச் சட்டங்களை நிறைவேற்றுவதற்கும் அத்தகைய மானியக் கொடைகளில் வாக்களிப்புக்கென 26 ஆம் பிரிவில் விதித்துரைக்கப்பட்ட நடைமுறையைப் பூர்த்திசெய்வதைப்பொறுத்து ஏதேனும் நிதியாண்டின் ஒரு பாகத்திற்கென மதிப்பிடப்பட்ட செலவினத்தின் தொடர்பாக ஏதேனும் மானியக் கொடையை முன்னரே வழங்குவதற்கு மாகாண சபைக்குத் தத்துவமிருத்தல் வேண்டும். அத்துடன் மானியக் கொடை எந்நோக்கங்களுக்கென அளிக்கப்பட்டதோ அந்நோக்கங்களுக்கென மாகாணத்தின் மாகாண நிதியத்திலிருந்து பணத்தை மீளப்பெறுவதற்கு நியதிச் சட்டம் மூலம் அதிகாரமளிப்பதற்கு மாகாண சபைக்குத் தத்துவம் இருத்தல் வேண்டும்.

**1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தின் பிரிவு 29(2)** - இருபத்தாறாம், 27 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகள் (1) ஆம் உட்பிரிவின் கீழ் ஏதேனும் மானியக் கொடையை அளித்தல் தொடர்பாக அல்லது ஆண்டு நிதிக்கூற்றில் குறிப்பிடப்பட்ட ஏதேனும் செலவு தொடர்பாக மானியக் கொடையொன்றை அளிப்பது தொடர்பாக அவை பயனுடையதாக இருக்கின்றவாறாக அவ்வுட்பிரிவின்கீழ் ஆக்கப்பட வேண்டிய நியதிச் சட்டம் தொடர்பாகவும் அத்தகைய செலவை ஈடுசெய்வதற்கு மாகாணத்தின் மாகாண நிதியத்திலிருந்து பணத்தினை ஒதுக்கீடு செய்வதற்கு அதிகாரமளிப்பதற்கென ஆக்கப்பட வேண்டிய நியதிச் சட்டம் தொடர்பாகவும் பயனுடையனவாதல் வேண்டும்.

**நிதி சம்பந்தமான மாகாணத் திறைசேரியின் கடமைகளும் நடவடிக்கைகளும்**

மாகாணத் திறைசேரியானது அமைச்சுகளுக்கு மூலோபாய நிதி உதவிகளை வழங்குவதன் மூலமும் நிதி வளங்கள் கிடைக்கப்பெறுகின்ற தன்மையை விருத்தி செய்வதன் மூலமும் மாகாணத்திலே எதிர்பார்க்கப்பட்ட சமூக, பொருளாதார மற்றும் நல்லாட்சியின் விளைவுகளை எய்துவதிலே பெரும்பங்கு வகிக்கிறது. இது மாகாணத்தின் கடன் பெறல் மற்றும் நிதி வழங்கல் ஆகியவற்றைக் கண்காணிப்பதும் வங்கி நடவடிக்கைகள் மற்றும் பணம் என்பவற்றையும் முகாமைப்படுத்துகின்றது. இந் நடவடிக்கைகள் அனைத்து மாகாண அமைச்சுக்களுக்கும் விரிவாக்கப்பட்டுள்ளது. வரவு-செலவுத்திட்டத் திணைக்களம், கணக்கு மற்றும் கொடுப்பனவுத் திணைக்களம் போன்ற திணைக்களங்கள் ஊடாக மாகாணத் திறைசேரி தனது செயற்பாட்டை நடைமுறைப்படுத்தி வருகிறது. இதன் பிரதான விடயங்களாக மாகாண சபை நிதியத்தின் நிர்வாகம், வருமான மேம்பாடு மற்றும் சேகரிப்பிற்குரிய நிர்வாகம், நிதியத்திற்குரிய கணக்கினைப் பேணிச் செல்லுதல், வரவு-செலவு திட்டத் தயாரிப்பு மற்றும் கட்டுப்பாடு, அவசரமான எதிர்பாராத சந்தர்ப்பங்களில் தேவையான செலவுகளை மேற்கொள்ளல், நிதி நிர்வாகத்திற்கு உரிய ஆலோசனைகளை வழங்கல், செலவு கட்டுப்பாட்டிற்கு உரிய முறைகளை அறிமுகப்படுத்துதல். பெறுகை நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்துதல் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

வரவு-செலவுத்திட்டப்பிரிவின் பொதுவான செயற்பாடுகளாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

- மாகாண சபை தாபனங்களுக்கு வருடாந்தத் தேவைகள் தொடர்பான தகவல்கள் வரவழைக்கப்பட்டு அவை மீள்பார்வை செய்யப்பட்டு மதிப்பீட்டின் தேவைகள் உரிய படிவத்தின் மூலம் நிதி ஆணைக்குழுவிற்கு அனுப்புதல்.
- நிதி ஆணைக்குழுவுடன் தேவைகள் மற்றும் வருமான நிலைமை தொடர்பாக கலந்துரையாடி மானியத்தின் சிபார்சினைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்தல்.
- வருடாந்த நிதிக்கூற்று, நிதிக் கூற்றின் திருத்தம், குறைநிரப்பு மதிப்பீடு மற்றும் அதற்கு உரிய ஒதுக்கீட்டு நியதிச் சட்டங்களைத் தயாரித்து அமைச்சரவையின் அங்கீகாரம், ஆளுநரின் சிபார்சின் கீழ் சபையின் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்தல்.
- மாகாண நிதி அமைச்சருக்கு ஆணைச்சீட்டினைச் சமர்ப்பித்து செலவிற்கான அதிகாரத்தினைப் பெற்றுக் கொள்ளல்.
- காரியாலயத் தேவையினை கருத்தில் கொண்டு மதிப்பீட்டு ஏற்பாடுகளுக்குத் தேவையான திருத்தங்களுக்காக வகைமாற்றச் செயன்முறைக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல்.
- முற்பண எல்லைகளைத் திருத்துவதற்காக சபையின் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ளுதல்.
- அத்தியாவசிய மற்றும் அவசரமான அத்துடன் எதிர்பாராத சந்தர்ப்பங்களில் காரியாலயங்களுக்குத் தேவையான செலவுகளை மேற்கொள்வதற்காக பொதுச்சேவை செயற்றிட்டத்தின் கீழ் ஏற்பாட்டினை ஏற்படுத்திக் கொடுத்தல்.

கணக்கு மற்றும் கொடுப்பனவுப்பிரிவின் பொதுவான செயற்பாடுகளாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

1. பிரதம செயலாளருக்குக் கிடைக்கும் கணக்காய்வு அறிக்கைகளுக்கான தெளிவுபடுத்தலினை கணக்காளர் நாயகத்திற்குச் சமர்ப்பித்தல்.
2. மாகாண அரச கணக்குச் செயற்குழுவில் வழங்கப்படும் கட்டளைகளுக்குத் தேவையான நவடிக்கைகளை மேற்கொள்ளல்.
3. மாகாண அரச சுற்றறிக்கைகளைத் தயாரித்தல், அதற்காக ஆளுநரின் அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொள்ளுதல் மற்றும் நிதிச் சுற்றிக்கைளை வெளியிடுதல்.
4. பயணிகள் நிதிக் காப்புறுதி நடவடிக்கை.
5. நிதித் திட்டமிடல் அமைச்சின் மூலம் வெளியிடப்படும் முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தின் சுற்றறிக்கை திறைசேரியின் வழிகாட்டல் சுற்றறிக்கை, அரச வியாபாரச் சுற்றறிக்கை, அரச நிதிச் சுற்றறிக்கை மற்றும் பெறுகை நடவடிக்கைச் சுற்றறிக்கைகளை மாகாண சபைக்கு உரியதாக்கிக் கொள்ளுதல்.
6. மாதாந்த கணக்குப் பொழிப்புக்களைத் தயாரித்தல்.
7. வங்கி கணக்கு இணக்கக் கூற்றினைத் தயாரித்தல்.
8. பல தாபனங்களினது பொருட் கணக்கெடுப்பு நடவடிக்கை.
9. மாகாண வருமான திணைக்களம், கம்பனிகள் பதிவாளர் காரியாலயம், பிரதம செயலாளர் காரியாலயம், பொறியிலாளர் பணிமனை ஆகிய தாபனங்களின் திணைக்கள பெறுகைக் குழுக்களை நியமித்தல்.
10. சிறு கட்டு நிதி மற்றும் குறித்த துணைக் கட்டுநிதிக்கான அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொடுத்தல்.
11. மாகாண நிதிப் பிரமாணம் 83 இன் கீழ் அதிகாரத்தினை ஒப்படைத்தல். கட்டு நிதிகளை விடுவித்தல்.
12. உள்ளூராட்சி மற்றும் மாகாண சபை அமைச்சின் மூலம் மானியத்தினைப் பெற்றுக் கொள்ளுதல்.
13. கட்டுநிதியினைத் தீர்த்தல்.
14. அரசின் வருமானத்தினைப் பணமனுப்பல் செய்தல் - (தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி, முத்திரைக்கட்டணம்).
15. நாளாந்த முதலீடு நிலையான வைப்பு முதலீடு.
16. வங்கிக் கணக்குத் தொடர்பான நடவடிக்கை (வங்கிக் கணக்கினை திறத்தல் மற்றும் காசோலையினைக் கையொப்பமிட அதிகாரத்தினைக் கையளித்தல்).

தகவல் அறியும் உரிமை சட்டத்தின் ஊடாக வடக்கு மாகாண திறைசேரியிடம் இருந்து பின்வரும் தகவல்கள் பெறப்பட்டதாக சென்ற ஆண்டு பத்திரிகையில் செய்தி ஒன்று வெளிவந்திருந்தது. அது கீழே தரப்படுகின்றது.

வடக்கு மாகாண சபையின் முதலாவது ஆட்சிக்காலத்தில் மத்திய அரசால் சுமார் 17 ஆயிரத்து 256 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாக வடக்கு மாகாண திறைசேரியிடம் இருந்து இந்தத் தகவல் பெறப்பட்டுள்ளது.

2013 ஆம் ஆண்டு மத்திய அமைச்சிடமிருந்து கிடைக்கப்பெற்ற கட்டு நிதியூடாக,

1. அபிவிருத்திக்கு 618 மில்லியன் ரூபாய்
2. பிரமாண கொடைக்காக 195 மில்லியன் ரூபாய்
3. பாடசாலைக் கல்வியை ஒரு அறிவு மையமாக பரிணாமம் பெறச் செய்யும் செயற்றிட்டத்திற்காக 310 மில்லியன் ரூபாயும்
4. யுனிசெப் திட்டத்தில் 188.05 மில்லியன் ரூபாயும்
5. 1000 பாடசாலை செயற்றிட்டத்திற்காக 28 மில்லியன் ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

2014 ஆம் ஆண்டு மத்திய அமைச்சிடமிருந்து கிடைக்கப்பெற்ற கட்டுநிதியூடாக,

1. அபிவிருத்திக்கு 908 மில்லியன் ரூபா
2. பிரமாண கொடைக்காக 1280 மில்லியன் ரூபாய்
3. பாடசாலைக் கல்வியை ஒரு அறிவு மையமாக பரிணாமம் பெறச் செய்யும் செயற்றிட்டத்திற்காக 286.47 மில்லியன் ரூபாயும்
4. சுகாதாரத்துறை அபிவிருத்திக்கு 180 மில்லியன் ரூபாயும்
5. யுனிசெப் 50.98 மில்லியன் ரூபாயும்
6. 1000 பாடசாலை செயற்றிட்டத்திற்காக 35 மில்லியன் ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

2015 ஆம் ஆண்டு மத்திய அமைச்சிடமிருந்து கிடைக்கப்பெற்ற கட்டுநிதியூடாக,

1. அபிவிருத்திக்கு 1440 மில்லியன் ரூபாய்
2. பிரமாண கொடைக்காக 400 மில்லியன் ரூபாயும்
3. பாடசாலைக் கல்வியை ஒரு அறிவு மையமாக பரிணாமம் பெறச் செய்யும் செயற்றிட்டத்திற்காக 335.61 மில்லியன் ரூபாயும்
4. சுகாதாரத்துறை அபிவிருத்திக்கு 355 மில்லியன் ரூபாயும்
5. யுனிசெப் 16.43 மில்லியன் ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

2016 ஆம் ஆண்டு மத்திய அமைச்சிடமிருந்து கிடைக்கப்பெற்ற கட்டுநிதியூடாக,

1. அபிவிருத்திக்கு 1800 மில்லியன் ரூபாயும்
2. பிரமாண கொடைக்காக 437 மில்லியன் ரூபாயும்
3. பாடசாலைக் கல்வியை ஒரு அறிவு மையமாக பரிணாமம் பெறச் செய்யும் செயற்றிட்டத்திற்காக 289 மில்லியன் ரூபாயும்
4. சுகாதாரத்துறை அபிவிருத்திக்கு 365 மில்லியன் ரூபாயும்
5. யுனிசெப் 7.81 மில்லியன் ரூபாயும்
6. அருகில் உள்ள பாடசாலை சிறந்த பாடசாலை 685.35 மில்லியன் ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

2017 ஆம் ஆண்டு மத்திய அமைச்சிடமிருந்து கிடைக்கப்பெற்ற கட்டுநிதியூடாக,

1. அபிவிருத்திக்கு 3620.50 மில்லியன் ரூபாயும்
2. பிரமாண கொடைக்காக 605.70 மில்லியன் ரூபாயும்
3. பாடசாலைக் கல்வியை ஒரு அறிவு மையமாக பரிணாமம் பெறச் செய்யும் செயற்றிட்டத்திற்காக 252 மில்லியன் ரூபாயும்
4. சுகாதாரத்துறை அபிவிருத்திக்கு 360 மில்லியன் ரூபாயும்
5. யுனிசெப் 7.81 மில்லியன் ரூபாயும்
6. அருகிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை ஆயிரத்து 153 மில்லியன் ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

(தொடரும்)



யாழ்.மாநகர சபை சமய விவகாரம் கலை பண்பாட்டுக் குழுவின் ஏற்பாட்டில் ராகஸ்வரம் கலைமன்றத்தின் ஆற்றுகைப் பிரிவான யாழ்.களரியின் போதை நீங்கிப் புது உலகில் பயணிப்போம் எனும் விழிப்புணர்வு நாடகம் பாசையூர், குருநகர் பகுதிகளில் மார்ச் முதலாம் இரண்டாம் திகதிகளில் 6 இடங்களில் ஆற்றுகை செய்யப்பட்டது. மக்களின் வரவேற்பைப் பெற்ற இந்த நாடக ஆற்றுகையை மாநகரசபை முதல்வர் இம்மானுவல் ஆனல்ட் மற்றும் ஆணையாளர் இ.த.ஜெயசீலன் மற்றும் மாநகரசபை உறுப்பினர்கள் ஆகியோர் ஆரம்பித்து வைத்தனர்.

# சித்த மருத்துவக் கண்காட்சி ஆரம்பம்





(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக சித்த மருத்துவ அலகும் வட மாகாண சுதேச மருத்துவத் திணைக்களமும் இணைந்து நடத்திய இரண்டாவது சர்வதேச சித்த மருத்துவ ஆராய்ச்சி மாநாடு மற்றும் கண்காட்சி என்பன நேற்று வியாழக்கிழமை காலை கைதடி சித்த போதனா வைத்தியசாலையில் ஆரம்பமானது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் கலந்து கொண்டு கண்காட்சியை நாடா வெட்டி ஆரம்பித்து வைத்தார். அத்துடன் நிகழ்வில் சுய ஆளுமை தொடர்பான இறுவெட்டு ஒன்றும் வெளியிட்டு வைக்கப்பட்டது. கண்காட்சி நிகழ்வில் சித்த மருத்துவத்துறை சார்ந்த பல் வேறு விடயங்கள் காட்சிப்படுத்தப்பட்டன. மேலும் நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக இந்து நாகரிகத் துறை பீடாதிபதி, வடக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளர், சுதேச மருத்துவத் திணைக்கள ஆணையாளர்கள், வைத்தியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். கண்காட்சி நிகழ்வை பாடசாலை மாணவர்களும் பார்வையிட்டிருந்தனர். இக் கண்காட்சி நாளை மறுதினம் 8 ஆம் திகதி வரை இடம் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-30)

# வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வீடுகளை நிர்மாணிக்க நடவடிக்கை

(கொழும்பு)

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் நிலவிய மோதல்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு புதிய நிரந்தர வீடுகளை நிர்மாணிப்பதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளன.

ஜனாதிபதி தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்திலே சமூக ஊக்குவிப்பு தோட்ட அடிப்படை வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் ஆறுமுகன் தொண்டமானால் இவ்விடயம் அமைச்சரவைக்கு முன்வைக்கப்பட்டது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் நிலவிய மோதல்களால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்காக புதிய தொழில்நுட்ப நிலையான குறைந்த செலவு (ஒரு வீட்டிற்கான செலவு இலங்கை ரூபாவில் 12 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய் வீதம்) 28 ஆயிரம் கொங்கிறீட் வீடுகளை நிர்மாணிப்பதற்கும் இதன் முதற் கட்டத்தில் 7000 வீடுகளை ஓடுகளுடனான வீடுகளாக அமைப்பதற்கு அமைச்சரவையால் இதற்கு முன்னர் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது.

இருப்பினும், எதிர்பார்த்த வகையில் திட்டத்திற்குத் தேவையான நிதியைப் பெற்றுக் கொள்ள முடியாமையின் காரணமாக ஆரம்பத்தில் 1000 வீடுகளை நிர்மாணிப்பதற்காக இலங்கை வங்கி ஊடாக காலத்திற்கேற்ற கடன் தொகையைப் பெற்றுக் கொள்வதற்காக திறைசேரியால் தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இதற்கமைவாக இந்தக் கடன் தொகையைப் பயன்படுத்தி 1000 வீடுகளை நிர்மாணிப்பதற்காக தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரரான **YAPKA Development (Pvt) Ltd** என்பவருடன் வர்த்தக ஒப்பந்தமொன்று தற்பொழுது கையெழுத்திடப்பட்டுள்ளதாகவும் 2020 பெப்ரவரி மாதம் 2 ஆம் திகதி சம்பந்தப்பட்ட திட்டப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டன என்பது குறிப்பித்தக்கது. (இ-7)

# பாடசாலைக்கு தளபாடங்கள் வழங்கல்



(யாழ்ப்பாணம்)

தேசிய சேமிப்பு வங்கி ஓய்வூதியர் சங்கத்தின் 25 ஆம் ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு நேற்று யா/செட்டித்தெரு மெ.மி.த.க.பாடசாலைக்கு மேசைகள், கதிரைகள் என்பன வழங்கப்பட்டன.

இதில் யாழ்.மாவட்ட சங்கத் தலைவர் இ.ராஜமகேந்திரசிங்கம், செயலாளர் எம்.பரமானந்தம், பொருளாளர் க.கமலசேகரம், யாழ்.2 ஆம் கிளை உத்தியோகத்தர்கள் பங்குபற்றினர். (இ)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1978 இந்து (சைவம்)
நட்சத்திரம்: பூரம் 3
கி.பா: செவ் 12 இல்
உயரம்: 158cm
தகைமை/தொழில்:க.பொ.த.உ.த. வெளிநாடு
எதிர்பார்ப்பு: படித்த பெண்
தொ.இ: B/10602

பிறப்பு: 1977 இந்து
நட்சத்திரம்: அத்தம் 4
கி.பா:13 செவ் 4 இல்
உயரம்:5'4"
தகைமை/தொழில்:க.பொ.த.சா.த. தோட்டம்
எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்
தொ.இ: B/10606

பிறப்பு:1985 இந்து
நட்சத்திரம்: உத்திரட்டாதி 4
கி.பா: 13 செவ் 6 இல்
உயரம்: 168cm
தகைமை/தொழில்: B.Sc.(Eng). Engineer
எதிர்பார்ப்பு: படித்த அழகான பெண்
தொ.இ: B/10607

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: பூசம் 1
கி.பா: செவ் 1 இல்
உயரம்:5'6"
தகைமை/தொழில்: க.பொ.த.உ.த.ரெலிகொம் நிறுவனத்தில் பணிபுரிகின்றார். (அமெரிக்கா)
எதிர்பார்ப்பு: படித்த பெண்
தொ.இ: B/10608

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம்: பரணி 3
கி.பா: ¾ செவ் 3 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்:தேசிய கல்வியியற் கல்லூரி ஆசிரியை
எதிர்பார்ப்பு:க.பொ.த.உ.த.அல்லது பட்டதாரி, அரச உத்தியோகம்.
தொ.இ: G/10601

பிறப்பு: 1983 இந்து (சைவம்)
நட்சத்திரம்: கேட்டை 3
கி.பா: செவ் 2 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: க.பொ.த.உ.த.
எதிர்பார்ப்பு: வெளிநாடு விரும்பத்தக்கது. அரச தனியார் தொழில்
தொ.இ: G/10603

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: அச்சுவினி
கி.பா: 12 ½ செவ் 2 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: பட்டதாரி., London Post office casier
எதிர்பார்ப்பு: லண்டன் மட்டும்
தொ.இ: G/10604

பிறப்பு: 1987 இந்து (சைவம்)
நட்சத்திரம்: ரோகினி
கி.பா: - செவ் 6 இல்
உயரம்: 5"
தகைமை/தொழில்: க.பொ.த.உ.த. யோகா டிகிரி. யோகா ஆசிரியை
எதிர்பார்ப்பு: சாதாரண உத்தியோகம்
தொ.இ: G/10605

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

## தேங்காய் விலை உயர்வைக் கட்டுப்படுத்தி

# மரக்கறி விலைகளைக் குறைக்க மகிந்த அரசாங்கம் விசேட திட்டம்



(கொழும்பு)

தேங்காய் விலை உயர்வைக் கட்டுப்படுத்துவதற்கு முறையான திட்டமொன்றை முன்னெடுக்க அரசாங்கம் தீர்மானித்தது. இது தவிர மஞ்சள் மற்றும் உழுந்து இறக்குமதிக்கான தடையை தற்காலிகமாக நீக்கவும் முடிவு செய்யப்பட்டது. பிரதமர் தலைமையில் நேற்று முன்தினம் அலரி மாளிகையில் அத்தியாவசிய பொருட்களின் விலைகள் தொடர்பான மீளாய்வுக் கூட்டத்திலேயே இந்தத் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

குருநாகல் பெருந்தோட்ட கம்பனி, சிலாபம் பெருந்தோட்ட கம்பனி மற்றும் தெங்கு பயிரிடும் சபை என்பன இணைந்து சதொச உள்ளிட்ட அரச நிறுவனங்களின் மேற்பார்வையின் கீழ், நிவாரண விலையில் பாவனையாளர்களுக்கு தேங்காய் வழங்கும் திட்டமொன்றை முன்னெடுக்கவும் இதன்போது முடிவு செய்யப்பட்டது.

உழுந்து மற்றும் மஞ்சள் இறக்குமதிக்கு தற்பொழுது விதிக்கப்பட்ட தற்காலிகத் தடையை நீக்கவும் பிரதமர் ஆலோசனை வழங்கினார்.

மீன், கோழி இறைச்சி, முட்டை விலைகள் குறித்தும் இதன்போது மீளாய்வு செய்யப்பட்டது. உள்ளூர் பால்மா உற்பத்திக்கான கட்டுப்பாட்டு விலையை நீக்கி சந்தைப் போட்டி அடிப்படையில் பாவனையாளர்களுக்கு பால்மா வழங்கவும் முடிவு செய்யப்பட்டது. மரக்கறி விலை உயர்வு பற்றியும் இங்கு கவனம் செலுத்தப்பட்டது. பொருளாதார மத்திய நிலையங்களினூடாகவும் சதொச ஊடாகவும் இதற்கென திட்டமொன்றை ஆரம்பிப்பது குறித்தும் ஆராயப்பட்டது.

பாவனையாளர்களுக்குப் பாதிப்பு ஏற்படுத்தும் வகையில் விலைகளை அதிகரிக்கும் அத்தியாவசியப் பொருட்களில் தட்டுப்பாட்டை ஏற்படுத்தும் தரப்பினருக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கை எடுக்குமாறும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ இதன்போது ஆலோசனை வழங்கினார். (இ-7)

# வீதியில் பியர் வெள்ளம்



(ஏறாவூர்)

மட்டக்களப்பு நகரில் பியர் மதுபானங்களை ஏற்றி வந்த வாகனத்தின் தட்டி தானாகத் திறந்து கொண்டதால் அவ்வாகனத்திலிருந்த பெருமளவிலான பியர் போத்தல்கள் தெருவில் விழுந்து உடைந்து நொறுங்கி பியர் வெள்ளமாகப் பரவியது.

இச்சம்பவம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை முற்பகல் இடம்பெற்றது. (இ-7)

# விபத்தில் ஒருவர் பலி;ஒருவர் படுகாயம்

(புத்தல)

புத்தல - விஜேரத்ண பாடசாலைக்கு அருகில் நேற்று முன்தினம் புதன்கிழமை பிற்பகல் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த வீதியில் பயணித்த மோட்டார் சைக்கிள்கள் இரண்டு ஒன்றுடன் ஒன்று நேருக்கு நேர் மோதி இந்த விபத்து இடம்பெற்றது.

விபத்தில் படுகாயமடைந்த மோட்டார் சைக்கிள் சாரதிகள் இருவரும் புத்தல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக சிறிகல வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

சிறிகல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்தது. புத்தல பகுதியைச் சேர்ந்த 42 வயதுடைய நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இவ்விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ஜ)

# இடிதாங்கி அமைக்க நன்கொடை

(குப்பிழான்)

இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தால் இளவாலை சேந்தாங்குளம், மாதகல் பகுதி மீனவர்களின் நன்மை கருதி சேந்தாங்குளம் கடற்கரையில் அமைக்கப்பட்ட "வெளிச்சவீடு" அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

இந்நிலையில் மேற்படி வெளிச்ச வீட்டுக்கு இடிதாங்கி அமைப்பதற்காக சிவன் அறக்கட்டளை ஸ்தாபகர் கணேஸ்வரன் வேலாயுதம் இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்திற்கு 50 ஆயிரம் ரூபாய் நிதியை அண்மையில் நன்கொடையாக வழங்கினார். (இ-18)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1995

**சுலோக்சனா**





**பிரதாஸ்**




**கணேஷ்வர்**

**டீச்சர்:** உங்க அப்பாவுக்கு வயது என்ன?
**பையன்:** ஆறு வயசாச்சு மிஸ்
**டீச்சர்:** ஆறு வயசா...? என்னடா உளறுறாய்...?
**பையன்:** நான் பிறந்த பிறகுதானே அவரு அப்பா ஆனாரு...!



**வானுஜா**




**பிரியந்தினி**




**துஷ்யந்தன்**




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# பெரும்பான்மைக்கும் அதிக ஆசனங்களுடன் பலமான அரசாங்கத்தை ஸ்தாபிப்போம்

## சுசில் சுட்டிக்காட்டு



**(கொழும்பு)**
**பொதுத் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன மூன்றில் இரண்டு பெரும்பான்மைக்கும் அதிக ஆசனங்களைப் பெற்று பலமான அரசாங்கத்தை ஸ்தாபிக்கும் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுசில் பிரேமஜெயந்த தெரிவித்தார்.**

கொழும்பிலுள்ள பொதுஜன பெரமுனவின் தலைமைக் காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன பாராளுமன்றத் தேர்தலில் கூட்டணியின் ஊடாகவே போட்டியிடும். பொதுத்தேர்தலில் பொதுஜன பெரமுனவால் 120 ஆசனங்களை தனித்துப் பெற முடியும். கூட்டணியில் இணைந்துள்ள கட்சிகளின் ஆதரவுடன் மூன்றில் இரண்டு பெரும்பான்மைக்கும் அதிக ஆசனங்களைப் பெற்றுக் கொள்ள முடியும்.

கட்சியின் உள்ளகப் பிரச்சினைகளுக்குத் தீர்வை பெற்றுக் கொள்ள முடியாத ஐக்கிய தேசிய கட்சியிடம் மக்கள் மீண்டும் ஆட்சியதிகாரத்தை ஒப்படைக்க மாட்டார்கள். வரலாற்றுப் பின்னணியைக் கொண்டுள்ள ஐக்கிய தேசிய கட்சியின் இன்றைய நிலைமை கவலைக்குரியன. கட்சியின் அடிப்படைக் கொள்கைகளுக்கு அப்பாற் சென்று செயற்படும் போது இவ்வாறான நிலைமைகளே தோற்றம் பெறும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# ஆறாயிரம் மில்லியன் ரூபாய் பெறுமதியான போதைப்பொருள் திக்கோவிட்ட துறைமுகத்தில்

(கொழும்பு)
தென் கடற்பிராந்தியத்தில் கடற்படையினர் மற்றும் பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினரால் கைப்பற்றப்பட்ட போதைப் பொருளுடன் சந்தேக நபர்கள் திக்கோவிட்ட துறைமுகத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

படகில் இருந்து சுமார் 400 கிலோகிராம் ஹெரோயின் மற்றும் சுமார் 100 கிலோகிராம் ஐஸ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டதாகக் கடற்படையினர் தெரிவித்தனர்.

கைப்பற்றப்பட்ட போதைப் பொருளின் பெறுமதி ஆறாயிரம் மில்லியன் ரூபாவாகும். இந்தப் போதைப்பொருட்களுடன் 28 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர்.

சந்தேகநபர்களில் பாகிஸ்தான் மற்றும் ஈரானிய பிரஜைகளும் அடங்குகின்றனர்.

கடந்த 14 மாதங்களுக்குள் கடற்படையினரால் 1162 கிலோகிராம் ஹெரோயின் 5000 கிலோகிராம் கேரளக் கஞ்சா என்பன கைப்பற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# கொழும்பில் களமிறங்குகிறார் சரத் வீரசேகர

(கொழும்பு)
எதிர்வரும் பொதுத்தேர்தலில் கொழும்பு மாவட்டத்தில் களமிறங்கவுள்ளதாக இராணுவத்தின் உரிமைகளைப் பாதுகாக்கும் அமைப்பின் தலைவர் ரியல் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்தார்.

கொழும்பு மாநகரசபை உறுப்பினர் பிரியங்க ஜெயசேகர நேற்று முன்தினம் கொழும்பில் கூட்டமொன்றை ஏற்பாடு செய்திருந்தார்.

இதில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர்,

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாட்டுக்காகப் பல செயற்திட்டங்களை மேற்கொண்டு வருகின்றார்.

இந்தச் செயற்றிட்டங்களை முன்னோக்கிக் கொண்டு செல்வதற்காக எதிர்வரும் பொதுத் தேர்தலில் கொழும்பு மாவட்டத்தில் போட்டியிடவுள்ளேன்.

அம்பாறை மாவட்டத்தில் பல பிரச்சினைகள் காணப்படுகின்றன. எனவே அங்கு போட்டியிடத் தீர்மானித்திருந்த போதும் அதைவிட அதிகமான பிரச்சினைகள் இருப்பதால் கொழும்பில் இங்கு களமிறங்கத் தீர்மானித்துள்ளேன் எனத் தெரிவித்தார். (இ-7)

# இரு ரஷ்ய கப்பல்கள் இலங்கை வருகை



(கொழும்பு)
ரஷ்யக் கடற்படையின் இரு கப்பல்கள் கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தன.

யரோஸ்லவு மட்ரி (Yaroslav Mudry) மற்றும் விக்டர் கோனெட்ஸ்கி (Victor Konetsky) ஆகிய கப்பல்கள் நேற்று முன்தினம் புதன்கிழமை கொழும்பிற்கு வந்த நிலையில் இலங்கைக் கடற்படையினரால் கடற்படை மரபுகளுக்கேற்ப வரவேற்பளிக்கப்பட்டது.

அதன்படி, இரு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பை அதிகரிக்கும் நோக்கில் இலங்கைக்கு வந்த இக்கப்பல்களின் கட்டளை அதிகாரிகளான கப்டன் விக்டர் வெசிலியேன்விச் கோஸ்ட்ரியுகோவ் (Victor Vasilyevich Kostriukov) மற்றும் கப்டன் மிகாயில் அலெக்ஸாண்ட்ரோவிச் (Mikchail Aleksandrovich) உட்பட அதிகாரிகள் மேற்கு கடற்படைக் கட்டளைத் தளபதி ரியர் அட்மிரல் சுமித் வீரசிங்கவை சந்தித்து இருதரப்பு விடயங்கள் குறித்து கலந்துரையாடினர். இந்த நிகழ்வைக் குறிக்கும் வகையில் நினைவுச் சின்ன பரிமாற்றமும் இடம்பெற்றது.

இந்தக் கப்பல்களில் வந்த அதிகாரிகள், இலங்கை கடற்படை ஏற்பாடு செய்கின்ற கலாசார நிகழ்வுகள் மற்றும் இலங்கையின் முக்கியமான இடங்களில் சுற்றுப் பயணங்கள் உள்ளிட்ட பல நிகழ்வுகளில் பங்கேற்க திட்டமிட்டுள்ளனர். (இ-7)

# செய்தித்துளிகள்

## திஸ்ஸவின் கட்சி தனித்துப் போட்டி

(யாழ்ப்பாணம்)
எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் யாழ்ப்பாணம், வன்னி, மட்டக்களப்பு ஆகிய தேர்தல் தொகுதிகளில் லங்கா சமசமாஜக் கட்சி சாவிச் சின்னத்தில் தனித்துப் போட்டியிடவுள்ளதாக அக்கட்சியின் செயலாளர் நாயகமும் வடமத்திய மாகாண சபை ஆளுநருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார். (இ-10)

## முன்பள்ளி விளையாட்டுப் போட்டி

(யாழ்ப்பாணம்)
லிற்றின் மாஸ்ரேங் மொண்டிசூரி முன்பள்ளிச் சிறார்களின் விளையாட்டுப் போட்டி நாளை மறுதினம் 7 ஆம் திகதி பிற்பகல் 2 மணியளவில் முன்பள்ளி மைதானத்தில் சமாதான நீதவான் கி.சதீஸ்குமார் தலைமையில் நடைபெறும்.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக சண்டிலிப்பாய் மொடேன் மற்றஸ் அக்கடமி நிர்வாகி பா.குகதாசன் கலந்து கொள்வார். (இ-2)

## சடலத்தைப் பொறுப்பேற்கவும்

(யாழ்ப்பாணம்)
இனங்காணப்படாத நிலையில் 03.03.2020 அன்று 55 வயது மதிக்கத்தக்க உயர்ந்த மெல்லிய தோற்றமுடைய நபர் யாழ்ப்பாணம் பேருந்து தரிப்பிடத்தில் விழுந்து கிடந்த நிலையில் 1990 இற்கு (பொதுமக்கள்) அறிவித்ததன் படி இரவு 7.30 மணிக்கு யாழ்.போதனா வைத்தியசாலையில் ஆபத்தான நிலையில் அனுமதிக்கப்பட்டார். இந் நிலையில் நேற்று முன்தினம் உயிரிழந்துவிட்டார். இவரின் சடலம் அடையாளம் காணப்படாத நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

எனவே குறித்த சடலத்திற்கு உரித்துடையவர் அடையாளம் காட்டி 15 தினங்களுக்குள் பெற்றுக் கொள்ளுமாறு யாழ்.போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் கேட்டுக் கொண்டுள்ளார். (இ)

## விசப் புகையால் பாதிப்பு 50 இற்கும் அதிகமான மாணவர்கள் வைத்தியசாலையில் அனுமதி

(வாரியபொல)
வாரியபொல நகரில் பிரபல பாடசாலை ஒன்றில் கல்வி கற்கும் 50 இற்கும் அதிகமான மாணவர்கள் விசப் புகையால் பாதிக்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

பிரதேச குப்பை பகுதி ஒன்றில் பரவிய தீயினைத் தொடர்ந்து ஏற்பட்ட விசப் புகை காரணமாக மாணவர்கள் இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளனர்.


குறித்த மாணவர்கள் வாரியபொல வைத்தியசாலையில் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர். (ஜ)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 100 | 90 | 100 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 100 | 120 |
| பச்சைமிளகாய் | 120 | 140 | 130 | 120 |
| தக்காளி | 140 | 140 | 100 | 140 |
| மரவள்ளிக்கிழங்கு | 100 | 110 | 80 | 100 |
| கோவா | 80 | 120 | 110 | 120 |
| கரட் | 150 | 200 | 180 | 240 |
| பூசணி | 80 | 80 | 60 | 100 |
| புடோல் | 100 | 100 | 80 | 100 |
| வாழைக்காய் | 60 | 80 | 80 | 100 |
| சின்ன வெங்காயம் | 200 | 240 | 260 | 200 |
| பெரிய வெங்காயம் | 180 | 160 | 250 | 200 |
| பாகற்காய் | 160 | 160 | 140 | 150 |
| வெண்டிக்காய் | 60 | 100 | 80 | 120 |
| கருணைக் கிழங்கு | 80 | 80 | 60 | 80 |
| பயற்றங்காய் | 100 | 100 | 70 | 120 |
| லீக்ஸ் | 150 | 200 | 200 | 160 |
| பீற்றூட் | 80 | 100 | 80 | 100 |
| கறிமிளகாய் | 100 | 120 | 120 | 120 |
| முருங்கைக்காய் | 400 | 400 | 200 | 400 |
| போஞ்சி | 140 | 120 | 110 | 160 |
| கத்தரிதம்புள்ள | 60 | – | 60 | 80 |
| கீரை - 1பிடி | 40 | 60 | 30 | 30 |
| தேசிக்காய் | 100 | 60 | 40 | 40 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 70 | 50 | 30-70 |
| இராசவள்ளி | 200 | 160 | 150 | 150 |
| வெங்காயப்பூ | 150 | 140 | 100 | 160 |
| முள்ளங்கி | 20 | 60 | 30 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 15 | 40 |
| வல்லாரை | 20 | 20 | 15 | 30 |
| ஈரப்பலா | – | – | 100 | 100 |




# சூரியகாந்தியின் கதை



ஒரு பூந்தோட்டத்தில் ஏராள மான வண்ணங்களில் பூக்கள் மகிழ்ச்சியாக பூத்துக் குலுங்கின. அவற்றில் மஞ்சள் வண்ணப் பூ மட்டும் அழுதபடியே இருந்தது. அதை சிரிக்க வைக்க, அம்மா மஞ்சள் செடி எவ்வளவோ முயன்றும் முடியவில்லை.

வளைக்குள் இருந்த எலி, மஞ்சள் பூவின் அழுகையால் உறக்கம் கலைந்து, வெளியே வந்து, "என்ன, உன் பூக்குட்டி இப்படி அழுது கொண்டிருக்கிறது..." என்று கேட்டது.

"என்ன காரணமோ தெரியவில்லை. நானும் எவ்வளவோ முயன்று பார்த்து விட்டேன் அழுகை நிற்கவேயில்லை" என்றது மஞ்சள் செடி.

"கவலைப்படாதே...உன் குழந்தையின் அழுகையை நான் நிறுத்துகிறேன்" என்று சொன்ன எலி, அங்கும் இங்கும் துள்ளிக் குதித்து வேடிக்கை காட்டியது.

சிறுசிறு கற்களை கைகளில் பிடித்து, கோமாளி போல நடித்து சிரிப்புமூட்ட முயன்றது. எலியின் சேட்டைகளால் பூக்குட்டியின் அழுகை அதிகரித்ததே தவிர, நிற்கவில்லை.

சோளக்கதிர்களின் மத்தியில் குடியிருந்த குருவி, பூக்குட்டியின் அழுகை கேட்டு ஓடி வந்தது.

"என்ன ஆச்சு... ஏன், உன் குழந்தை இப்படி அழுது..." என்று கேட்டது.

"குழந்தையை சமாதானம் செய்து பார்த்தாச்சு... இதோ, எலி அண்ணனும் எவ்வளவோ வேடிக்கை காட்டிட்டார். அழுகையை நிறுத்தமாட்டேங்குது"

"கவலைப்படாதே... பாட்டு ஒண்ணு பாடுறேன் என் குழந்தைகள் அழுதால், பாடியே தூங்க வைச்சுடுவேன்" என்று சொல்லி, பூக்குட்டியின் முன்னே, அங்குமிங்கும் பறந்தபடி பாடியது குருவி. ஆனால், குருவியின் பாட்டு எந்தப் பலனையும் கொடுக்கவில்லை. பூக்குட்டி மேலும் தீவிரமாக அழுதது.

அழுகைச் சத்தம் கேட்டு தூரத்திலிருந்த பச்சோந்தி ஓடி வந்தது.

"செடியக்கா... உன் பிள்ளைக்கு என்ன ஆச்சு... ஏன் இப்படி அழுது..." என்று அக்கறையோடு, கேட்டது.

"தெரியல்ல. பச்சோந்தி எலி, குருவி எல்லாரும் முயற்சி செஞ்சுட்டாங்க...அழுகை நின்றபாடில்லை. நீயாவது பூக்குட்டியின் அழுகையை நிறுத்த முயன்று பார்..."

"இதோ ஒரு நொடியில் உன் பிள்ளையின் அழுகையை நிறுத்திடுறேன்" என்று சொன்ன பச்சோந்தி, பூக்குட்டியின் முன்னே வந்து நின்றது.

"செல்லக்குட்டி... இதோ, என் உடல் நிறத்தை எப்படியெல்லாம் மாற்றிக் காட்டுறேன் பார்" என்று சொல்லி, தன் பச்சை நிறத்தை பழுப்பு நிறமாக மாற்றியது. அடுத்த நொடியே, ஒரேஞ்சு நிறத்துக்கு மாறியது. பின், அடுத்த நொடியே சிவப்பு நிறமாக மாற்றிக் காட்டியது.

ஆனால், என்ன பயன்... பச்சோந்தி, நிறத்தை மாற்றிக் கொண்டே இருந்ததுதான் மிச்சம். பூக்குட்டியின் அழுகை நின்றால் தானே... அதன் அழுகை சத்தம் மேலும் ஓங்கியது. அருகிலுள்ள தோட்டத்தில், வெள்ளரிக் காய் பறித்து சாப்பிட வந்த நரி, அழுகை கேட்டு ஓடி வந்தது.

"என்ன ஆயிற்று, உன் குழ்ந்தைக்கு. ஏன் இப்படி அழுது. தொடர்ந்து அழுகிறதே..." என்றது நரி.

அதே கதையை மீண்டும் சொல்லி, "நரி மாமா... நீங்களாவது, என் குழந்தையின் அழுகையை நிறுத்த முயற்சி செய்யுங்க..." என்று வருந்திக் கேட்டது செடி.

"நான், இந்தக் காட்டிலேயே சுற்றி வருபவன். என்னால் உன் குழந்தையின் அழுகையை நிறுத்த முடியும் என்று தோன்றவில்லை. அதோ கிழக்கு வானில் சூரியன் உதிக்கிறான். அவனை சுற்றித்தான், உலகம் வருகிறது அவனுக்கு நிறைய கதைகள் தெரியும். அவனிடம் கேட்டுப் பார். சூரியனால் நிச்சயம் பூக்குட்டியின் அழுகையை நிறுத்த முடியும்" என யோசனை சொன்னது, நரி.

மஞ்சள் செடிக்கும் நரியின் யோசனை சரியென்றே தோன்றியது. எலியும் குருவியும் ஆமோதித்தன.

"சூரியனே... வெகுநேரமாக, என் குழந்தை அழுகிறது. நீ ஏதேனும் கதை சொல்லி அழுகையை நிறுத்துவாயா" என்று கேட்டது, மஞ்சள் செடி.

"உன்குழந்தையின்அழுகையை நிறுத்துறேன். பதிலுக்கு நீ என்ன தருவாய்..." என்று கேட்டது சூரியன்.

"முதலில் குழந்தையின் அழுகையை நிறுத்து. பதிலுக்கு என்ன செய்வேன் என்பதை சொல்றேன்."

பூக்குட்டிக்கு கதை சொல்லத் துவங்கியது சூரியன் என்ன ஆச்சரியம்... பூக்குட்டி, அழுகையை நிறுத்தி, சூரியனை திரும்பிப் பார்த்து கவனிகத் துவங்கியது.

சூரியனும் நகைச்சுவையோடு கதையை தொடர்ந்தது. பூக்குட்டி ஆர்வத்துடன் கேட்டது் கதை, நீண்டு கொண்டே போனது. சூரியன் வானத்தில் நகர்ந்தபடியே கதை சொல்ல பூக்குட்டி முகத்தை திருப்பி சூரியனை பார்த்தபடியே கேட்டது.

கதை கேட்கும் சுவாரஸ்யத்தில் பூக்குட்டி, அழுகையை மறந்தது. சிறிது நேரத்தில் வாய்விட்டுச் சிரிக்கத் துவங்கியது. சிரிக்க சிரிக்க கதையை இனிமையாக சொன்னது சூரியன். காலையில் துவங்கிய கதை மாலை வரை நீண்டது.

மாலையில் சூரியன் மறையும் வேளை வந்தது. ஒருவழியாக கதையை முடித்தது சூரியன். மீதிக் கதையை மறுநாள் காலை சொல்வதாகவும் அதுவரை அழக் கூடாது என்று கேட்டுக் கொண்டது சூரியன்.

"நீ நாளை வரும்வரை நிச்சயம் அழமாட்டேன். நீ சொன்ன கதையை மீண்டும் மீண்டும் நினைத்துப் பார்த்துக் கொண்டிருப்பேன்" என்றது பூக்குட்டி.

சூரியன் மறைந்த பின் பூக்குட்டி அழவில்லை.

மறுநாளிலிருந்து பூக்குட்டிக்கு தினமும் கதை சொன்னது சூரியன். முகத்தை திருப்பி கதை கேட்டது பூக்குட்டி. சூரியனுக்கு நன்றி செலுத்தும் வகையில் மஞ்சள் செடி தன் குழந்தைக்கு "சூரிய காந்தி" என்று பெயர் சூட்டியது.

பூக்குட்டிக்கு, பல தங்கைகள் பிறந்தன. அவர்களும் சகோதரியைப் போல, மலர்ந்த முகங்களைத் திருப்பி, சூரியன் கூறிய கதைகளைக் கேட்டனர். சூரியன் மறைந்ததும் தூங்கி விட்டனர். இன்றும் அப்படித்தான் உள்ளனர்.

குட்டீஸ்...கவனத்தை ஒரு நிலைப்படுத்தினால் கவலை பறந்து போகும்!

## வழிகாட்டுங்கள்




## விடுகதைகளும் விடைகளும்

• நிலத்திலும் இருப்பான் நீரிலும் இருப்பான். வாலோடு பிறப்பான் வாலை இழப்பான். கை முளைக்கும் கால் முளைக்கும். கத்தலும் த்த்தலும் அதிகரிக்கும்.

**தவளை**

• ஒற்றைக்கால் கறுப்பனுக்கு எட்டுக் கை.

**குடை**

• கிண்ணம் போல் பூ பூக்கும் கிள்ளி முடிக்க முடியாது.

**ஊமத்தம் பூ**

• அம்மான் வீட்டுத் தோட்டத்திலே, பட்டாக்கத்தி தொங்குது.

**வாளவரங்காய்**

• அண்ணன் மத்தளம் கொட்ட, தங்கை விளக்குக் காட்ட, அம்மா தண்ணீர் தெளிக்கிறாள்.

**இடி, மின்னல், மழை**

• காலையில் கூவும் பட்சி கந்தன் கொடியில் காணும் பட்சி குப்பையைக் கிளறும் பட்சி கொண்டையை ஆட்டும் பட்சி.

**சேவல்**

• இரவும் பகலும் ஒய்வில்லை அவன் படுத்தால் எழுப்ப ஆள் இல்லை.

**இதயம்**

• இந்த ஊரிலே அடிபட்டவன் அடுத்த ஊரிலே போய்ச் சொல்கிறான்.

**தந்தி**

• எங்கள் ஆயாள் வீட்டுத் தோட்டத்திலே ஐந்து வாழை மரங்கள் - அவைகளை ஆட்டினாலும் ஆட்டலாம் பிடுங்க முடியாது.

**விரல்கள்**

• ஒரு முழ மூங்கிலில் ஒய்யார கீதம்.

**புல்லாங்குழல்**

## கீழே குறிப்பிட்ட ஆங்கிலச் சொற்களை கண்டுபிடித்து வட்டமிடுங்கள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| M | A | P | P | L | E | S |
| I | P | I | R | O | G | K |
| L | P | F | E | G | G | S |
| K | L | I | X | W | R | L |
| P | E | S | Y | Y | T | P |
| I | S | H | W | K | F | O |
| C | A | R | R | O | T | S |

FISH EGGS MILK
APPLES APPLES CARROTS

இந்த நாளை நம் நன்மைக்காக கடவுள் படைத்திருக்கிறார் என்று நினைத்துக் கொள்ளுங்கள் -தத்தானியேல்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## கருடபுராணம் கூறுகின்ற தண்டனையிலிருந்து விடுபட...

கருட புராணம் என்ற நூல் இப்பூவுலகில் பாவகாரியம் செய்பவர்களுக்கு யமலோகத்தில் கிடைக்கின்ற நரக வாழ்வு பற்றிப் பேசுகிறது.

பிறருக்கு உதவி செய்து இன்புற்று வாழ்கின்ற கிடைத்ததற்கரிய மானிடப் பேற்றை, அதர்ம காரியங்களுக்காகப் பயன்படுத்துவது மிகப்பெரும் பாவமாகும்.

அவ்வாறு பாவகாரியம் செய்தவர்களுக்கு நரகலோகத்தில் எத்தகைய தண்டனைகள் வழங்கப்படுகின்றன என்பது பற்றி கருடபுராணம் எடுத்தியம்புகிறது.

விக்ரம் நடித்த அந்நியன் திரைப்படத்தின் மூலக்கதை கருட புராணத்தில் இருந்து பெறப்பட்டது என்பது இங்கு புரிதற்குரியது.

பாவகாரியம் செய்த பின்பு அதற்கு நிவாரணம் கிடைக்கும் என்று மட்டும் யாரும் நினைத்துவிடாதீர்கள். செய்த பாவத்துக்கான தண்டனையை அனுபவித்தே ஆக வேண்டும்.

எனவே யாராக இருந்தாலும் பாவகாரியத்தை செய்யாதிருக்க வேண்டும்.

இதை நாம் கூறும்போது இஃது பத்திரிகைகளுக்கும் பொருந்துமா? என்று நீங்கள் யாரேனும் கேட்கலாம்.

அவ்வாறு கேட்டால், பத்திரிகைகளுக்குத்தான் இது மிகப்பொருந்தும்.

அதனால்தான் பத்திரிகை தர்மம் என்று நம்மவர்கள் கூறிவைத்தனர்.

பத்திரிகை தர்மத்தைக் கடைப்பிடிக்காவிட்டால் அது மக்களிடம் இருக்கக்கூடிய தர்மத்தையும் பரிநாசம் செய்துவிடும்.

எனவே பத்திரிகைகள் (ஊடகங்கள்) தர்மத்தைக் கடைப்பிடித்தால் அது மக்கள் சமூகம் தர்மத்தின் வழியில் இயங்குவதற்கு ஊந்துசக்தியாக அமையும்.

இவை ஒருபுறமிருக்க, பொதுத் தேர்தலுக்கான பிரசாரத்தில் தமிழ் அரசியல்வாதிகள் களமிறங்கியுள்ளனர்.

தேர்தல் பிரசாரத்தில் பொய்களும் புரட்டுக்களும் வதந்திகளும் தனிநபர் விமர்சனங்களும் தாராளமாக நடந்தேறும் என்பது அறியப்பட்ட உண்மை.

போலி வாக்குறுதிகள் வந்து சேரும். எல்லாவற்றையும் நம்பி மக்கள் வாக்களிப்பர் என்பதும் உண்மை.

ஆனால் நாம், தமிழ் அரசியல்வாதிகளிடம் விநயமாக வேண்டுவது; தமிழ் மக்களுக்காக அது செய்தோம். இது செய்தோம் என்று மட்டும் யாரும் சொல்லிவிடாதீர்கள்.

ஏனெனில் இது பொய் மட்டுமல்ல மகா பாவச் செயலும்கூட,

யுத்தம் முடிந்து 10 ஆண்டுகள் கடந்தும் தமிழ் மக்களுக்கு எந்த ஆறுதலும் கிடைக்கவில்லை. காலம் என்ற மருத்துவம் மட்டுமே இழப்புகளின் துயரத்தில் இருந்து தமிழ் மக்களை ஓரளவு ஆற்றுப்படுத்தியிருக்கிறது.

எனினும் ஆற்றுப்பட முடியாத அவலத்துக்கு காணாமல் போனவர்களின் உறவுகள் ஆளாகி உள்ளனர்.

இந்நிலையில் தமிழ் மக்களுக்காக நாம் பலவற்றைச் செய்தோம் என்று மட்டும் தமிழ் அரசியல்வாதிகள் சொல்லாமல் தவிர்க்க வேண்டும்.

இது கருடபுராணம் கூறும் மகாபாவத்துக்கான நரகலோகத் தண்டனையில் இருந்து விடுபடுவதற்காக நாம் கூறும் சிறு அறிவுரை.

### நலன்புரி நிலையங்களில் வாழ்வோருக்கு

# காணிகளை பெற்றுக் கொடுப்பதற்கு 21 மில்லியன் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது

### அங்கஜன் எம்.பி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் வாழும் மக்களுக்கு காணிகளைப் பெற்றுக்கொடுப்பதற்கு 32.5 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்ட நிலையில் 21 மில்லியன் ரூபாய் யாழ் மாவட்டச் செயலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக யாழ் மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழு தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அங்கஜன் இராமநாதன் தெரிவித்தார்.

பல வருடகாலமாக யுத்தத்தால் பாதிக்கப்பட்டு தமது இருப்பிடங்களுக்குச் செல்ல முடியாத மக்களை குடியேற்றும் நோக்கில் அமைச்சர் ஆறுமுகம் தொண்டமானிடம் நான் விடுத்த கோரிக்கைக்கு அமைய அமைச்சினால் குறித்த நிதி ஒதுக்கப்பட்டு குறித்த ஒரு பகுதி நிதி யாழ் மாவட்டச் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது

கடந்த காலங்களில் தென் இலங்கைக் கட்சிக்கு ஆதரவளித்த கூட்டமைப்பினர் தேர்தல் காலங்களில் மக்கள் அபிவிருத்தி எனக் கூறிக் கொண்டு நிதி ஒதுக்கீடுகள் இல்லாமல் அபிவிருத்தித் திட்டங்களை ஆரம்பித்தார்கள்

அவ்வாறு ஆரம்பிக்கப்பட்ட திட்டங்களில் ஒன்றாக வீட்டுத்திட்டம் உள்ளடங்குகிறது.

நான் யாழ் மாவட்ட அபிவிருத்தி குழுத் தலைவராகப் பொறுப்பேற்றதன் பின் யாழ் மாவட்ட மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள அபிவிருத்தித் திட்டங்களில் பெரும்பாலானவற்றிற்கு முழுமையான நிதி கிடைக்கப்பெற்றதோடு சில திட்டங்களுக்கு அரைவாசிக்கு மேல் நிதி வழங்கப்பட்டுள்ளது

அரசாங்கம் இடைக்கால வரவு செலவுத் திட்டத்தை நடைமுறைப்படுத்தும் நிலையில் முழுமையான நிதியினை வழங்க முடியாத நிலையில் நிலையான பாராளுமன்றம் அமைந்தவுடன் எஞ்சிய நிதியும் கிடைத்து விடும்

எமது மக்கள் நலத்திட்டங்கள் யாவும் நாட்டின் பிரதமர் மற்றும் ஜனாதிபதியின் பணிப்புரையின் கீழ் இடம்பெற்று வருவதால் கடந்த காலங்களைப் போல் மக்களை அசௌகரியப்படுத்தும் திட்டங்களாக அமையாது.

இந் நிலையில் யாழ் மாவட்டத்துக்கு வழங்கவென 28 ஆயிரம் வீடமைப்புத் திட்டங்களுக்கான அனுமதியும் கிடைக்கப்பெற்றுள்ளதுடன் வழங்கப்பட்டுள்ள வீட்டுத்திட்டப் பணிகள் நிறைவுக் கட்டத்தை எட்டியுள்ளது

ஆகவே எனது பயணம் மக்கள் அபிவிருத்தியை நோக்காகக் கொண்டதுடன் உசுப்பேத்து அரசியலும் தேர்தல் காலத் தமிழினக் கொள்கை அல்ல என அவர் மேலும் தெரிவித்தார். (ம-10)

## வலி.தெற்கு பிரதேச சபை 'சப்ரிகம' திட்டத்திற்கு ஆதரவு

(யாழ்ப்பாணம்)

"சப்ரிகம" நிறைவான கிராமத்திட்டத்தின் மூலம் அபிவிருத்தி செய்யப்படும் திட்டங்களுக்கு முன்னர் எதிர்ப்புத் தெரிவித்த வலி தெற்குப் பிரதேச சபை தற்போது ஆதரவு வழங்கியது

வலி.தெற்குப் பிரதேச சபையில் நேற்றைய தினம் இடம்பெற்ற விசேட அமர்விலே குறித்த தீர்மானம் எட்டப்பட்டது

சப்ரிகமத் திட்டத்தில் புனரமைக்கப்படுகின்ற வீதிகளில் மக்களின் முன்னிறுத்திய தீர்மானங்கள் கருத்தில் எடுக்கப்படவில்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு,ஐக்கிய தேசியக்கட்சி மற்றும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி ஆகியன முன்னர் எதிர்ப்புத் தெரிவித்தன.

இந் நிலையில் குறித்த திட்டம் தொடர்பில் தமிழ தேசிய மக்கள் முன்னணி வழங்கப்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள் மக்களுக்காக வழங்கப்பட்டமையால் எதிர்ப்புத் தெரிவிக்காமலே இருந்தது. இந்நிலையில் நேற்றைய தினம் இடம்பெற்ற விசேட அமர்வில் ஈழ மக்கள் ஜனநாயகக்கட்சி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த ஐவர் மட்டும் எதிர்ப்புத் தெரிவித்த நிலையில் பெரும்பான்மை ஆதரவோடு குறித்த திட்டத்தை நடைமுறைப்படுத்தவும் எதிர்காலத்தில் இவ்வாறான தவறுகள். இடம் பெறாமல் இருக்க வேண்டு மெனவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது (ம-10)

### தேர் வெள்ளோட்டம்

பருத்தித்துறை தம்பசிட்டி அருள்மிகு ஸ்ரீ மஹாமாரி அம்பாள் (பண்டாரி அம்மன்) தேவஸ்தானத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட சித்திரத் தேர் வெள்ளோட்ட விழா இன்று வெள்ளிக் கிழமை நண்பகல் 12.30 மணியளவில் நடைபெறவுள்ளது.

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பரா மரிப்பு வேலைகளுக்காக நாளை சனிக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை **யாழ்.பிரதேசத்தில்** நாவலர் வீதியில் கனகரட்ணம் சந்தியிலிருந்து நல்லூர் செட்டித்தெரு வரை, பாரதி வீதி, புறூடி வீதி, நொத்தாரிஸ் லேன், நல்லூர் குறுக்கு வீதி, கட்டுடை மானிப்பாய் வீதி, கட்டுடை, பிப்பிலி, காங்கேசன் துறை பிரதேசம், பெற்றோலியக் கூட்டுத்தாபன அலுவலகம், பெற்றோலியம் பம்ப் 'வுஸ், காங்கேசன்துறை கடற்படை முகாம், தெல்லிப் பழை வைத்தியசாலை, வீமன் காமம், வறுத்தலைவிளான், மயிலிட்டி, தையிட்டி, காங்கேசன்துறை SLNS Uththara, காங்கேசன்துறை கரிசன் 5 ஆவது பொறியியல் படை முகாம், மயிலிட்டி கரிசன் 5 ஆவது பொறியியல் படை முகாம், கரிசன் 5 ஆவது பொறியியல் படைமுகாம் (புதியது), பலாலி இலங்கை விமானப்படை முகாம், பலாலி விமான நிலையம், மயிலிட்டி மீன்பிடித்துறைமுகம், மயிலிட்டி மீன்பிடித்துறை முகம், பலாலி விமானப் படை ஓய்வுகாலவிடுதி, தெல்லிப்பழை புற்றுநோய் வைத்தியசாலை, பலாலி இராணுவத்தலைமைக் காரியாலயம் ஆகிய இடங்களிலும், **கிளிநொச்சி பிரதேசத்தில்** முத்துவிநாயகபுரத்திலும், **வவுனியா பிரதேசத்தில்** முகத்தாங்குளம் 2 ஆம் வட்டாரம் ஆகிய இடங்களிலும் **மன்னார் பிரதேசத்தில்** இசைமழைத்தாழ்வு, நரிக்காடு ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும்.

## வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

**சகிப்புத் தன்மையில் வலிமை மிகுந்தவள் பெண்தான். பெண்களால் அன்பைப் பிரிக்க முடியாது. பெருக்கத்தான் முடியும்.**

-காந்தியடிகள்

### அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

## நலன் தரும் திதிகளும் அவற்றின் பலன்களும்

**சதுர்த்தி திதி:** எமதருமன், விநாயகப் பெருமான் ஆகிய இருவரும் இந்தத் திதிக்கு அதிதேவதைகளாக இருக்கின்றனர்முற்காலத்தில் மன்னர்கள் பிற நாடுகளின் மீதான படையெடுப்புக்கு உகந்த நாளாக இதைத் தேர்ந்தெடுத்தனர். எதிரிகளை வெல்ல, விஷ சாஸ்திரம், நெருப்பு சம்பந்தமான காரியங்களை செய்ய உகந்த திதி இது. ஜாதகத்தில் கேது தோஷம் உள்ளவர்கள், மாதந்தோறும் வருகின்ற சங்கடஹர சதுர்த்தி தினத்தில் விநாயகரை வழிபடுவதன் மூலம் கேது தோஷம் நீங்கும்.

**பஞ்சமி திதி:** அனைத்து சுப காரியங்களையும் செய்யலாம். விசேஷமான திதி ஆகும் இது. குறிப்பாக சீமந்தம் செய்ய உகந்த திதியாகச் கருதப்படுகிறது. நீண்ட நாட்களாக இருக்கும் நோய்கள் தீர இத்திதியில் மருந்து உட்கொள்ளலாம். அறுவை சிகிச்சை செய்து கொள்ளலாம். விஷம் தொடர்புடைய பயங்கள் நீங்கும். இந்த திதிக்கு நாக தேவதைகள் அதிதேவதைகள் ஆகின்றனர். எனவே நாக வழிபாட்டுக்கு உகந்த திதி இது. நாக தோஷம் உள்ளவர்கள் இந்தத் திதியில் நாகர் சிலை பிரதிஷ்டை செய்து, வழிபட நாக தோஷம் நீங்கும். நாக பஞ்சமி விசேஷ தன்மை கொண்ட திதியாகும்.

**சஷ்டி திதி :** இந்த திதிக்கு அதிதேவதை கார்த்திகேயன் எனப்படும் முருகப்பெருமான் ஆவார். சஷ்டி என்றால் ஆறு என்பது பொருள். ஆறுமுகம் கொண்ட முருகனை வழிபடுவதன் மூலம் நன்மைகள் பெருகும். முருகனை சஷ்டி விரதம் இருந்து வேண்டிக் கொள்பவர்களுக்கு சகல நன்மைகள் ஏற்படும். நன்மக்கட் பேறு உண்டாகும். சிற்பம், வாஸ்து போன்ற காரியங்களில் ஈடுபடலாம். புதிய ஆபரணங்கள் தயாரிக்கலாம். புது வாகனம் வாங்கலாம். புதியவர்களின் நட்பை ஏற்படுத்திக் கொள்ளலாம். கேளிக்கைகளில் ஈடுபடலாம். புதிய பதவிகளை ஏற்றுக் கொள்ளலாம். (தொடரும்)

# வலயமட்ட பெண்களுக்கான வலைப்பந்தாட்டம் சகலதுறையிலும் கலக்கியது வரணி மத்திய கல்லூரி










தென்மராட்சி வலய பாடசாலைகளுக்கு இடையிலான வலைப்பந்தாட்டப் போட்டியில் வரணி மத்திய கல்லூரியின் 20 வயது 16 வயது பெண்கள் அணி சம்பியன் பட்டத்தை வென்றதுடன் 18 வயது பிரிவுப்பெண்கள் அணி இரண்டாம் இடத்தையும் பெற்றுக்கொண்டது. 20 வயதுப்பிரிவின் இறுதியாட்டத்தில் கொடிகாமம் திருநாவுக்கரசை வென்று தென்மராட்சி வலயம் சம்பியனானதுடன் 16 வயது பிரிவின் இறுதியாட்டத்தில் வீரசிங்கம் மத்திய கல்லூரியுடன் வென்று சம்பியனாகியது. மேலும் 18 வயது பிரிவின் இறுதியாட்டத்தில் மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியுடன் மோதி 18:16 என வீரசிங்கம் மத்திய கல்லூரி சம்பியன் பட்டத்தை வெல்ல இரண்டாம் இடத்தைப் பெற்றது வரணி மத்திய கல்லூரி பெண்கள் அணி. நேற்றைய பத்திரிகையில் 20 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவின் வலைப்பந்தாட்டப் போட்டியில் சாவகச்சேரி இந்துக்கல்லூரி அணி சம்பியனானது என பிரசுரமாகியிருந்தமை குறிப்பிடத்தக்க விடயமாகும். (க)

# சமபோஷா உதைபந்தாட்ட இறுதியாட்டத்தில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அணி




இலங்கை பாடசாலைகள் உதைபந்தாட்ட சம்மேளனத்தால் சமபோஷா நிறுவனத்தின் அனுசரணையுடன் "சம்போஷா வெற்றிக்கிண்ணம்" இற்காக நடத்தப்பட்ட 14 வயது பெண்களுக்கான தேசியமட்ட உதைபந்தாட்டத்தின் இறுதியாட்டத்திற்கு மகாஜனக் கல்லூரி அணி தெரிவாகியுள்ளது. குருநாகல் கவுசிகமுவ வித்தியாலயத்தை அரையிறுதி ஆட்டத்தில் எதிர்கொண்ட மகாஜன 3:1 என்ற கோல்கள் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப்போட்டிக்கு தகுதிபெற்றுள்ளது.

இதன் அரையிறுதியாட்டம் பதுளை மாவட்டத்தில் உள்ள வென்னப்புவ அல்பிரட் பிரிஸ் விளையாட்டு மைதானத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்றது. ஆட்டம் ஆரம்பமாகி ஒரு நிமிடத்தில் லயன்சிகா, எதிரணி பின்கள வீராங்கனைகளுக்குள்ளால் லாவகமாக பந்தை கொண்டு சென்று முதலாவது கோலை பதிவு செய்தார். மீண்டும் 10 ஆவது நிமிடத்திலும் லயன்சிகா இரண்டாவது கோலையும் அற்புதமாக பெற்றுக்கொடுத்தார். முதல்பாதி ஆட்டம் 2:0 என நிறைவு பெற்றது. இரண்டாவது பாதியாட்டம் விறுவிறுப்பாக ஆரம்பமாகியது. கவுசிகமுவ வித்தியாலயம் கோல் பெறும் முயற்சியில் சளைக்காது போராடியது. பலத்த போராட்டத்தின் மத்தியில் முதலாவது கோலை பதிவு செய்தது. விறுவிறுப்பாக ஆட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது மகாஜனவின் சஸ்மிதா 3 ஆவது கோலை பதிவு செய்து வெற்றியை ஸ்திரப்படுத்திக் கொண்டார். ஆட்ட நேர முடிவில் மகாஜன 3:1 என்ற கோல்கணக்கில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குச் சென்றது. காலிறுதிப்போட்டியில் பதுளை மத்திய கல்லூரியைச் சந்தித்த மகாஜன 8:0 என அபார வெற்றி பெற்றமை குறிப்பிடத்தக்கது. (க-60)

**அன்பு வாசகர்களே!**

உங்கள் பிரதேச விளையாட்டுச் செய்திகளை
Valampurisp@gmail.com அல்லது 076 636 3378 என்னும்
உங்களை உலகறியச் செய்யு நாம் தயார்







ஏழாலை சைவ மகாஜன வித்தியாலய மெய்வல்லுநர் திறனாய்வு நிகழ்வுகள் கடந்த 13 ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெற்றது. இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் கலந்து சிறப்பித்தார். மற்றும் முன்னாள் வடக்கு மாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன் கலந்து கொண்டு விளையாட்டு நிகழ்வுகளை ஆரம்பித்து வைத்தார். (க)

# தமிழ் மக்களை ஏமாற்றவும் தடம் மாற்ற...

விக்னேஸ்வரனால் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்த செய்தி குறிப்பிலேயே மேற்படி விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

இலங்கை சம்பந்தமாக ஐக்கிய நாடுகள் சபை வெளியிட்ட சில அறிக்கைகளையே ஒட்டுமொத்த தமிழ் மக்களுக்கு எதிராக கட்டவிழ்த்து விடப்பட்ட குற்றங்கள் சம்பந்தமாக நடாத்தப்பட்ட சர்வதேச, சுயாதீன விசாரணைகளின் அறிக்கைகள் என்று கூறி தமிழ் மக்களை ஏமாற்றப் பார்க்கின்றார் சுமந்திரன்.

இலங்கை சம்பந்தமான விசேட சர்வதேச குற்றவியல் மன்றமொன்றைக் கோராமலும் அல்லது இலங்கையை சர்வதேச குற்றவியல் மன்றத்திற்குப் பாரப் படுத்துமாறு கோராமலும், ஐக்கிய நாடுகளாலும் மற்றையோராலும் ஏற்கனவே வெளியிட்ட ,அறிக்கை களை வைத்து-ஊடக அறிக்கை களின்படி சுமந்திரன் சர்வதேச விசாரணையானது முடிவடைந்து விட்டது என்று தமிழர்களை நம்ப வைக்கப் பார்க்கின்றார்.

இது தவறானது. இலங்கை அரசினாலும் இலங்கையின் படையணியினராலும் தமிழ் மக்களுக்கு எதிராக இயற்றப்பட்ட பாரிய கொடூரச் செயல்கள் சம்பந்தமான நீதி நியாயத்தை மேற்படி அறிக்கைகள் பெற்றுக் கொடுக்கவில்லை.

இவ்வறிக்கைகள் தமிழ் மக்களுக்கு எதிராக இயற்றப்பட்ட பாரிய கொடூரச் செயல்களை ஆவணப் படுத்தி உள்ளன. ஆனால் இவ்வறிக்கைகளில் குறிப்பிடப்பட்டவர்கள் சம்பந்தமாக எந்தவித நடவடிக்கைகளும் இது காறும் எடுக்கப்படவில்லை என்பதே உண்மை. குறித்த ஐக்கிய நாடுகள் அறிக்கைகளை சர்வதேச விசாரணையின் முடிவுகளே என்று சுமந்திரன் சித்திரிக்கப்பார்க்கின்றார். இவ்வாறான செயலால் சுமந்திரன் தமிழ் மக்களைத் தடம் மாற்ற முயன்றிருக்கின்றார். தமிழ் மக்கள் நீதியைப்பெற வேண்டுமானால் மேற்படி அறிக்கையில் குறிப்பிட்டு குற்றஞ்சாட்டப்பட்டுள்ளோர் சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் முன்னிலையிலோ இலங்கைக்கான ஒரு விசேட சர்வதேச குற்றவியல் தீர்ப்பு மன்றம் முன்னிலையிலோ பாரப்படுத்தப்பட்டு நீதிபாற்பட்ட விசாரணைக்குள்ளாக்கி தண்டிக்கப்பட வேண்டும்.

தமிழ் மக்கள் கூடிய மதிப்புடனும் தொழில்சார் மாண்புடனும் கையாளப்பட வேண்டும். சுமந்திரனும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் இவ்வாறான கருத்துக்களை வெளியிடும் போது அவற்றின் ஒரே குறிக்கோள் தமிழ் மக்களைத் தடம்புரளச் செய்வதும் ஏமாற்றுவதுமேயாகும் என்றே கொள்ள வேண்டியுள்ளது.

**உண்மை இதோ!**

நடந்தவற்றைக் கூறி தரவுகளைச் சேகரித்திருந்தன ஐக்கிய நாடுகளின் இரு அறிக்கைகளும். எனினும் அம் முயற்சி முடிவடையவில்லை. பாதிக்கப்பட்டவர்களின் வாக்குமூலங்கள் பதியப்படவில்லை. தாம் குறிப்பிடும் குற்றங்களைப் புரிந்தமைக்கு யார் பொறுப்பு என்று கூறி தமது பரிந்துரைகளைப் பதியவில்லை. இறுதியாக, நீதியைப் பெறத் தாம் எடுக்கும் முயற்சிகள் ஒரு செயற்பாட்டின் முதல் படியே என்று குறித்த அறிக்கைகளே ஏற்றுக் கொண்டுள்ளன.

குறித்த ஐக்கிய நாடுகளின் அறிக்கைகள் உண்மையில் கூறும் சில விடயங்கள் பின்வருமாறு.

**1.டாருஸ்மான்** அறிக்கை எனப்படும் இலங்கையில் பொறுப்புக்கூறல் சம்பந்தமான செயலாளர் நாயகத்தின் நிபுணத்துவக் குழாமின் 2011ம் ஆண்டிற்கான அறிக்கையின் 1ஆ பரிந்துரையின் ஒரு பகுதி பின்வருமாறு.

செயலாளர் நாயகமானவர் உடனே ஒரு சுயாதீனமான சர்வதேச பொறிமுறையைச் செயற்படுத்த வேண்டும். அதன் ஆணைக்குட்பட்டு பின்வரும் ஒருங்கியல்பான நடவடிக்கைகள் இடம்பெற வேண்டும்.

i. குற்றஞ்சாட்டப்பெற்ற உரித்து மீறல்களை எந்தளவுக்கு இலங்கை அரசாங்கமானது உண்மையாக விசாரிக்கின்றது என்பது உள்ளடங்கலாக உள்நாட்டுப் பொறுப்புக்கூறல் செயற்பாட்டை இலங்கை அரசு எப்படி வழிநடத்துகின்றது என்பது பற்றி கண்காணித்து மதிப்பிட்டு காலத்துக்குக் காலம் செயலாளர் நாயகத்திற்கு தமது கண்டுபிடிப்புக்களைத் தெரியப்படுத்த வேண்டும்.

ii. குற்றஞ்சாட்டப்பட்ட உரித்து மீறல்கள் ச்ம்பந்தமாக சுயாதீனமாக விசாரித்தறிவது.

அதன் போது நம்பத்தகுந்த மற்றும் நற்பலன் அளிக்கின்ற உள்ளக விசாரணைகளும் கவனத்திற்கு எடுக்கப்பட வேண்டும்.

**2. பெட்ரீ** அறிக்கை எனப்படும் 2012ம் ஆண்டின் இலங்கையில் நடந்த ஐக்கிய நாடுகள் செயற்பாடுகளின் செயலாளர் நாயகத்தின் உள்ளக மதிப்பீட்டுக் குழாமின் அறிக்கையில் யுத்தம் முடிவுக்கு வந்த காலத்தில் நடைபெற்ற நிகழ்வுக்ள் பல பற்றி குறிப்பிடப்பட்டுள்ளன. ஆனால் அதன் செயல் நோக்கம் ஐக்கிய நாடுகள் தான் செய்த தவறுகளை உணர்ந்து தம்மைத் திருத்திக்கொள்ளுவதேயாகும். பெட்ரீ அறிக்கையின் 82ஆவது பந்தியில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

நடைபெற்ற நிகழ்வுகளைக் கணிப்பதும் அவை சம்பந்தமாக ஐக்கிய நாடுகள் இலங்கையில் எடுத்த நடவடிக்கைகளை மதிப்பீடு செய்வதும் குழாமின் ஆணைக்கு அப்பாற்பட்டன. எனினும் ஒன்று தெட்டத்தெளிவாகத் தெரிகின்றது. அதாவது நடைபெற்ற கொடூரமான உரிமை மீறல்கள் சம்பந்தமாக நடவடிக்கை எடுக்காமல் அத்துடன் இலங்கையின் பல்வேறு இனங்களின் அபிலாஷைகளுக்கு அரசியல் ரீதியான தீர்வினைப் பெறாமல் நிரந்தர சமாதானமும் ஸ்திரத்தன்மையும் உதயமாகா. போருக்குப் பின்னரான மற்றும் முன்னேற்றம் சம்பந்தமான பொறுப்பினை ஐக்கிய நாடுகள் இலங்கையில் முடிவுறுத்த இவ்வாறான அடிப்படை எதிர்பார்ப்புக்களுக்கு முகம் கொடுக்க வேண்டியிருக்கும். எனவே பொறுப்புக்கூறலுக்கான நிபுணர்கள் குழாமால் வெளியிடப்பட்ட பரிந்துரைகளை நடை முறைப்படுத்த ஐக்கியநாடுகள் தொடர்ந்து நடவடிக்கைகளை எடுத்து வர வேண்டும்.

தமிழ் மக்கள் போலிச் செய்திகளை அடையாளம் காணக்கூடியவர்கள். சுமந்திரன் குறிப்பிடும் ஐக்கிய நாடுகள் அறிக்கைகளில் கூட ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகத்தின் தலைமைத்துவத்தின் கீழான முழுமையான விசாரணை நடைபெற்ற பின்னரே சர்வதேச நீதித்துறை செயற்பாடுகளை ஆயத்தப்படுத்த முடியும் என்றும் தமிழ் மக்களின் அபிலாஷைகளை பூர்த்தி செய்ய முடியும் என்றும் கூறப்பட்டுள்ளது. உள்ளக பொறிமுறைகள் நீதியை நிலைநாட்டா என்றும் இலங்கையின் இராணுவப் பணியாளர்களின் குற்றங்களை மதிப்பீடு செய்ய சர்வதேச நீதித்துறைச் செயற் பாடுகளே பொருத்தம் என்றும் தமிழ் மக்கள் கூறியுள்ளார்கள்.

ஒருவேளை எந்தவொரு ஐக்கியநாடுகளின் அலகும் சவேந்திர சில்வாவை எந்தவொரு குற்றத்துடனும் தொடர்புபடுத்தவில்லை என்ற இலங்கை அரசாங்கத்தின் அங்கலாய்ப்புக்கு பதில் கூறும் வகையில் மர்சூகி டாருஸ்மா னுடன் சுமந்திரன் நடத்திக் கொண்ட கலந்துரையாடல்கள் அமைந்ததாகக் கருதலாம் என்றார். (ம)

# ஆட்சியமைத்தால்...

இரண்டு தினங்களுக்கு முன்னர் நியமனக்கடிதங்களை அனுப்பியிருந்தது. அரசாங்கம் வாக்குறுதியளித்த காலத்துக்குள் நியமனம் வழங்கியிருந்தால் தேர்தல் ஆணையாளர் இடைநிறுத்தியிருக்கமாட்டார்.

அத்துடன் பாராளுமன்ற தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்திக்கு ஆட்சியமைக்கும் அதிகாரம் வழங்கப்பட்டால் அனைத்து பட்டதாரிகளையும் 3மாதத்துக்குள் அரசதுறையில் நிரந்தர நியமனம் வழங்குவேன் என ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் தலைவரும் முன்னாள் எதிர்க்கட்சி தலைவருமான சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

வேலையற்ற பட்டதாரிகளுக்கு வழங்கப்படும் நியமனங்கள் இடைநிறுத்தப்பட்டுள்ளமை தொடர்பாக கொழும்பில் அமைந்துள்ள முன்னாள் அமைச்சர் கபீர் ஹாசிமின் இல்லத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார். (ம)

# 6ஆயிரம் மில்லி...

காணிப்பு கப்பல்களான இலங்கை கடற்படை கப்பல் சமுதுர மற்றும் சயுரல ஆகியவற்றை ஒரு மாத கால நடவடிக்கைக்கு அனுப்பியது.

அப்போது இலங்கையின் தெற்கு கடல் பகுதியில் ஹெரோயின் என்று சந்தேகப்படுகின்ற சுமார் 75 கிலோ போதைப்பொருட்களும் ஐஸ் என்று சந்தேகப்படுகின்ற சுமார் 66 கிலோ போதைப் பொருட்களும் கடத்தி சென்ற இரண்டு இலங்கை மீன்பிடி படகுகள் மற்றும் நான்கு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். (ம)

# பட்டதாரிகளின்...

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஊடகவியலாளர்களிடம் நேற்று தெரிவித்தார்.

நியமனங்கள் ஏற்கெனவே செய்யப்பட்டுள்ளன, நாங்கள் பட்டதாரிகளை பயிலுநர்களாகவே அழைத்துள்ளோம் என்று தெரிவித்த ஜனாதிபதி, பொதுச் சேவையில் அனைத்துப் பயிற்சியும் இந்த சூழ்நிலையில் நிறுத்தப்பட வேண்டும் என்றும் சுட்டிக்காட்டினார்.

எனவே இந்த விடயம் தொடர்பில் நாம் தேர்தல் ஆணைக் குழுவின் உறுப்பினர்களை நேரில் சென்று சந்தித்துக் கலந்துரையாடவுள்ளோம் என்று கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார். (ம)

# சர்வதேச நீதிமன்றில் இலங்கையை...

யில் அங்கம் வகிக்கும் நாடுகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று இலங்கை தமிழரசுக்கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா தெரிவித்தார்.

இலங்கை தமிழரசுக் கட்சியின் யாழ்ப்பாணத்திலுள்ள தலைமை அலுவலகத்தில் நேற்று ஐக்கிய நாடுகள் சபை பிரதிநிதிகளுடன் இடம்பெற்ற சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இச் சந்திப்பு தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில்,

இலங்கையில் இறுதிப்போரின் போது நடைபெற்ற இன அழிப்பு நடவடிக்கைகள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைக்கு வழங்கப்பட்ட முறைப்பாடுகளுக்கு அமைய சர்வதேச நீதிமன்றில் இலங்கையை முன் நிறுத்தி விசாரணை மேற்கொள்ள வேண்டும். இதற்கு மனித உரிமைப் பேரவையில் இலங்கையுடன் இணைந்து பிரேரணைகளை கொண்டுவருவதற்காக செயற்பட்ட நாடுகளே செயற்படவேண்டும்.

இலங்கையில் இடம்பெற்ற போர்க் குற்றச்சாட்டுகள் தொடர்பில் பல்வேறு முறைப்பாடுகள் யுத்தம் முடிவடைந்த காலம் முதல் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவை உட்பட்ட அமைப்புக்களுக்கு முன்வைக்கப்பட்டுள்ளன.

குறித்த முறைப்பாடுகள் தொடர்பில் நேரடியாக கள ஆய்வினை மேற்கொண்டிருந்த முன்னாள் மனித உரிமைகள் பேரவை ஆணையாளர் நவநீதம்பிள்ளை உட்பட பல விசாரணை அறிக்கைகள் ஐ.நா.மனித உரிமைப் பேரவைக்கு கையளிக்கப்பட்டிருக்கின்றன. எனவே அவற்றை ஆவணமாகக் கொண்டு இந்த விசா ரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்றார். (ம)

அத கோடிபதி ADA KOTIPATHI
சீட்டிழுப்பு இல: 903
வர்ணம் : நீலம்
சீட்டிழுப்பு திகதி: 2020.03.05
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 54,352,380/-
வெற்றி இலக்கங்கள் 14 25 43 68 Y

ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1653 சீட்டிழுப்பு திகதி 05/03/2020
வெற்றி இலக்கங்கள் 03 13 38 46 T
ரூ. 47,957,880

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1138
சீட்டிழுப்பு திகதி 05.03.2020 வியாழக்கிழமை
Q 19 29 58 72
5795
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.98,819,640

ராசி அதிர்ஷ்டம்
திகதி 05.03.2020 வெற்றி வாரம் 2789 வர்ணம் கபிலம்
வெற்றி இலக்கங்கள் துலாம் 34 40 47 55
வெள்ளிக் கிழமை வெற்றிப் பொதி ரூ. 2,809,668
ரூ.500 பரிசுக்குரிய 8807
ரூ.100 பரிசுக்குரிய 367
டபுள் சான்ஸ் விசேட இல.
06.03.2020 ம் திகதி வெள்ளிக் கிழமை கருநீலம் நிற டிக்கட்டுக்களாகும்

வாசனா சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 1585 திகதி 2020/03/05
ஆங்கில எழுத்து Q வெற்றி இலக்கங்கள் 10 15 55 73

மஹஜன சம்பத
திகதி 2020/03/05
சீட்டிழுப்பு இலக்கம் 4128
A 3 8 0 5 8 3

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள் NLB
சீட்டிழுப்பு திகதி 05-03-2020
சீட்டிழுப்பு இலக்கம் 2412
G 10 34 74 80

நீரோகா
திகதி 05/03/2020
சீட்டிழுப்பு இலக்கம் 671
மகரம் 03 14 24 64

## சாவகச்சேரியில்...

வெளிநாடுகளுக்கான துரித தபால் பொதிகள் சேவை

லண்டன் - 540/=
ஜேர்மனி - 640/=
இத்தாலி - 690/=
கனடா - 950/=
நெதர்லாந்து - 690/=

சலுகை அட்டை (Discount Card)
பெற வேண்டும் எனும் நிபந்தனை இல்லை.



076 443 1576

## அருள்

இல.01, தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. (C-9381)



## வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு

021 221 7603, 021 567 1532



## நெஞ்சார வாழ்த்துகின்றோம்

உயர்திரு.

### துரைச்சாமி வாமதேவன்



வளையா நேர்மையும் மழுங்கா நீதியும்
துஞ்சா மனத் திறனும்
என்றும் வழுவாதிருக்கும்
சீமான் துரைச்சாமி வாமதேவன்
தனைச் சூழ்ந்த
அகில இலங்கைச் சமாதான நீதவான்
எனும் சிறப்பு சாலப்பொருத்தமே
இச் சேவையில் குன்றாத இளமையும்
கழுபிணியிலா உடலும் பெற்று
மற்றவர் மனம் நிறை சேவை செய்ய
அராலி மத்தி
வண்ணப்புலம் சிவனை
வணங்கி வாழ்த்துகிறோம்.

ந.யாதவகுலசிங்கம் குடும்பம் (C-9423)



## புதிய பாடநெறிகள் ஆரம்பம் 07.03.2020

### பாடநெறிகள்

### DIPLOMA IN ENGLISH

சனி, ஞாயிறு தினங்களில் காலை 10.30 - 1.00 வரை

**BUSINESS_ENGLISH / #ADVANCED_DIPLOMA_IN_ENGLISH**

சனி, ஞாயிறு தினங்களில் காலை 9.00 மணி தொடக்கம் 11.00 வரை நடைபெறும் 04 மாத கால பாடநெறி

### IELTS (Academic /General)

சனி, ஞாயிறு தினங்களில் மாலை 3.00 மணி தொடக்கம் 5.30 வரை நடைபெறும் பாடநெறி.

**E-CITY COLLEGE is official IELTS registered center for British Council**

### IELTS LIFE SKILLS A1

திருமணம் புரிந்தவர்கள் UK செல்வதற்காக வழங்கப்படும் பாடநெறி மற்றும் பரீட்சை
சனி, ஞாயிறு தினங்களில் காலை 10.30 - 01.00 வரை

### Diploma in Computer Office Management

சனி, ஞாயிறு தினங்களில் நடைபெறும் 6 மாத கால கணனிப் பாடநெறி ஆகும்.

**E-CITY is a TVCE registered institution.**

### E-CITY COLLEGE OF ENGLISH & IT SKILLS DEVELOPMENT

இல. 320/3, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

Tel : 0212217106 / 0773400418
0770615242 / 0774924166

web: www.ecitycollege.lk (C-9419)



## English

Diploma / Spoken Eng

### British college

of higher studies

0212224550 / 0761380212
Slramplyady lane,
Stanley road, Jaffna (C-9409)



## வேலைவாய்ப்பு

உலகளாவிய ரீதியில் இயங்கிவரும் Best one நிறுவனமானது யாழ்ப்பாணம் மற்றும் மன்னாரில் ஆரம்பிக்கப்பட்டுள்ள புதிய கிளைகளுக்கு 20ற்கு மேற்பட்ட பணியாளர்கள் தேவைப்படுகின்றனர்.

- களஞ்சியப் பொறுப்பாளர்
- விற்பனையாளர்
- மேற்பார்வையாளர்
- முகாமையாளர்

மேற்குறிப்பிட்ட பதவிகள் பூர்த்தி செய்யப்படவுள்ளது. O/L அல்லது A/L படித்தவர்கள் விண்ணப்பிக்கலாம். 0768082241 (Jaffna), 0767526757 (Mannar)


## யாழ்ப்பாணத்தில் வாள்களுடன் இருவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - பண்ணை முருகமூர்த்தி பகுதியில் கடந்த 26ம் திகதி கடை ஒன்றிற்குள் புகுந்து சேதம் விளைவித்தமை மற்றும் வீரகாளி அம்மன் கோயில் பகுதியில்முச்சக்கர வண்டி ஒன்றினை அடித்துடைத்து சேதம் விளைவித்தனர் என்ற குற்றச்சாட்டில் இருவர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவர்களிடம் இருந்து 2 வாள்கள், மற்றும் மோட்டார் சைக்கிள் என்பனவும் கைப்பற்றப் பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட நபர்களை இன்று யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

அத்துடன்மேலும் நான்கு பேர் கைது செய்யப்பட வேண்டியுள் ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம)


## ஓலைச்சுவடி சோதிட நிலையம்

உலகப் புகழ்பெற்ற தமிழ்நாடு வைத்தீஸ்வரன் கோவில் இந்தியாவில் இருந்து ஓலைச்சுவடி மூலம் பார்க்கப்படும். உங்களுடைய எதிர்காலப் பலன்கள், ஆரோக்கியம், கல்வி, திருமண வாழ்க்கை, ஆயுள் தீர்க்கம், உத்தியோகம், வெளிநாட்டுப் பலன்கள், முற்பிறப்பு, இப்பிறப்பில் தடைகள் ஏற்பட்டால் அவைகள் விலக நிவர்த்தி பரிகாரங்கள் மற்றும் எதிர்கால பலன்களைத் தெரிந்து கொள்ள... சுபம்

தொடர்புகளுக்கு:- ஓலைச்சுவடி சோதிட நிலையம்
கைலாச பிள்ளையார் கோவிலுக்கு அருகாமையில் (2476)
பண்டாரிக்குளம், வவுனியா. 076 328 7119



## மதுரம் கல்வி நிறுவனம்
## MATHURAM INSTITUTE

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை மாணவர்களுக்கான

சுற்றாடல்

### செயற்பட்டு துலங்கும் கற்றல் முகாம்

இடம் :- மதுரம் கல்வி நிறுவனம்
(கணேஸ் கலையரங்கம், டச்சு வீதி, கோப்பாய் தெற்கு)
காலம் :- 09.03.2020 திங்கட்கிழமை காலை 8.00 - 12.30மணிவரை
வளவாளர்கள்:- திரு.து.கிருபாகரன் (ஆசிரிய ஆலோசகர் - தீவக வலயம்),
திரு.வே.சிவப்பிரகாசம் (ஆசிரியர் - வித்தியாரம்)

- இது ஒரு செயன்முறையுடன் கூடிய விளக்கம், மல்ரிமீடியா மூலம் வழங்கப்படும் என்பதால் ஒரு பிரிவில் 50 மாணவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவர்.
- பெற்றோர்களே! புதிய பாடத்திட்டத்துக்கு அமைவாக வடிவமைக்கப்பட்ட செயற்பட்டு துலங்கும் கற்றல் முகாமில் உங்கள் பிள்ளைகளை பங்குபற்ற வைப்பதன் மூலம் (புலமைப்பரிசில் பரீட்சைக்கான) சுற்றாடல் சார் அறிவை 100% மேம்படுத்த முடியும்.

**கணிதம், தமிழ் ஆகிய முகாம்களும் மிக விரைவில்.**

**அரிய சந்தர்ப்பம்** தவறவிடாதீர்கள்

செயலட்டை, கற்றல் கையேடு என்பன வழங்கப்படும். (2489)

முற்பதிவுகளை உடன் மேற்கொள்ளுங்கள்
தொடர்புகளுக்கு:- 0779122918, 0212231220
கட்டணம் 200/= மட்டுமே


## மரண அறிவித்தல்

பிறப்பு 20 - 05 - 1963



இறப்பு 29 - 02 - 2020

### விசாகரத்தின ஐயர் லோகேந்திரன் (லோகி)

தொண்டைமானாறு செல்வச்சந்நிதியை பிறப்பிடமாகவும் கனடா மொன்றியலை வசிப்பிடமாகவும் கொண்ட விசாகரத்தின ஐயர் லோகேந்திரன் (லோகி) அவர்கள் 29.02.2020 சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற விசாகரத்தின ஐயர் (முன்னாள் பிரதமகுரு - செல்வச்சந்நிதி ஆலயம்) - சிவநேசம்மா தம்பதியரின் அன்பு மகனும் கந்தசாமி - தங்கேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும் திலகவதியின் அன்புக் கணவரும் மதுஷனின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற நாகேந்திரன் மற்றும் தெய்வேந்திர ஐயர் (பிரதம குரு - செல்வச்சந்நிதி ஆலயம்), காலஞ்சென்ற தேவாம்பிகை மற்றும் இராசேந்திர ஐயர் (கனடா), விமலாம்பிகை (கனடா), விஜேயந்திரன் (கனடா), யோகேந்திரன் (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் எதிர்வரும் 08.03.2020 ஞாயிற்றுக்கிழமை கனடா மொன்றியலில் நடைபெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்புகளுக்கு
லோ.திலகவதி, லோ.மதுஷன்
0015149636110 (2492)

தகவல்:- வி.தெய்வேந்திர ஐயர்
(பிரதமகுரு, செல்வச்சந்நிதி ஆலயம்)
சகோதரர்

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.03.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.